திசைகள்

PP19723/10/2022(035349)

THISAIGAL வாய்மையின் வழிகாட்டி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ ஆண்டு ஐப்பசி மாதம் ஹிஜிரி 1447 முஹர்ரம்

Weekly Edition - NOVEMBER 2026 - RM 3.00



புத்தாடைகளின்
மினுமினுப்பில்
மங்கையரின் புன்னகை
பொழியும் பேரொளி! தித்திக்கும்
பலகாரச் சுவையில் நாவினிக்கும்
மகிழ்ச்சி! உறவுகளும் நட்புகளும்
ஒன்றிணைய, உள்ளங்கள் தோறும்
பொங்கட்டும் ஆனந்தம்!
இல்லங்கள் எங்கும் பெருகட்டும் சுபிட்சம்!
நாடு முழுவதும் தீபாவளித் திருநாளைக்
கொண்டாடும் அன்பு வாசகர்கள்
அனைவருக்கும், தமிழ் நெஞ்சங்கள்
அனைத்திற்கும் 'திசைகள்' நிர்வாகத்தின்
இதயம் நிறைந்த இனிய தீபாவளி
நல்வாழ்த்துகள்!

திசைகள் யாவும் அதிரும் தீப ஒளி!

இல்லம் தோறும் இன்பப் பேரொளி!

தலையங்கம்

தீபாவளி சொல்லும் ஒரே பாடம்: ஒன்றுபடுவோமா?

திசைகள் நிர்வாகத்தின் சார்பில் மலேசிய வாழ் இந்தியப் பெருமக்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்!

தீபாவளி வந்துவிட்டது. வீடுகள் சுத்தமாகின்றன. புத்தாடைகள் தயாராகின்றன. இனிப்புகள் குவிகின்றன. விளக்குகள் ஏற்றப்படுகின்றன. உறவுகள் கூடுகின்றன. மகிழ்ச்சி பெருகுகிறது.

ஆனால் இந்த மகிழ்ச்சிக்கு நடுவே, நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய ஒரு கேள்வி இருக்கிறது.

நமது வீடுகளில் மட்டும் வெளிச்சம் போதுமா?

நமது சமூகத்தின் உள்ளேயும் வெளிச்சம் பிறக்க வேண்டாமா?

தீபாவளி என்பது இருளை அகற்றி ஒளியை வரவேற்கும் பண்டிகை.

அப்படியானால், நமது சமூகத்தில் நீண்டகாலமாக நிலைத்திருக்கும் பிளவுகள், பகைமைகள், பதவிப் போட்டிகள், குழு மோதல்கள் ஆகியவற்றையும் அகற்றுவதற்கான ஒரு புதிய தொடக்கமாக இந்தத் தீபாவளியை ஏன் மாற்றக்கூடாது?

இதுதான் இந்தத் தீபாவளியில் திசைகள் முன்வைக்கும் கேள்வி.

மலேசிய இந்திய சமூகம் எண்ணிக்கையில் சிறுபான்மை சமூகமாக இருக்கலாம். தற்போதைய அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களின்படி, மக்கள் தொகையில் இந்தியர்களின் பங்கு 6.5 விழுக்காடு.

ஆனால் ஒரு சமூகத்தின் வலிமையை அதன் எண்ணிக்கை மட்டும் தீர்மானிப்பதில்லை.

அந்த எண்ணிக்கை எவ்வளவு ஒற்றுமையாக நிற்கிறது என்பதுதான் அதன் உண்மையான வலிமை.

இங்குதான் நாம் நின்று சிந்திக்க வேண்டியுள்ளது. கால் நூற்றாண்டுக்கும் மேலாக நமது சமூகத்தைப் பார்த்தால், அரசியல் களத்தில் பிரிவுகள் அதிகரித்துள்ளன. கட்சிகள் பெருகியுள்ளன.

அணிகள் உருவாகியுள்ளன. ஆதரவாளர்கள் தனித்தனி முகாம்களாகப் பிரிந்துள்ளனர்.

கருத்து வேறுபாடு ஜனநாயகத்தின் இயல்பு. ஆனால் கருத்து வேறுபாடு சமூகப் பிளவாக மாறும்போது?

ஒருவரை ஆதரிப்பதற்காக இன்னொருவரை எதிரியாக்கும் நிலை உருவாகும்போது?

நமது பொதுநலனைவிட நமது குழு அடையாளம் பெரிதாகும்போது?

அப்போது நாம் நம்மையே கேட்க வேண்டிய நேரம் இது:

நாம் அரசியல் ரீதியாகப் பல அணிகளாக இருக்கலாம். ஆனால் சமூக நலன் என்று வரும்போது ஒரே குரலாக நிற்க முடியாதா?

இது அரசியல்வாதிகளிடம் மட்டும் கேட்க வேண்டிய கேள்வி அல்ல.

ஒவ்வோர் இந்தியரும் தன்னிடம் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி.

அரசியலைத் தாண்டி நமது சமயத் தளத்தையும் பார்க்க வேண்டும்.

ஆலயம் என்பது ஆன்மிகம் வளர வேண்டிய இடம். அறம் கற்றுக் கொள்ள வேண்டிய இடம். அடுத்த தலைமுறைக்கு நமது பண்பாட்டை எடுத்துச் செல்ல வேண்டிய இடம். ஆனால் சில இடங்களில் ஆலய நிர்வாகம் மற்றும் தலைமைப் பொறுப்புகளைச் சுற்றி உருவாகும் போட்டிகளும் பிளவுகளும் வேதனை அளிக்கின்றன.

இறைவனைத் தேடி மக்கள் கூடும் இடத்தில், பதவியைத் தேடும் போட்டி ஏன் முன்னிலைக்கு வர வேண்டும்?

இது யாரையும் குற்றவாளியாக்கும் கேள்வி அல்ல. ஆலயத்தின் உயரம் அதன் பதவிகளில் அல்ல; அது உருவாக்கும் ஆன்மிகத்திலும் அறத்திலும் இருக்கிறது. அதே கேள்வி சமூக அமைப்புகளுக்கும் பொருந்துகிறது. சமூகத்திற்காக உருவாக்கப்பட்ட அமைப்புகள் சமூகத்தையே முன்னிலைப்படுத்த வேண்டும்.

ஆனால் சில அமைப்புகளில் பொறுப்பும் பதவியும் யாரிடம் இருக்க வேண்டும் என்ற போட்டி, அமைப்பின் நோக்கத்தைவிட பெரியதாகும்போது, சமூகத்திற்கான சேவை எங்கே போகிறது?

இங்கே ஒரு விஷயத்தை நாம் தெளிவாகச் சொல்ல வேண்டும்:

பதவி என்பது பெருமைக்கான மேடை அல்ல; சமூகத்துக்குச் சேவை செய்வதற்கான பொறுப்பு.

பதவியில் அமர்வதைவிட, அந்தப் பதவியில் இருந்து சமூகத்திற்கு என்ன செய்தோம் என்பதுதான் வரலாற்றில் நிலைக்க வேண்டும். இவற்றையெல்லாம் விட நமது எதிர்காலத்தைப் பற்றிய மிகப் பெரிய கவலை ஒன்று உள்ளது.

நமது இளைஞர்களில் ஒரு பகுதியினரிடையே வன்முறை, அடிதடி, குழு மோதல் போன்றவை உருவாகி வருவது. இளைஞர்களை மட்டும் குற்றம் சாட்டுவது மிகவும் எளிது.

ஆனால் நாம் ஒரு கேள்வியைக் கேட்கத் தயாரா?

அவர்களுக்கு நாம் எந்தச் சமூகத்தை முன்மாதிரியாகக் காட்டுகிறோம்?

பெரியவர்கள் பதவிக்காகப் பிரிகிறார்கள்.

அமைப்புகள் குழுக்களாகப் பிரிகின்றன.

சமயத் தளங்களில் தலைமைப் போட்டிகள் உருவாகின்றன.

அரசியலில் ஒருவர் மற்றொருவரை எதிரியாகப் பார்க்கிறார்.

பின்னர் இளைஞர்களிடம் மட்டும் ஒற்றுமையையும் ஒழுக்கத்தையும் பொறுப்பையும் எதிர்பார்க்கிறோம்.

இது எந்த அளவுக்கு நியாயம்?

நாம் இளைஞர்களிடம் மாற்றத்தை எதிர்பார்க்கிறோம் என்றால், மாற்றத்தின் முதல் அடியை நாம்தான் எடுத்து வைக்க வேண்டும்.

ஏனெனில் இன்று நாம் உருவாக்கும் சமூகம்தான் நாளை நமது பிள்ளைகளுக்குக் கிடைக்கப் போகிறது.

அவர்களுக்கு நாம் என்ன விட்டுச் செல்லப் போகிறோம்?

பதவிக்காகப் பிரிந்த சமூகமா?

அரசியலுக்காகப் பிளவுபட்ட சமூகமா?

தனிப்பட்ட விரோதங்களால் சிதைந்த சமூகமா? அல்லது- வேறுபாடுகளுடன் வாழ்ந்தாலும், பொதுநலனில் ஒன்றுபட்டு நிற்கும் சமூகமா?

இந்தக் கேள்விக்கான பதிலை வேறு யாரும் சொல்லப் போவதில்லை.

நாம்தான் சொல்ல வேண்டும். அதனால்தான் இந்தத் தீபாவளியை ஒரு சாதாரண பண்டிகையாகக் கடந்து செல்ல விடக்கூடாது.

இந்தத் தீபாவளி நமது வீடுகளில் மட்டும் கொண்டாடப்பட வேண்டியதல்ல.

நமது சமூக மனசாட்சியிலும் கொண்டாடப்பட வேண்டிய தீபாவளி.

அரசியல் வேறுபாடுகள் இருக்கட்டும்.

கருத்து வேறுபாடுகள் இருக்கட்டும்.

சமய வழிபாட்டு முறைகளில் வேறுபாடுகள் இருக்கட்டும்.

அமைப்புகளின் செயல்பாடுகளில் வேறுபாடுகள் இருக்கட்டும்.

ஆனால் ஒரு கோட்டில் மட்டும் நாம் ஒன்றாக நிற்போம்:

மலேசிய இந்திய சமூகத்தின் பொதுநலன்.

அந்தப் பொதுநலனுக்காக தனிப்பட்ட விரோதங்களை ஒதுக்குவோம்.

பதவியை விடப் பொறுப்பை முன்னிறுத்துவோம்.

தனிப்பட்ட புகழை விட சமூகத்தின் எதிர்காலத்தை முன்னிறுத்துவோம்.

பிரிவை விட ஒருமைப்பாட்டை முன்னிறுத்துவோம்.

இளைஞர்களின் கைகளில் வன்முறையை அல்ல, வாய்ப்புகளை வழங்குவோம்.

அடுத்த தலைமுறைக்கு நமது பிளவுகளை மரபாக விட்டுச் செல்லாமல், நமது ஒற்றுமையை மரபாக விட்டுச் செல்வோம். இந்தத் தீபாவளியில் ஒவ்வொரு வீட்டிலும் விளக்கேற்றுவோம்.

ஆனால் ஒரு விளக்கு ஒவ்வொருவரின் மனதிலும் ஏற்றப்பட வேண்டும்.

“நான் மட்டும்” என்ற எண்ணத்தை அணைக்கும் விளக்கு.

“நாம்” என்ற எண்ணத்தை ஏற்றும் விளக்கு. இதுவே இந்தத் தீபாவளியில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிமொழியாக இருக்கட்டும்:

என் அரசியல் வேறாக இருக்கலாம். என் கருத்து வேறாக இருக்கலாம். என் அமைப்பு வேறாக இருக்கலாம். என் பாதை வேறாக இருக்கலாம்.

ஆனால் மலேசிய இந்திய சமூகத்தின் நலன் என்று வரும்போது- நாம் ஒன்றாக நிற்போம்!

இதுதான் இந்தத் தீபாவளியில் நாம் ஏற்ற வேண்டிய மிகப் பெரிய விளக்கு.

ஒற்றுமையின் விளக்கு. ஒருமைப்பாட்டின் விளக்கு. நமது அடுத்த தலைமுறையின் எதிர்காலத்திற்கான விளக்கு.

இந்தத் தீபாவளி, அந்தப் புதிய தொடக்கமாகட்டும்.

-இ.எம்.சாமி,
ஆசிரியர், திசைகள்.

KEMENTERIAN SUMBER MANUSIA

Deepavali
OTRUMAI MADANI

இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்

TABUNG PEMBANGUNAN KEMAHIRAN

HRD CORP
HUMAN RESOURCE DEVELOPMENT CORPORATION

PERKESO

TalentCorp
GROUP OF COMPANIES

MITRA
UNIT TRANSFORMASI MASYARAKAT INDIA MALAYSIA

YB Dato' Sri Ramanan Ramakrishnan

Menteri Sumber Manusia
Ahli Parlimen Sungai Buloh
Naib Presiden Parti Keadilan Rakyat

Facebook - Tiktok - Instagram - Twitter: Ramanan Ramakrishnan Official



ஒரு காலத்தில், உலகையே தன் ஆணவத்தின் பிடிக்குள் கொண்டு வர வேண்டும் என்ற வெறியுடன் வாழ்ந்தான் நரகாசுரன். ஆற்றலும் அதிகாரமும் பெருகப் பெருக, அவனுடைய கொடுமையும் எல்லை மீறியது. மக்களும் தேவர்களும் அவனுடைய அட்டூழியத்தால் துயருற்றனர். அந்தியின் கொடுமைக்கு முடிவு கட்ட வேண்டிய நேரம் வந்தது. நரகாசுரனை எதிர்த்து போரிட கிருஷ்ணர் புறப்பட்டார். அவருடன் சத்யபாமாவும் சென்றார். கருடன் மீது அமர்ந்து இருவரும் நரகாசுரனின் கோட்டையை நோக்கிப் பறந்தனர்.

ஒரு காலத்தில், உலகையே தன் ஆணவத்தின் பிடிக்குள் கொண்டு வர வேண்டும் என்ற வெறியுடன் வாழ்ந்தான் நரகாசுரன். ஆற்றலும் அதிகாரமும் பெருகப் பெருக, அவனுடைய கொடுமையும் எல்லை மீறியது. மக்களும் தேவர்களும் அவனுடைய அட்டூழியத்தால் துயருற்றனர்.

அந்தியின் கொடுமைக்கு முடிவு கட்ட வேண்டிய நேரம் வந்தது. நரகாசுரனை எதிர்த்து போரிட கிருஷ்ணர் புறப்பட்டார். அவருடன் சத்யபாமாவும் சென்றார். கருடன் மீது அமர்ந்து இருவரும் நரகாசுரனின் கோட்டையை நோக்கிப் பறந்தனர். நரகாசுரனின் கோட்டை போர்க்களமானது. அவனது படைகள் சீறிப் பாய்ந்தன. ஆயுதங்கள் மோதின. வானமே அதிரும் அளவுக்குப் போர் கொந்தளித்தது. ஆனால் அந்தியின் பலம் எவ்வளவு பெரிதாக இருந்தாலும், தர்மத்தின் முன்னால் அது நிலைக்க முடியவில்லை.

இறுதியில் கிருஷ்ணருக்கும் நரகாசுரனுக்கும் இடையே கடுமையான மோதல் ஏற்பட்டது. போரின் உச்சத்தில் நரகாசுரன் வீழ்ந்தான். சில புராண மரபுகளில், சத்யபாமா நரகாசுரனை வீழ்த்தியதாகவும், அவர் பூமாதேவியின் அம்சமாகக் கருதப்படுவதாகவும் கூறப்படுகிறது.

நரகாசுரன் அழிந்ததும் அவனால் சிறை வைக்கப்பட்டிருந்தவர்கள் விடுதலை பெற்றனர். அவன் கைப்பற்றியிருந்த செல்வங்களும் மீட்கப்பட்டன. நீண்ட காலமாக நிலவிய அச்சமும் இருளும் விலகி, மக்களின் முகங்களில் மகிழ்ச்சி மலர்ந்தது.

அந்த வெற்றியை வரவேற்க வீடுகள் தோறும் விளக்குகள் ஏற்றப்பட்டன. இருளை அகற்றிய அந்தத் தீப ஒளி, காலம் கடந்து இன்றும் தீபாவளியின் அடையாளமாகத் தொடர்கிறது.

இது ஒரு புராணக் கதை மட்டுமல்ல.

இருள் எவ்வளவு அடர்த்தியாக இருந்தாலும், ஒரு சிறிய தீபம் அதனை விரட்ட முடியும் என்பதையும்; தீமை எவ்வளவு வலிமையானதாகத் தோன்றினாலும், நன்மை அதனை வெல்லும் என்பதையும் நினைவூட்டும் செய்தி.

அதனால்தான் ஒவ்வொரு தீபாவளியும் வீடுகளில் மட்டும் அல்ல...

நம் உள்ளங்களிலும் ஒரு தீபத்தை ஏற்றுகிறது.

இருளை வீழ்த்தி ஒளியை வரவேற்போம். தீமையை விலக்கி நன்மையை வளர்ப்போம்.

MINISTRY OF DIGITAL

MALAYSIA MADANI

இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



மாண்புமிகு
கோபிந்த் சிங் டியோ
இலக்கவியல் அமைச்சர்

YB GOBIND SINGH DEO
Menteri Digital Malaysia

தீயதை அழித்து... தீபாவளி

மனதில் ஒளியேற்றும் நாள்

சுவாமி மகேந்திரா குருக்கள், தோற்றுநர், ஸ்ரீ ஆதிசங்கரர் திருமடம்

தீபாவளி என்பது இந்துக்களின் பண்டிகை. அதேவேளை, அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடக்கூடிய புனிதமான நாளாகவும் அது விளங்குகிறது. 'தீப ஆவலி' என்றால் தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபடுவது. வீட்டில் ஒளி பெருகவும், மகிழ்ச்சி பொங்கவும், தீயவை அகலவும் தீபம் ஏற்றி இறைவனுக்கு நன்றி செலுத்தும் நாள்தான் தீபாவளி. தீபாவளியின் பின்னணியில் நரகாசுரனைப் பற்றிய புராணக் கதை உள்ளது. நரகாசுரன் மக்களுக்குப் பல்வேறு கொடுமைகளையும் துன்பங்களையும் கொடுத்தபோது, அவர்கள் கிருஷ்ண பரமாத்மாவிடம் சென்று தங்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்றும்படி வேண்டினர். அவர்களின் வேண்டுகோளை ஏற்று கிருஷ்ண பரமாத்மா நரகாசுரனை அழித்த நாளையே நாம் தீபாவளியாகக் கொண்டாடுகிறோம்.







அனைவருடனும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளும் நாள். ஒருவரை ஒருவர் வாழ்த்துவது அன்பின் வெளிப்பாடு. வேறுபாடுகளை மறந்து அனைவரையும் ஒன்றிணைக்கும் நாளாகவும் இது விளங்குகிறது. அதேபோல், நமது முன்னோர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கும் இந்த நாள் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

தீபாவளி அன்று லட்சுமி பூஜை, குபேர பூஜை செய்வதும் சிறப்பானது. குறிப்பாக உலோகத்தால் செய்யப்பட்ட நாணயங்களை வைத்து குபேர பூஜை செய்வது பாரம்பரியமாக உள்ளது. ஆதிசங்கரர் பாடிய கனகதாரா ஸ்தோத்திரத்துடன் தொடர்புடைய நிகழ்வும், வறுமையில் இருந்த ஒரு தாய்க்கு அவர் செய்த அருளையும் உதவியையும் நினைவுபடுத்துகிறது. பிறருடைய துயரத்தைப் போக்குவதும் இறை வழிபாட்டின் ஒரு பகுதிதான் என்பதை இது உணர்த்துகிறது.

இந்தப் புனிதமான நாளில்

எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்ட வேண்டும். முடிந்த அளவுக்கு சைவமாகச் சமைத்து உண்பது மிகவும் சிறப்பு. உயிர்ப்பலி கொடுக்கக்கூடிய நாள் தீபாவளி அல்ல. மதுபானம் அருந்தக்கூடிய நாளும் அல்ல. குடும்பத்துடன் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் ஆனந்தமாகவும் வாழ்வதற்கான நாளாகவே தீபாவளியைக் கொண்டாட வேண்டும்.

பட்டாசுகள் வெடிப்பது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விட்டு விட்டு, அன்பையும் அமைதியையும் மகிழ்ச்சியையும் மனதில் நிறைத்துக் கொள்வோம். ஒருவரை ஒருவர் வாழ்த்தி, எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டி, குடும்பத்துடன் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவோம்.

தீமையை அழித்து நன்மையை வரவேற்று, இருளை அகற்றி ஒளியை ஏற்றி, அன்பைப் பகிர்ந்து மகிழ்வதுதான் உண்மையான தீபாவளி.






ஆனால், நரகாசுரன் அழிக்கப்பட்ட நாளை மட்டும் நாம் கொண்டாடவில்லை. தீமையை அழித்து நன்மையை நிலைநாட்ட வேண்டும் என்பதுதான் தீபாவளி நமக்குச் சொல்லும் மிகப் பெரிய செய்தி. இந்து சமயத்தில் தீமையை அழித்த பின்னரும் அருளால் ஏற்றுக் கொள்ளும் தத்துவம் உள்ளது. முருகப் பெருமான் சூரபத்மனை அழித்து, அவனை மயிலாகவும் சேவலாகவும் ஏற்றுக் கொண்டதைப் போல, தீமையை வென்று நன்மையை நிலைநாட்டுவதே முக்கியம்.

தீபாவளி அன்று அதிகாலையிலேயே எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளிப்பது நமது பாரம்பரியத்தில் முக்கியமானது. எண்ணெய் தேய்த்துக் குளிப்பது உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்வைத் தருவதுடன், பீடைகள் அகலும் என்ற நம்பிக்கையையும் கொண்டது. குளித்து முடித்ததும் புத்தாடை அணிந்து, வீட்டில் இறைவனை வழிபட்டு, பின்னர் கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்வது சிறப்பு.

தீபாவளி என்பது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் என ஒரு வழியாக இருக்கலாம். ஆனால் பட்டாசு மட்டும் தீபாவளி அல்ல. வீட்டில் விளக்கேற்றி, இறைவனை வழிபட்டு, நம்முடைய உள்ளத்திலும் ஒளியை ஏற்றுவதுதான் இந்த நாளின் உண்மையான சிறப்பு.

நாம் ஒவ்வொரு நல்ல காரியத்தையும் தொடங்கும்போதும் தீபம் ஏற்றுகிறோம். அந்தத் தீபம் அறியாமையை அகற்றி அறிவை வளர்க்கும் ஒளியின் அடையாளம். எனவே, தீபாவளி அன்று வெளியில் மட்டும் விளக்கேற்றாமல், நமது மனத்திலும் அறிவு, அன்பு, அமைதி ஆகியவற்றின் விளக்கை ஏற்ற வேண்டும்.

இந்தத் தீபாவளியில் நமது சினம், பகை, கசப்பு, வேறுபாடுகள் அனைத்தையும்



"வெளியில் ஏற்றும் தீபம் மட்டும் போதாது. நமது மனத்திலும் ஒரு தீபத்தை ஏற்ற வேண்டும். அறியாமை அகன்று அறிவு பெருக வேண்டும்; சினம் மறைந்து அன்பு மலர வேண்டும்; தீமை அழிந்து நன்மை நிலைபெற வேண்டும். அதுதான் தீபாவளியின் உண்மையான பொருள்."

- சுவாமி மகேந்திரா குருக்கள்

KEMENTERIAN DALAM NEGERI

MALAYSIA MADANI

SELAMAT MENYAMBUT HARI DEEPAVALI


இனிய தீபாவளி வாழ்த்துகள்



SEMOGA PERAYAAN DEEPAVALI INI MEMBAWA SINAR CAHAYA KEGEMBIRAAN DAN KEBAHAGIAAN KEPADA SEMUA.

DATUK SERI SAIFUDDIN NASUTION BIN ISMAIL

MENTERI DALAM NEGERI



தலைத் தீபாவளி மாப்பிள்ளை காத்திருக்கும் சப்ரைஸ் என்ன?

திருமணத்துக்குப் பிறகு வரும் முதல் தீபாவளி ஒவ்வொரு புதுமணத் தம்பதியருக்கும் மறக்க முடியாத அனுபவம். பிறந்த வீட்டில் கொண்டாடிய தீபாவளி நினைவுகளுக்கு நடுவே, புதிய உறவுகளுடன் இணைந்து கொண்டாடும் இந்தத் தலைத் தீபாவளி எப்படியிருக்கும்? மாமியார் வீட்டில் கிடைக்கப் போகும் விருந்து, சீர், வரவேற்பு, அன்பு அல்லது எதிர்பாராத ஒரு சப்ரைஸ் ? தங்களது முதல் தீபாவளியை எதிர்நோக்கும் இந்தப் பத்து தம்பதியரின் மனதில் ஓடும் எதிர்பார்ப்புகள் இதோ ....

புது வீட்டில் முதல் தீபாவளி

''நாங்கள் காதலித்து நான்கு, ஐந்து ஆண்டுகள் ஆனாலும், இதுவரை தீபாவளியை ஒன்றாகக் கொண்டாடியதில்லை. அவர் மலாக்காவிலும், நான் கோலாலம்பூரிலும் இருந்ததால், ஒவ்வோர் ஆண்டும் தனித்தனியாகத்தான் கொண்டாடினோம். இந்த ஆண்டு கணவன்மனைவியாக இணைந்து கொண்டாடப் போகிறோம் என்பதே மிகவும் சிறப்பானது. பொதுவாக தலைத் தீபாவளிக்கு மாமியார் அல்லது பெற்றோர் வீட்டுக்குத்தான் செல்வார்கள். ஆனால் எங்களுக்கு இந்த ஆண்டு ஒரு வித்தியாசமான அனுபவம். புதிதாக வாங்கிய வீட்டின் புதுப்பிப்புப் பணிகள் முடிந்ததும், தீபாவளிக்கு முன்பாக அங்கே குடியேறப் போகிறோம். எங்கள் புதிய வீட்டிலேயே தலைத் தீபாவளியைக் கொண்டாடி, இரு குடும்பத்தினரையும் அங்கே அழைத்து ஒன்றாகக் கொண்டாட வேண்டும் என்பதுதான் எங்கள் ஆசை.''

புகழ்-பிரியா தம்பதி
கோலாலம்பூர்.



இரு குடும்பங்களும் சேர்ந்த கொண்டாட்டம்

''முதல் தலைத் தீபாவளியை ஒன்றாக அனுபவிக்கப் போகிறோம் என்பதில் மிகவும் மகிழ்ச்சி. எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, புத்தாடை அணிவது, வீட்டில் பிரார்த்தனை செய்வது, கோவிலுக்குச் செல்வது, பெரியவர்களின் ஆசீர்வாதம் பெறுவது என முடிந்தவரை பாரம்பரிய முறையில் கொண்டாட வேண்டும். மணமகளின் வீட்டில் கொடுக்கப்படும் சீர், புத்தாடைகள், பெரிய விருந்து என எதையும் தவறவிடப் போவதில்லை. அதே நேரத்தில் இன்றைய வாழ்க்கை முறையில் இரண்டு குடும்பங்களையும் சமமாகப் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் இரு குடும்பங்களுக்கும் நேரம் ஒதுக்கி, யாரும் விடுபட்டதாக உணராத வகையில் இந்தத் தலைத் தீபாவளியைக் கொண்டாடப் போகிறோம்.''

பவீன் - ஹேமா பண்டார் ரிம்பாயு,
தெலுக் பங்லீமா காராங், சிலாங்கூர்.

'பாரம்பரியத்தோடு புதிய நினைவுகள்



''எங்களுடைய முதல் தலைத் தீபாவளியை அன்புடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாட வேண்டும் என்பதுதான் எங்களுடைய பெரிய எதிர்பார்ப்பு. பாரம்பரிய உடைகளை அணிந்து, எங்களுக்குப் பிடித்த இனிப்புகள் மற்றும் கார வகைகளைத் தயாரித்து, விளக்கேற்றி, வழக்கமான சடங்குகளைச் செய்வதில் மகிழ்ச்சி. எல்லாவற்றையும் விட, கணவன்-மனைவியாக இணைந்து கொண்டாடும் முதல் தீபாவளி என்பதால், இந்த நாளை மறக்க முடியாத நினைவாக மாற்ற வேண்டும். இனிவரும் ஆண்டுகளில் நினைத்துப் பார்க்கக்கூடிய புதிய குடும்பப் பாரம்பரியத்தையும் இந்தத் தலைத் தீபாவளியில் தொடங்க வேண்டும் என்று விரும்புகிறோம்.''

அர்ஜுனா - ஜூலி
கோலாலம்பூர்.

இரு குடும்பங்களின் அன்பு நிறைந்த நாள்

''முன்பு என் குடும்பத்துடன் தீபாவளியைக் கொண்டாடும்போது காலையில் எழுந்து கோவிலுக்குச் செல்வோம், சாப்பிடுவோம், பிறகு பாட்டி வீட்டுக்குச் செல்வோம். இந்த ஆண்டு எனக்கு முற்றிலும் புதிய அனுபவம். தீபாவளிக்கு ஒரு நாள் முன்பே மனைவியின் குடும்பத்தினர் வீட்டுக்குச் சென்று அங்கிருந்தே என் தலைத் தீபாவளியைத் தொடங்கப் போகிறேன். அவர்கள் ஒரு பெரிய கூட்டுக் குடும்பம் என்பதால் அனைவரும் மிகவும் அன்பாகப் பழகுவார்கள். அதோடு என் குடும்பத்தினரும் அங்கு வந்து ஒன்றாகக் கொண்டாடப் போகிறார்கள். இரு குடும்பங்களும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவதும், பலவிதமான பலகாரங்களைச் சுவைப்பதும் இந்த ஆண்டின் தீபாவளியை மறக்க முடியாததாக மாற்றும் என்று நினைக்கிறேன்.

திருஞானசம்பந்தர் பாலகிருஷ்ணன் ,
ஷாமிலா ரெங்கசாமி
கோலாலம்பூர்.





மாமியார் தேய்க்கும் எண்ணெய்

‘‘தலைத் தீபாவளி என்று சொல்லும்போதே அது ஒரு புதிய விஷயம் என்பதைவிட, பல நாளாக இருந்த ஒரு ஆசை நிறைவேறப் போகிறது என்ற உணர்வுதான் வருகிறது. வழக்கமாக அம்மா தலையில் எண்ணெய் தேய்த்து குளிப்பாட்டுவார்கள். ஆனால் இந்த ஆண்டு மாமனார் அல்லது மாமியார் எண்ணெய் தேய்த்து விடுவார்கள் என்பதே எனக்கு ஒரு புதுமையான அனுபவமாக இருக்கும். தலைத் தீபாவளிக்காக நானும் என் மனைவியும் சேர்ந்து மாமனார் வீட்டிற்குத் துணிகளையும் வாங்கியிருக்கிறோம். இந்த ஆண்டு எப்படியெல்லாம் கொண்டாட்டம் அமையப் போகிறது என்ற எதிர்பார்ப்பு இப்போதே இருக்கிறது.

தனசேகர்-பிரஷாந்தினி
செண்டாயாங், நெகிரி செம்பிலான்.



மாப்பிள்ளை விருந்துக்காக காத்திருக்கிறேன்

‘‘எங்கள் வீட்டில் தீபாவளி என்றாலே அதிகாலையிலேயே எண்ணெய் தேய்த்துக் குளித்து, கோவிலுக்குச் சென்று, உறவினர்களுடன் காலை உணவைச் சாப்பிடுவோம். இட்லி, தோசையுடன் கோழி, ஆட்டுக்கறிக் குழம்பு என எங்கள் தீபாவளி காலை உணவே தனிச் சிறப்பு. இந்த ஆண்டு இன்னும் அதிக உற்சாகமாக இருக்கிறேன். பல ஆண்டுகளாக காதலித்து, இப்போது எங்கள் சொந்த குடும்ப வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறோம். என் கணவர் எங்களுடன் சேர்ந்து கொண்டாடப் போகும் முதல் தலைத் தீபாவளி என்பதால் மிகவும் சிறப்பு. அவருக்காக மறக்க முடியாத ‘மாப்பிள்ளை விருந்து’ காத்திருக்கிறது. அதேபோல் அவருடைய வீட்டிலும் எங்களுக்காக அதே அளவு உற்சாகம் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

பிரேம் குமார் - நந்தினி புன்ஞாக் ஆலாம், ஷா ஆலம்.

சடங்குகளும் விருந்தும்

‘‘இந்தத் தலைத் தீபாவளிக்காக எங்களுக்கு மிகவும் எதிர்பார்ப்பாக இருப்பது பாரம்பரிய சடங்குகள்தான். வழக்கம்போல் தலைக்குக் குளித்து, சாமி கும்பிட்டு, அதன் பிறகு விருந்து கொடுப்பார்கள். அந்த விருந்துக்குத்தான் மிகவும் ஆவலாகக் காத்திருக்கிறோம். அதற்குப் பிறகு எங்களுக்குச் சீர் கொடுப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். துணிமணிகள் வைத்து கொடுக்கும் அந்தப் பரிசுக்காகவும் மிகவும் எதிர்பார்ப்புடன் இருக்கிறோம். எங்களுடைய தலைத் தீபாவளியை எடுத்து நடத்தப் போவது எங்கள் நண்பர்கள்தான். பெற்றோர் வயதானவர்கள் என்பதால் நண்பர்களே முன்னின்று ஏற்பாடுகளைச் செய்யப் போகிறார்கள். அதனால் இந்தத் தலைத் தீபாவளி மிகவும் ஜாலியாகவும் வேடிக்கையாகவும் இருக்கும் என்று நினைக்கிறோம்.

திவ்யா- பிரதீப் வசன்
கோலாலம்பூர்.



குடும்ப பாரம்பரியத்துடன் முதல் தீபாவளி

‘‘பல மாதங்களாக மேற்கொண்ட தயாரிப்புகளுக்குப் பிறகு, நலங்கு முதல் திருமண நாள் வரை அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக நடந்தன. குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து எங்கள் திருமணத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடியதுடன், அவர்கள் வழங்கிய அன்பும் ஆசீர்வாதமும் மறக்க முடியாதவை. கடந்த ஜூன் மாதத்தில் அதிகாரப்பூர்வமாக கணவன்-மனைவியாக பதிவு செய்திருந்தாலும், பாரம்பரிய இந்திய திருமணத்தை நடத்தி எங்கள் குடும்பப் பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் போற்ற முடிந்தது எங்களுக்கு மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது. இப்போது கணவன்மனைவியாக இணைந்து கொண்டாடப் போகும் முதல் தீபாவளியும் அந்த நினைவுகளைத் தொடரும் ஒரு புதிய தொடக்கமாக அமையப் போகிறது.

வினித் - வெல்யிண்டா. பினாங்கு.





மகளாகச் சென்ற வீடு மருமகளாகத் திரும்பும் தருணம்

‘‘திருமணமாகி மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. இந்தியப் பாரம்பரியப்படி இந்த ஆண்டு எங்கள் முதல் தலைத் தீபாவளியைக் கொண்டாடப் போகிறோம் என்பதில் மிகவும் மகிழ்ச்சியும் உற்சாகமும் இருக்கிறது. பிறந்த வீட்டுக்குத் திரும்பும்போது சிறுவயது தீபாவளி நினைவுகளும், அம்மாவின் கைமணமும் மனதில் மீண்டும் வந்து செல்கின்றன. அதே நேரத்தில், மகளாக இருந்த நான் இப்போது ஒரு புதிய குடும்பத்தின் மருமகளாக மாறிவிட்டேன் என்ற மெல்லிய முதிர்ச்சி உணர்வும் வருகிறது. பெற்றோரையும் உடன்பிறந்தவர்களையும் பார்க்கும்போது, ‘நான் எப்போதுமே இந்த வீட்டின் செல்லக் குழந்தைதான்’ என்ற அன்பான உணர்வு மீண்டும் வருகிறது. ஆனால் இந்த முறை தம்பதியராகச் செல்லும்போது கிடைக்கும் கூடுதல் மரியாதையும் உபசரிப்பும் ஒரு புதிய பெருமிதத்தைத் தருகிறது. பண்டிகை முடிந்து கணவர் வீட்டுக்குத் திரும்ப வேண்டும் என்ற நினைப்பு மட்டும் ஒரு மெல்லிய பிரிவுச் சோகத்தையும் தருகிறது.’’

சத்திரா நாயுடு -சரண்யா
கூலிம், கெடா.



கணவர் வீட்டின் கலாச்சாரத்தை அறியப் போகிறேன்

‘‘இந்த ஆண்டு தலைத் தீபாவளி எங்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருக்கும். குறிப்பாக கணவரின் பெற்றோருடன் இணைந்து தீபாவளியைக் கொண்டாடப் போவது மிகவும் சிறப்பான தருணமாக இருக்கும். அதோடு, கணவர் வழியில் இருக்கும் கலாச்சாரங்களையும் பாரம்பரியங்களையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். அதனால் 2026ஆம் ஆண்டு தீபாவளி எனக்கு முந்தைய ஆண்டுகளைவிட சற்று மாறுபட்ட தாகவும், புதிய அனுபவங்கள் நிறைந்ததாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.’’

சுகன்- விஷாலினி அல்மா, பினாங்கு



இன ஒற்றுமையை வலியுறுத்திய இரு பண்டிகைகள்! 1972, 1973இல் நிகழ்ந்த அந்த அதிசய நெருக்கம்

ஒரு வீட்டில் தீபாவளித் தீபங்கள் ஒளிரும்போது, மற்றொரு வீட்டில் ஹரிராயாவின் மகிழ்ச்சி மலர்கிறது. ஒரு சமூகத்தின் வழிபாட்டு முறையும் பண்பாட்டு மரபும் மற்றொரு சமூகத்திலிருந்து மாறுபட்டிருக்கலாம். ஆனால், குடும்பத்துடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பமும், உறவுகளைப் புதுப்பிக்க வேண்டும் என்ற எண்ணமும், பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற மனிதநேயமும் எல்லோருக்கும் பொதுவானவை. இந்த உண்மையை நமக்கு நினைவூட்டும் வகையில், நம் நாட்டில் 1972, 1973ஆம் ஆண்டுகளில் தீபாவளியும் ஹரிராயாவும் மிக நெருக்கமான நாட்களில் வந்தன.

1972ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் தேதி தீபாவளி கொண்டாடப்பட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு, நவம்பர் 7ஆம் தேதி ஹரிராயா பண்டிகை வந்தது. அடுத்த ஆண்டான 1973இல், அக்டோபர் 25ஆம் தேதி தீபாவளியும், அக்டோபர் 27ஆம் தேதி ஹரிராயாவும் கொண்டாடப்பட்டன. அடுத்தடுத்து வந்த இந்த இரு பண்டிகைகளும், மலேசியாவின் பல இன மக்கள் ஒருவரின் மகிழ்ச்சியில் மற்றவர் பங்கேற்கும் வாய்ப்பை நினைவூட்டின.

ஒளியும் மகிழ்ச்சியும் சொல்லும் ஒரே செய்தி

இந்து மக்களுக்கு தீபாவளி ஒளியின் பண்டிகை. இருளை அகற்றும் ஒளியைப் போல, வாழ்க்கையில் நம்பிக்கையும் நன்மையும் வெல்ல வேண்டும் என்ற செய்தியை அது எடுத்துரைக்கிறது. இஸ்லாமியர்களுக்கு ஹரிராயா, ரமலான் நோன்புக்குப் பிறகு நன்றியுணர்வுடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படும் பெருநாள். வழிபாட்டு மரபுகள் வேறுபட்டாலும், குடும்பத்தினருடன் ஒன்றுகூடுதல், உறவினர்களைச் சந்தித்தல், உணவைப் பகிர்தல், தேவையுள்ளவர்களுக்கு உதவுதல் போன்ற பண்புகள் இரு பண்டிகைகளிலும் முக்கியமானவை.

தீபாவளியன்று அண்டை வீட்டாருக்கு இனிப்புகளை வழங்குவதும், ஹரிராயாவன்று திறந்த இல்ல உபசரிப்பில் பிற சமூகத்தினரை வரவேற்பதும், வெறும் விருந்தோம்பல் நடவடிக்கைகள் அல்ல. அவை, "நீங்கள் வேறுபட்டவர்களாக இருக்கலாம்; ஆனால் எங்கள் மகிழ்ச்சியில், உங்களுக்கும் இடமுண்டு" என்று சொல்லும் அன்பின் மொழியாகும்.

வரலாற்றில் பதிவான நல்லிணக்கச் சந்திப்பு

இந்த ஒற்றுமை உணர்வுக்கு ஒரு வரலாற்றுச் சான்றாக 1972ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் தேதி நடைபெற்ற நிகழ்வைக் குறிப்பிடலாம். கோலாலம்பூரின் ஜாலான் பெக்கெலிலிங் அடுக்குமாடிக் குடியிருப்புப் பகுதியில், அங்குள்ள துயறயவயமேரயளய ஆராஐையொ எனப்படும் நல்லிணக்கக் குழுவின் ஏற்பாட்டில் தீபாவளி-ஹரிராயா சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

அன்றைய தேசிய ஒற்றுமை அமைச்சரான துன் வீ.தி. சம்பந்தன் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்த நிகழ்வைப் பற்றிய புகைப்படப் பதிவு மலேசிய தேசிய ஆவணக் காப்பகத்தில் இடம் பெற்றுள்ளது. வெவ்வேறு இன மக்களை ஒன்றிணைக்கும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பு, சமூக நல்லிணக்கம் என்பது வெறும் மேடைப் பேச்சாக மட்டும் இல்லாமல், மக்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளின் வழியாகவும் வெளிப்பட முடியும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை, அக்கால மலேசியா முழுவதும் ஒரே மாதிரியான கொண்டாட்டங்கள் நடந்தன என்பதற்கான ஆதாரமாகக் கருத முடியாது. ஆனால், இனங்களுக்கிடையிலான உறவை வலுப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அன்றைய சமூக வாழ்வில் வெளிப்பட்டதை இது தெளிவுபடுத்துகிறது.



ஒற்றுமை என்பது அன்பைப் பகிர்வதில் தொடங்குகிறது

மலேசியாவின் வலிமை அதன் பல இனங்கள், மொழிகள், மதங்கள், பண்பாடுகள் ஆகியவற்றின் பன்முகத்தன்மையில் உள்ளது. இந்த வேறுபாடுகளை அழிப்பதுதான் ஒற்றுமை என்று பொருளல்ல. ஒவ்வொருவரும் தமது மதத்தையும் பண்பாட்டையும் கடைப்பிடிக்கும் உரிமையை மதித்து, அடுத்தவரின் நம்பிக்கையையும் மரபையும் புரிந்து கொண்டு வாழ்வதே உண்மையான ஒற்றுமை.

பண்டிகைக் காலங்களில் மட்டும் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வது போதாது. பள்ளிகளில், பணியிடங்களில், குடியிருப்புப் பகுதிகளில், பொதுவாழ்க்கையில் இன வேறுபாடின்றி பழகுவதும், பிறருடைய துயரத்தில் துணைநிற்பதும், வெறுப்புப் பேச்சுகளைத் தவிர்ப்பதும் அவசியம். அப்போதுதான் பண்டிகைகள் எடுத்துரைக்கும் நன்மை, கருணை, பகிர்வு ஆகிய பண்புகள் நமது அன்றாட வாழ்க்கையிலும் வேரூன்றும்.

1972, 1973ஆம் ஆண்டுகளில் தீபாவளியும் ஹரிராயாவும் நெருக்கமாக வந்தது நாட்காட்டியின் ஓர் அரிய நிகழ்வு. ஆனால், அந்த நெருக்கத்தை இனங்களுக்கிடையிலான இதய நெருக்கமாக மாற்றுவது நம் கைகளில்தான் இருக்கிறது.

ஒரு தீபம் மற்றொரு தீபத்தை ஏற்றும்போது தனது ஒளியை இழப்பதில்லை; மாறாக, இருளை மேலும் அகற்றுகிறது. அதுபோலவே, ஒரு சமூகத்தின் மகிழ்ச்சியில் மற்றொரு சமூகம் பங்கேற்பதால் அதன் தனித்தன்மை குறைவதில்லை. மாறாக, பரஸ்பர மரியாதையும் நம்பிக்கையும் வளர்கின்றன.

தீபாவளியின் ஒளியும் ஹரிராயாவின் மகிழ்ச்சியும் நமக்குச் சொல்லும் செய்தி ஒன்றே: மதம் வேறாக இருக்கலாம்; மொழி வேறாக இருக்கலாம்; ஆனால் மனிதர்களை இணைக்கும் அன்பு, மரியாதை, சகோதரத்துவம் ஆகியவை பொதுவானவை. அந்த உணர்வை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதே மலேசியாவின் உண்மையான ஒற்றுமைக்கான வழியாகும்.

Selamat Menyambut Hari

Deepavali

தீபாவளி நல்வாழ்த்துகள்

PENANG 2030 | MALAYSIA MADANI | ❤PENANG



Ikhlas daripada Kerajaan Negeri Pulau Pinang

தீபாவளி ஒளிரட்டும்...
கடமையில் நிற்பவர்களின்
தியாகமும் போற்றப்படட்டும்!

குடும்ப மகிழ்ச்சியைத் தியாகம் செய்து மக்கள் நலனுக்காகப் பணியாற்றும் முன்னிலைப் பணியாளர்களின் நெகிழ்ச்சியான அனுபவங்கள்

சரவணன் தசரதன் - ஹேமா எம் எஸ் மணியம்

தீபாவளி என்றாலே புத்தாடைகள், பலகாரங்கள், குடும்ப ஒன்று கூடல் என மகிழ்ச்சி பொங்கும். ஆனால், நாம் குடும்பத்துடன் பண்டிகையைக் கொண்டாடும் வேளையில், மக்களின் பாதுகாப்புக்காகவும் உயிர்களைக் காப்பாற்றவும் பலர் பணியில் நிற்கின்றனர். அவர்களின் தீபாவளி அனுபவங்களில் கடமையும் தியாகமும் கலந்திருக்கின்றன. நாட்டின் முன்னிலைப் பணியாளர்கள் என்று கருதப்படும் மருத்துவர், காவல் துறையினர், அம்புலன்ஸ் ஓட்டுநர், தீயணைப்புப் படையினர், குடிநுழைவுத் துறையினர், சாலை போக்குவரத்துத் துறையினர் தங்கள் நூதன அனுபவங்களை திசைகளுடன் இப்படி பகிர்ந்து கொண்டனர்.



தம்பியைக் காப்பாற்ற வந்த அண்ணனும் உயிரிழந்தார்!

தீபாவளியன்று மருத்துவமனையில் பணியாற்றியபோது மறக்க முடியாத சோகச் சம்பவத்தைச் சந்தித்தேன். சண்டையில் காயமடைந்த இளைஞரை அவரது அண்ணன் மோட்டார் சைக்கிளில் அவசரமாக அழைத்து வந்தார். வழியில் அவரும் விபத்தில் சிக்கினார். தம்பியைக் காப்பாற்ற வந்த அண்ணன் மருத்துவமனைக்கு வந்தபோது உயிரிழந்திருந்தார். அந்தக் குடும்பத்தால் தீபாவளியைக் கொண்டாடவே முடியவில்லை. அந்தச் சம்பவம் இன்றும் என் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது.

மருத்துவர் ஷாமினிதேவி தங்கவேலு, கோலாலம்பூர்



விடுமுறை கிடைத்த பிறகுதான் தீபாவளிக்குத் தயாராக முடிகிறது!

தீபாவளிக்கு விடுமுறை கிடைத்தாலும், பெரும்பாலும் பண்டிகைக்கு முந்தைய நாளிலோ அன்றைய நாளிலோதான் கிடைக்கும். கோலாலம்பூருக்குப் பயணம் செய்வதிலேயே அதிக நேரம் சென்றுவிடும். பெற்றோர், உடன்பிறந்தவர்களுக்குப் புத்தாடைகள் வாங்குவது உள்ளிட்ட தயாரிப்புகளை அவசரமாகச் செய்ய வேண்டியிருக்கும். வீட்டில் இருந்தாலும் வழக்குகள் தொடர்பான அழைப்புகளுக்குப் பதிலளிக்க வேண்டும். என் பணியின் தன்மையைப் புரிந்து கொண்டு பெற்றோர் அளிக்கும் ஆதரவே எனக்குப் பெரிய பலம்.

இன்ஸ்பெக்டர் தனலெட்சுமி சிவா, கூலிம் மாவட்ட போலீஸ் தலைமையகம்



சரவணன் தசரதன் - ஹேமா எம் எஸ் மணியம்

குடும்பத்தைப் பிரிந்தாலும் கடமைதான் முதலில்!

சபாவில் பணியாற்றிய காலத்தில், பயணச் செலவு மற்றும் விமானப் பயணச்சீட்டு கிடைப்பதில் ஏற்பட்ட சிரமங்களால் சில தீபாவளிகளில் குடும்பத்தினரைச் சந்திக்க முடியவில்லை. புதிதாகத் திருமணமானபோதும், தீபாவளியன்று அவசரப் பணிக்காகத் திரும்ப அழைக்கப்பட்டேன். என் பணியின் தன்மையைப் புரிந்து கொள்ளக் குடும்பத்தினருக்கு மூன்று முதல் நான்கு ஆண்டுகள் தேவைப்பட்டன. இப்போது அவசர அழைப்பு வந்தால், குடும்பத்தினரிடம் நிலைமையை விளக்கிவிட்டு உடனே பணிக்குச் செல்கிறேன்.

சர்ஜண்ட் மேஜர் திலக் மனோகரன், கூலிம் மாவட்ட போலீஸ் தலைமையகம்



அலுவலகத்திற்கே வந்து இனிப்பு வழங்கிய குடும்பம்

போலீஸ் பணி 24 மணி நேரச் சேவையாகும். தீபாவளியன்று சொந்த ஊரான பேராக் செல்ல முடியாத நிலை பலமுறை ஏற்பட்டுள்ளது. கோவிட் காலத்தில் குடும்பத்தினருடன் கொண்டாட முடியாதபோது, அவர்கள் பினாங்கில் உள்ள எனது அலுவலகத்திற்கே வந்து இனிப்புகளை வழங்கினர். சில மணி நேரம் அவர்களுடன் இருந்தது மனதுக்கு ஆறுதலாக இருந்தது. விடுமுறை கிடைக்காதபோது சக ஊழியர்களுடன் இனிப்பைப் பகிர்ந்து கொண்டு தீபாவளியைக் கொண்டாடுவேன்.

ஏஎஸ்பி காந்தன் அண்ணாமலை, கூலிம் மாவட்ட போலீஸ் தலைமையகம்

தீபாவளி முடிந்த மறுநாளே பணிக்குத் திரும்பிய அனுபவம்!

சரவாக் மாநிலம் கூச்சிங்கில் பணியாற்றியபோது, தீபாவளிக்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் விமானப் பயணச்சீட்டு கிடைத்தது. ஒரே நாளில் புத்தாடைகள் வாங்கி, குடும்பத்தினருடன் நேரம் செலவிட்டு, பண்டிகைக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. பிகேபி காலத்தில் தைப்பிங்கில் பணியாற்றியபோது, வீட்டுக்கு அருகில் இருந்தும் 24 மணி நேரச் சாலைத் தடுப்புப் பணியால் குடும்பத்துடன் கொண்டாட முடியவில்லை. சில ஆண்டுகளில் தீபாவளி முடிந்த மறுநாளே பணிக்குத் திரும்பினேன்.



ஏஎஸ்பி அன்பழகன், கூலிம் மாவட்ட போலீஸ் தலைமையகம்

உயிரைக் காப்பாற்றும் பணியில் குடும்பத்தை நினைத்தாலும்...



நான் 15 ஆண்டுகளாக அம்புலன்ஸ் ஓட்டுநராகப் பணியாற்றுகிறேன். ஆபத்தான நிலையில் இருக்கும் நோயாளிகளை விரைவாக மருத்துவமனைக்குக் கொண்டுச் சேர்ப்பதே எங்கள் பணி. தீபாவளியன்று குடும்பத்தினர் வீட்டில் கொண்டாடிக் கொண்டிருக்கும்போது, அவசர அழைப்பு வந்தால் பணிக்குச் செல்ல வேண்டும். ஒரு தீபாவளியின்போது மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டிய இளைஞர் விபத்தில் சிக்கினார். அவரது கால் மற்றும் பாதத்தில் முறிவு ஏற்பட்டது. மது அருந்திவிட்டு வாகனம் ஓட்ட வேண்டாம் என்பதே என் வேண்டுகோள்..

வித்தியராஜன், சுபாங் ஜெயா



தீபாவளி நாளில் பணிக்குச் சென்றபோது விபத்தில் சிக்கினேன்

1997-ஆம் ஆண்டு களிமந்தானில் புகைமூட்ட நடவடிக்கைக்காக ஏறத்தாழ ஒரு மாதம் பணியாற்றியதால் தீபாவளியைக் கொண்டாட முடியவில்லை. மற்றொரு முறை, தீபாவளிக்கு முந்தைய இரவு பணியை முடித்துவிட்டு காலையில் மோட்டார் சைக்கிளில் ஊருக்குச் சென்றபோது விபத்தில் சிக்கினேன். காயமடைந்ததால் மூன்று நாட்களுக்குப் பிறகே வீட்டுக்குச் செல்ல முடிந்தது. மக்களின் பாதுகாப்புக்காகச் செயல்படுவதுதான் எங்கள் பொறுப்பு. வீட்டை விட்டுச் செல்லும்போது மின்சாரச் சாதனங்களையும் எரிவாயு இணைப்பையும் பாதுகாப்பாக அணைத்துவிட்டுச் செல்லுங்கள்.

ரவி பெருமாள், கோலாலம்பூர்

பலகாரங்களையும் புத்தாடைகளையும் முன்கூட்டியே தயாரிக்க வேண்டும்



குடிவரவுத் துறையில் 12 ஆண்டுகளாகப் பணியாற்றுகிறேன். தீபாவளிக்கு முந்தைய நாளிலும் பணிபுரிய வேண்டியிருப்பதால், புத்தாடைகள் மற்றும் பொருட்களை ஒரு மாதத்திற்கு முன்பே வாங்கிவிடுவேன். முறுக்கு, அச்சு முறுக்கு போன்ற பலகாரங்களையும் இரண்டு வாரங்களுக்கு முன்பே தயாரித்துவிடுவேன். முதல் நாள் விடுமுறை கிடைத்தாலும் மறுநாள் பணிக்குத் தயாராக இருக்க வேண்டும். திடீர் சோதனை அல்லது அவசர அழைப்பு வந்தால் உடனே செல்ல வேண்டியிருக்கும். எனவே, குடும்பத்தினருடன் தொலைதூரப் பயணங்களைத் திட்டமிடுவதில்லை..

ஷர்மிலா தேவி மோகன்,
கெடா மாநில குடிவரவுத் துறை



தீபாவளி விருந்தும் கடையில்தான்!

சாலைப் போக்குவரத்துத் துறையில் 12 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றுகிறேன். பண்டிகைக் காலத்தில் சோதனைகளும் அமலாக்க நடவடிக்கைகளும் அதிகரிப்பதால் பணிச்சுமையும் கூடும். கோவிட் காலத்தில் ஜோகூரில் இருந்தபோது குடும்பத்துடன் தீபாவளியைக் கொண்டாட முடியவில்லை. காலையில் கோவிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு, மீண்டும் பணிக்குத் திரும்பினேன். ஒரு தீபாவளியன்று குடும்பத்துடன் வீட்டில் உணவருந்துவதற்குப் பதிலாகக் கடையில் சாப்பிட்டேன். எப்போது அழைப்பு வரும் என்பது தெரியாததால், எனது தொலைபேசியை எப்போதும் இயக்கத்தில் வைத்திருப்பேன்.

சு. கோபிநாத் சுப்ரமணியம்,
கெடா மாநில சாலைப்
போக்குவரத்துத் துறை (JPJ)



தீபாவளிக்கு மறுநாள் தேர்வு... தந்தையின் அறிவுரை மறக்கவில்லை!

குவாந்தானில் பணியாற்றியபோது, தீபாவளிக்கு மறுநாள் துறைத் தேர்வு இருந்ததால் குடும்பத்துடன் கொண்டாட முடியவில்லை. அப்போது என் தந்தை, "முதலில் உன் வேலையையும் தேர்வையும் முடித்துவிட்டு வா. தீபாவளி ஒவ்வோர் ஆண்டும் வரும்" என்று ஆறுதல் கூறினார். 1998-ஆம் ஆண்டு கம்போங் பாண்டானில் ஏற்பட்ட தீ விபத்தில் தமிழர்களின் சுமார் பத்து வீடுகள் எரிந்து நாசமான சம்பவமும் மறக்க முடியாதது. பட்டாசுகளைப் பயன்படுத்தும்போது பெற்றோர் குழந்தைகளைக் கண்காணிப்பது அவசியம்.

எம். சுந்தராஜன், கோலாலம்பூர்

தடுப்பு முகாமில் கைதிகளுடன் பகிர்ந்த தீபாவளி இனிப்புகள்

குடிவரவுத் துறையில் 17 ஆண்டுகளாகப் பணியாற்றுகிறேன். அதில் 13 ஆண்டுகள் தடுப்பு முகாமில் பணியாற்றிய அனுபவம் உள்ளது. அங்கு தங்க வைக்கப்பட்டிருந்த இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்தவர்களுடன் தீபாவளிப் பலகாரங்களைப் பகிர்ந்து கொண்டது மறக்க முடியாத நினைவு. ஒருமுறை தீபாவளி நாளில் பயணம் செய்தபோது, வழியெங்கும் வானவேடிக்கைகளைப் பார்த்து குடும்பத்துடன் இருக்க முடியவில்லையே என்று வருந்தினேன். ஊரை அடைந்ததும் குடும்பத்துடன் கொண்டாடிய மகிழ்ச்சி அந்த வருத்தத்தைப் போக்கியது.

மாதவன் குமரசாமி,
கெடா மாநில குடிவரவுத் துறை



மூன்று நாள் விடுமுறை... ஒரே நாள்தான் கொண்டாட்டம்




கடந்த ஆண்டு ஒரு வாரம் விடுமுறை கேட்டும், முக்கியப் பணிகள் காரணமாகக் கிடைக்கவில்லை. தீபாவளிக்கு இரண்டு நாட்களுக்கு முன்புதான் ஈப்போவுக்குச் சென்று, கடைசி நேரத்தில் புத்தாடைகள் வாங்கி மற்ற ஏற்பாடுகளைச் செய்தேன். மூன்று நாள் விடுமுறை கிடைத்ததால் குடும்பத்துடன் தீபாவளியைக் கொண்டாட முடிந்தது. ஆனால், மறுநாள் காலையிலேயே கெடாவுக்குத் திரும்ப வேண்டியிருந்தது. குடும்பத்தினர் திட்டமிட்டிருந்த சந்திப்பையும் அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்க வேண்டியதாயிற்று. வருத்தம் இருந்தாலும், சீருடைப் பணியின் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

தர்ஷினி சந்திரன், கெடா மாநில
சாலைப் போக்குவரத்துத் துறை

தீபாவளியின் மகிழ்ச்சி ஒவ்வொரு வீட்டிலும் நிறையட்டும். அந்த மகிழ்ச்சியும் பாதுகாப்பும் நிலைத்திருக்க, பண்டிகை நாளிலும் கடமையில் நிற்கும் முன்னிலைப் பணியாளர்களின் அர்ப்பணிப்பையும் நாம் நினைவுகூர்வோம்.

16 ஆண்டுகளுக்குப் பிறகு தொலைக்காட்சியில் தமிழ் நாடகம் – விமர்சனத்தையும் நாடாளுமன்ற விவாதத்தையும் சந்தித்த ஒரு முன்னோடி முயற்சி. தீபாவளி நினைவுகளில் சில நிகழ்வுகள் காலம் கடந்தும் மறைவதில்லை. 1985-ஆம் ஆண்டு தீபாவளி தினத்தில் மலேசியத் தமிழர்களின் இல்லங்களில் ஒளிபரப்பான 'மத்தாப்பு' நாடகமும் அத்தகைய நினைவுகளில் ஒன்று. அது ஒரு தொலைக்காட்சி நாடகம் மட்டுமல்ல; விமர்சனத்தையும் விவாதத்தையும் உருவாக்கிய ஒரு நிகழ்வாகவும் பின்னர் நினைவுகூரப்பட்டது.



தீபாவளிவக்கு ஒளியேறிய 'மத்தாப்பு'

இ.எம். சாமி



மலேசியாவில் தமிழ் தொலைக்காட்சி நாடகங்கள் 1964-ஆம் ஆண்டு ஒளிபரப்பாகத் தொடங்கின. ஆனால் 1969-ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் நாடக ஒளிபரப்பு நின்றுவிட்டது. சுமார் 16 ஆண்டுகளுக்குப் பிறகு, 1985-ல் மீண்டும் ஒரு தமிழ் நாடகம் மலேசியத் தொலைக்காட்சித் திரைக்கு வந்தது.

அந்த நாடகம் 'மத்தாப்பு'. 1985 நவம்பர் 11-ஆம் தேதி, தீபாவளி தினத்தன்று காலை 11 மணிக்கு ஆர்.டி.எம். 2-ல் 30 நிமிடங்கள் ஒளிபரப்பானது.

தீபாவளியைக் கொண்டாடும் ஒரு குடும்பத்தை மையமாகக் கொண்ட கதை. ஒரு பண்டிகை நாளில் ஒரு குடும்பத்தின் வாழ்க்கையைத் தொலைக்காட்சி நாடகமாக மலேசியத் தமிழர்களின் இல்லங்களுக்குக் கொண்டு செல்வதே அதன் அடிப்படை நோக்கமாக இருந்தது.

இந்த நாடகத்தை தீபாவளி சிறப்பு நிகழ்ச்சியாகத் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் அப்போது ம.இ.கா. கலாசாரக் குழுத் தலைவராக இருந்த எம்.ஜி. பண்டிதனிடம் உருவானது. அந்த யோசனை, அப்போது ம.இ.கா. துணைத் தலைவராக இருந்த டத்தோ எஸ். சுப்பிரமணியம் மூலம் தகவல் அமைச்சராக இருந்த டத்தோ ராய்ஸ் யாத்திமின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

ஆர்.டி.எம். ஒளிபரப்பு நேரத்தை வழங்க ஒப்புக்கொண்டது. ஆனால் தயாரிப்புச் செலவை ம.இ.கா. ஏற்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. அப்போது குளோப் சில்க் ஸ்டோரின் உரிமையாளராக டான் ஸ்ரீ கிஷு, தயாரிப்புக்கான செலவை ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

'மத்தாப்பு' நாடகத்தை ராமா விஷன்ஸ் தயாரித்தது. குமார் தங்கையா இயக்குநராகப் பொறுப்பேற்றார். மனுராமலிங்கமும் துளசி கிருஷ்ணனும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தனர்.

குறைந்த கால அவகாசத்தில் நாடகத்தைத் தயாரிக்கும் பணி நடைபெற்றது. தொழில்நுட்பக் குழுவினரும் கலைஞர்களும் நீண்ட நேரம் உழைத்து, தீபாவளி தின ஒளிபரப்புக்குத் தயாரிப்பை முடித்தனர்.



ஆனால், நாடகம் ஒளிபரப்பான பிறகு எதிர்பார்ப்பு வேறு விதமாக மாறியது.

'மத்தாப்பு' எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்ற விமர்சனம் பார்வையாளர்களிடையே எழுந்தது. வாசகர்களிடமிருந்து கடுமையான விமர்சனங்கள் பத்திரிகைகளுக்கு வந்து குவிந்தன. ஒரு பத்திரிகைத் தலையங்கம், நாடகத்தை விமர்சிக்கும் வகையில் "மத்தாப்பு கித்தாப்பு ஆனது" என்று குறிப்பிட்டது.

நாடகத்தின் நகர்வும் தளர்வாக இருந்ததாக விமர்சிக்கப்பட்டது. மனுராமலிங்கமும் துளசி கிருஷ்ணனும் கிள்ளானில் ஆற்றின் அக்கரையில் உள்ள லிட்டில் இந்தியாவுக்குச் சென்று தீபாவளித் துணிமணிகளை வாங்கிக்கொண்டு, கைகளில் பைகளைச் சுமந்தபடி ஆற்றுப்பாலத்தின் வழியாக இக்கரைக்கு வந்து கொண்டே பேசும் காட்சியே நீண்ட நேரம் காட்டப்பட்டதாக அன்றைய பார்வையாளர்கள் குறை கூறினர்.

ஆனால் 'மத்தாப்பு' பற்றிய விவாதம் பத்திரிகைகளுடன் முடிந்துவிடவில்லை. அது நாடாளுமன்றத்துக்குள் சென்றது.

1985 நவம்பர் 28-ஆம் தேதி நாடாளுமன்றத்தில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவரும், கோத்தா மலாக்கா நாடாளுமன்ற உறுப்பினருமான லிம் கிட் சியாங், தீபாவளி தினத்தில் ஒளிபரப்பப்பட்ட 'மத்தாப்பு' நாடகத்தின் தரம் குறித்து கேள்வி எழுப்பினார். இந்த விவாதம் அதிகாரப்பூர்வ நாடாளுமன்ற ஹென்சார்ட் பதிவில் 8403 முதல் 8404 வரையிலான பக்கங்களில் இடம்பெற்றுள்ளது.

லிம் கிட் சியாங்கின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த அப்போதைய தகவல் அமைச்சர் டத்தோ ராய்ஸ் யாத்திம், 'மத்தாப்பு' நாடகம் தரம் குறைந்ததாகக் கூறப்பட்டதை மறுத்தார். மாறாக, நாடகம் சிறப்பாக அமைந்ததாகப் பாராட்டி இந்திய சமூகத்தினரிடமிருந்து தகவல் அமைச்சுக்கு அதிகமான கடிதங்கள் வந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறு, தீபாவளி நாளில் 30 நிமிடங்கள் ஒளிபரப்பான ஒரு தமிழ் நாடகம், பார்வையாளர்களின் விமர்சனத்தை மட்டுமல்லாமல் பத்திரிகைத் தலையங்கத்தையும், நாடாளுமன்ற விவாதத்தையும் சந்தித்தது. ஒரே நாடகத்தைப் பற்றி அப்போது சமூகத்தில் வெவ்வேறு கருத்துகள் இருந்ததை இந்த விவாதம் வெளிப்படுத்தியது.

ஆனால் 'மத்தாப்பு'வின் வரலாற்றுப் பொருள் அதன் தரத்தைப் பற்றிய விவாதத்தில் மட்டும் அடங்கிவிடவில்லை. 1969-க்குப் பிறகு 16 ஆண்டுகள் இடைவெளியில் இருந்த மலேசியத் தமிழ் தொலைக்காட்சி நாடகத்துக்கு அது மீண்டும் ஒரு வாயிலைத் திறந்தது.



அந்தப் பாதையில் பின்னர் மலேசியத் தமிழ் டெலிமூவி உலகமும் வளரத் தொடங்கியது. மலேசியாவின் முதலாவது தமிழ் டெலிமூவியாகக் குறிப்பிடப்படும் 'நான் ஒரு மலேசியன்' படத்தை சுகன் பஞ்சாரம் தயாரித்து, அதில் கதாநாயகனாகவும் நடித்தார். அதன் பின்னர் அவர் மேலும் பல நாடகங்களைத் தயாரித்தார்.

இன்று 1985 நவம்பர் 11-ஆம் தேதியைத் திரும்பிப் பார்க்கும்போது, காலை 11 மணிக்கு ஆர்.டி.எம். 2-ல் ஒளியேறிய அந்த 30 நிமிட 'மத்தாப்பு' ஒரு பழைய தொலைக்காட்சி நிகழ்ச்சி என்ற அளவில் மட்டும் தெரியவில்லை.

அது ஒரு காலத்தின் எதிர்பார்ப்பையும், அதன் மீதான கடுமையான விமர்சனத்தையும், அதற்குக் கிடைத்த ஆதரவையும் ஒரே நேரத்தில் பதிவு செய்த ஒரு நிகழ்வாகத் தெரிகிறது. அதைவிட முக்கியமாக, 16 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு மலேசியத் தமிழில் தொலைக்காட்சி நாடகத்துக்கு மீண்டும் ஒளியேற்றப்பட்ட ஒரு தீபாவளி விளக்காக 'மத்தாப்பு' நினைவில் நிற்கிறது.


PERAK
Selamat Hari
2026
Deepavali
Ikhlas daripada :
YAB Dato' Seri Saarani bin Mohamad
Menteri Besar Perak Darul Ridzuan
Serta Seluruh Anggota Pentadbiran Kerajaan Negeri Perak
MALAYSIA MADANI
2030 PERAK SEJAHTERA



மனம், மொழி, செயல் மூன்றாலும் தமக்கோ, மற்றவர்களுக்கோ, இந்தக் காலத்திலோ, எதிர்காலத்திலோ, அறிவுக்கும், உடல் வளர்ச்சிக்கும் துன்பம் ஏற்படாதவண்ணம் அளவோடும், முறையோடும் எல்லா செயல்களையும் செய்யும் பண்பாடுதான் ஒழுக்கம். உணவு வகை, எண்ணம், சொல், செயல், கொள்களுடைய சஞ்சாரம், சந்தர்ப்ப மோதல் என்ற இந்த ஆறும் உடல்நலம், உள்ளநலம் இவற்றின் சீர்குலைவுக்குக் காரணங்களாகும். ஆராய்ச்சி இல்லாத நம்பிக்கை தாழ்ப்பாள் இல்லாத கதவு போலாகும். லட்சியம் இல்லாத ஆராய்ச்சி கதவு இல்லாத வீடு போலாகும். காலம், இடம், தேவை, முயற்சி, பழக்கம், சந்தர்ப்பம், சூழ்நிலைகள் என்று ஏழு வகைகளில் நம்மிடம் பலவிதமான பழக்க வழக்கங்கள் உண்டாகிக் கொண்டே இருக்கின்றன. இயற்கை, சமுதாயம், சூழ்நிலை, தேவை, பழக்கம் என்ற ஐந்து கோணங்களையும் ஒப்பிட்டு சிந்தித்து செயல்பட வேண்டும். நம்முடைய முற்கால அனுபவமும், இக்கால சூழ்நிலையும், எதிர்கால விளைவுகளின் தொடரை மறவாமலும் வாழும் முழுமை பெற்ற அறிவே ஞானம். நம்மைப் போலவே மற்றவர்களுடைய உணர்வுகளுக்கு, குறிப்பாக பெண்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து வாழ்வதுதான் யோக முறையாகும். இந்த உண்மையை நமக்கு உணர்த்துவதற்காகத்தான் ஞானிகள் இறைவனை மாதொரு பாகனாக – அர்த்தநாரிசுவரனாக அமைத்து வழிபடச் சொல்லி இருக்கிறார்கள். இந்திய நாட்டில் காஷ்மீரத்தில் இருந்து கன்னியாகுமரி வரை எல்லா மக்களும் சேர்ந்து ஒரே நாளில் வழிபடும் திருநாள் தீபாவளித் திருநாள். ஜோதி மயமாக இருக்கும் இறைவனை தீபாவளியன்று காலையில் எண்ணெய் ஸ்நானம் செய்து நீராடி, புத்தாடை அணிந்து உலகம் எல்லா வளமும் பெற்று ஆன்மநேய ஒருமைப்பட்டு உரிமையுடன் வாழப் பிரார்த்திப்போம்.

ஆன்மநேய விழா
அற்புதத் தீப விழா!

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

யோகிராஜ் வேதாத்ரி மகரிஷி





KEMENTERIAN PENGAKUTAN
MALAYSIA

MALAYSIA MADANI

இனிய தீபாவளி
நல்வாழ்த்துகள்

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்!

உழைக்கும் கரங்கள் உயரட்டும்!

இளைஞர்களின் கனவுகள்
நனவாகட்டும்!

பெரியோர்களின் ஆசிகள் பெருகட்டும்!

நம் குழந்தைகளின் எதிர்காலம்
ஒளிமயமாக அமையட்டும்!

அன்புடன்,

மாண்புமிகு லோக் சியூ பூக்

போக்குவரத்து அமைச்சர்



தீபாவளி நாடகத்தில் தடம் பதித்த கலைஞன்

நடிப்பு என் மூச்சும் வாழ்க்கையும் க. குணசேகரன்

●- ரா.சங்கீதா

11 வயதில் தொடங்கிய கலைப் பயணம்; மலேசியத் தமிழ்த் தொலைக்காட்சியின் வரலாற்றில் அழியாத தடம்.

மலேசியத் தமிழ் கலைத்துறையில் பல தலைமுறை ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தவர் நடிகர் க. குணசேகரன். வானொலி நாடகங்களில் சிறுவனாகத் தொடங்கிய அவரது கலைப் பயணம், தொலைக்காட்சி, மேடை நாடகம், வெள்ளித்திரை எனப் பல தளங்களில் விரிவடைந்துள்ளது. ஆறு தசாப்தங்களாகத் தொடரும் இந்தப் பயணத்தில், கலை என்பது ஒரு தொழில் மட்டுமல்ல; அது வாழ்வோடு கலந்த உணர்வு என்பதைத் தனது அனுபவங்களால் உணர்த்துகிறார் அவர்.

திசைகளுக்கு வழங்கிய சிறப்புப் பேட்டியில், தனது ஆரம்பகாலக் கலை அனுபவங்கள், 1986-ஆம் ஆண்டு தீபாவளிக்கு ஒளிபரப்பான 'அடுத்த வீடு' தொலைக்காட்சிப் படம், வானொலியிலிருந்து கேமரா முன் நடிப்பதற்கு மாறியபோது எதிர்கொண்ட சவால்கள் எனப் பல நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார் க. குணசேகரன்.



திசைகள்: உங்கள் கலைப் பயணம் எவ்வாறு தொடங்கியது?

குணசேகரன்: எனது முழுப் பெயர் குணசேகரன் கருப்பையா. எனது தந்தையின் பெயரையும் இணைத்தே முழுப் பெயரைப் பயன்படுத்துகிறேன். ஆனால், திரையிலும் பெரும்பாலான இடங்களிலும் க.குணசேகரன் என்றே அறியப்படுகிறேன்.

எனக்கு 11 வயதாக இருந்தபோது நடிக்கத் தொடங்கினேன். இன்றுவரை அந்தப் பயணம் தொடர்கிறது. உண்மையைச் சொன்னால், நடிப்பு என் மூச்சும் வாழ்க்கையும்! (சிரிக்கிறார்) இத்தனை ஆண்டுகள் நடித்த பிறகும்கூட, எனது நடிப்பில் முழுமையான தேர்ச்சியை அடைந்துவிட்டதாகக் கூறமாட்டேன். ஒவ்வொரு நாளும் கற்றுக் கொண்டே இருக்கிறேன்.

சிறுவயது முதலே சுமார் 20 ஆண்டுகள் வானொலி நாடகங்களில் தொடர்ந்து நடித்தேன். ஆனால், எனது முகம் தொலைக்காட்சி வழியாகப் பரவலாக மக்களுக்குத் தெரியத் தொடங்கியது எனக்கு 31 வயதானபோதுதான்.

திசைகள்: 1986-ஆம் ஆண்டு தீபாவளிக்கு ஒளிபரப்பான 'அடுத்த வீடு' உங்கள் தொலைக்காட்சிப் பயணத்தில் ஒரு முக்கியமான திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. அந்த அனுபவம் எப்படி இருந்தது?

குணசேகரன்: அதற்கு முன்பு தொலைக்காட்சியில் எனது முகத்தைப் பார்த்து மக்கள் அடையாளம் கண்டு கொண்ட அனுபவம் எனக்குக் கிடையாது. 1986-ஆம் ஆண்டு தீபாவளிக்காக 'அடுத்த வீடு' ஒளிபரப்பானபோது, அது பலரது கவனத்தையும் ஈர்த்தது.

அந்தக் காலத்தில் உள்ளூர் நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் மிகக் குறைவாகவே இடம் பெற்றன. 'அடுத்த வீடு' ஒரு வழக்கமான நாடகமாக இல்லாமல், 16 மில்லிமீட்டர் திரைப்படச் சுருளில் படமாக்கப்பட்ட தொலைக்காட்சிப் படமாக அமைந்தது அதன் சிறப்புகளில் ஒன்று. மக்களின் வரவேற்பு காரணமாக அந்தப் படம் மூன்று முறை மறுஒளிபரப்புச் செய்யப்பட்டதாகவும்



நினைவுகூர்கிறேன். அந்தக் காலத்தில் நமது உள்ளூர் நாடகங்களைத் தொலைக்காட்சியில் பார்ப்பதே அரிதான விஷயம். அந்தப் படம் ஒளிபரப்பானபோது எனக்குள் ஏற்பட்ட உணர்வை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. வானத்திலிருந்து ஏதோ பெரிய அதிர்ச்சி வந்து தாக்கியதுபோல இருந்தது! உடலெல்லாம் சிலிர்த்தது.

அதற்குப் பிறகு எங்கு சென்றாலும் மக்கள் என்னை அடையாளம் காணத் தொடங்கினர். அது என் வாழ்க்கையில் மறக்க முடியாத திருப்புமுனையாக அமைந்தது.



குணசேகரன்: அந்த அனுபவத்தை இன்றும் மறக்க முடியாது. அப்போது செய்தித்தாள்களில் நடிப்புக்கான விளம்பரங்கள் தொடர்ந்து வெளியாகும். நாங்கள் தொலைக்காட்சி நிலையங்களுக்கும் திரையரங்குகளுக்கும் சென்று படப்பிடிப்புகளில் பங்கேற்போம். தீபாவளியை முன்னிட்டு நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வோம்.

பலரும் நேர்முகத் தேர்வுகளுக்குச் சென்றனர். அனைவரையும் சந்தித்த பிறகு, இயக்குநரும் தயாரிப்பாளருமான சுகன் பஞ்சாச்சரம் என்னைத் தனியாக அழைத்து நடிப்புத் தேர்வு நடத்தினார். அதன் பிறகே 'அடுத்த வீடு' படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

திசைகள்: சுமார் 20 ஆண்டுகள் வானொலியில் நடித்துவிட்டு, கேமரா முன் நடிப்பதற்கு மாறியபோது சிரமங்களை எதிர்கொண்டீர்களா?

குணசேகரன்: வசனங்களைப் பேசுவது, கதாபாத்திரத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துவது போன்றவற்றில் நான் புதிதாகத் தொடங்க வேண்டியிருக்கவில்லை. வானொலி எனக்கு மிகச் சிறந்த பயிற்சிக் களமாக இருந்தது.

வசனங்களைச் சரியாக உச்சரிப்பது, உணர்ச்சியுடன் பேசுவது, நீண்ட வசனங்களைக்கூட இயல்பாக வெளிப்படுத்துவது ஆகியவற்றை வானொலி கற்றுக் கொடுத்தது. அதனால், வானொலியில் பேசும் நீண்ட வசனங்களுடன் ஒப்பிடும்போது தொலைக்காட்சியில் பேச வேண்டிய குறுகிய வசனங்கள் எனக்கு ஓரளவு எளிதாகவே இருந்தன.

ஆனால், கேமரா முன் நடிப்பது முற்றிலும் புதிய அனுபவமாக இருந்தது. வானொலியில் நமக்கு முன்னால் ஒரு ஒலிவாங்கி மட்டுமே இருக்கும். தொலைக்காட்சிப் படப்பிடிப்பில் கேமரா நமது ஒவ்வோர் அசைவையும் பதிவு செய்யும். அதே நேரத்தில், தலைக்கு மேலே ஒலியைப் பதிவு செய்யும் ஒலிவாங்கியும் தொங்கிக் கொண்டிருக்கும்.




ஒளியமைப்பும் மிகத் துல்லியமாகக் கையாளப்படும். குறிப்பிட்ட இடத்தில் நின்று நடிக்க வேண்டும். அந்த இடத்தைவிட்டு நகர்ந்தால் ஒளியமைப்பு மாறிவிடும். எங்கு நடக்க வேண்டும், எங்கே திரும்ப வேண்டும், எங்கே நிற்க வேண்டும் என்பதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு இயல்பாக நடிக்க வேண்டியிருந்தது. தரையில் குறிக்கப்பட்ட இடங்களைப் பார்த்துக் கொண்டே நடிக்க முடியாது.

அதேபோல், கேமராவின் லென்ஸை நேரடியாகப் பார்த்துப் பேசாமல், அதற்கு அருகிலுள்ள ஒரு குறிப்பிட்ட திசையைப் பார்த்துப் பேசுவதையும் கற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. தொடக்கத்தில் இவை அனைத்தும் எனக்குப் புதிய சவால்களாக இருந்தன.

திசைகள்: அந்த ஆரம்பகாலச் சிரமங்களை எப்படிக் கடந்து வந்தீர்கள்?

குணசேகரன்: இயக்குநர் சுகன் பஞ்சாச்சரம் மிகவும் பொறுமையாக எங்களுக்கு வழிகாட்டினார். படப்பிடிப்புக் குழுவினரும் எந்த இடத்திற்குள் நிற்க வேண்டும்,





கேமராவின் எல்லை எது, எப்போது அசைய வேண்டும் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்வார்கள்.

பயிற்சிதான் ஒருவரைச் செம்மைப்படுத்தும். தொடர்ந்து பயிற்சி செய்ததால் எனது தவறுகளைப் படிப்படியாகத் திருத்திக் கொண்டேன். முதல் இரண்டு படைப்புகளில் சில சிரமங்களை எதிர்கொண்டேன். ஆனால், காலப்போக்கில் கேமரா முன் இயல்பாக நடிப்பதற்குப் பழகிக் கொண்டேன்.

வானொலியில் பெற்ற அனுபவம் எனக்கு அடித்தளமாக இருந்தது. அதனுடன் தொலைக்காட்சி நடிப்புக்கான புதிய நுட்பங்களையும் கற்றுக் கொண்டபோது, அந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடிந்தது.

திசைகள்: 'அடுத்த வீடு' படத்திற்குப் பிறகு உங்கள் தீபாவளி தொலைக்காட்சிப் பயணம் எவ்வாறு தொடர்ந்தது?

குணசேகரன்: 'அடுத்த வீடு' படத்திற்குப் பிறகும் தீபாவளிச் சிறப்புப் படைப்புகளில் நடிக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. 'நல்ல மனசு', 'அன்பு வழி'



போன்ற படைப்புகளும் எனது கலைப் பயணத்தில் முக்கியமானவை. அவை ரசிகர்களுடன் எனக்கிருந்த தொடர்பை மேலும் வலுப்படுத்தின.

இன்றுவரை வானொலி நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், தொலைக்காட்சிப் படங்கள் எனப் பல்வேறு படைப்புகளில் பங்கேற்றுள்ளேன். கலைத்துறையில் இத்தனை ஆண்டுகள் தொடர்ந்து பயணிக்க முடிந்திருப்பதைப் பெரும் வாய்ப்பாகவே கருதுகிறேன்.





தீபாவளி தந்த திருப்புமுனை; தொடரும் கலைப் பயணம்

வானொலியில் தொடங்கிய கலைப் பயணம், தொலைக்காட்சியில் புதிய பரிமாணம் பெற்று, மேடை நாடகங்களிலும் திரைப்படங்களிலும் தொடர்ந்துள்ளது. பல்வேறு கதாபாத்திரங்களை ஏற்று நடித்துள்ள க. குணசேகரன், ஒவ்வொரு படைப்பும் தனக்குப் புதிய அனுபவத்தையும் பாடத்தையும் வழங்குவதாகக் கருதுகிறார். வானொலியில் குரலால் ரசிகர்களைச் சென்றடைந்தவர், பின்னர் தொலைக்காட்சித் திரையில் முகத்தாலும் நடிப்பாலும் மக்களின் மனதில் இடம் பிடித்தார். அந்த மாற்றத்தின் பின்னணியில் இருந்த பயிற்சி, பொறுமை, கற்றல் ஆர்வம் ஆகியவையே அவரது நீண்ட கலைப் பயணத்தின் அடித்தளங்கள்.

ஒரு கலைஞனின் வெற்றி என்பது விருதுகளின் எண்ணிக்கையால் மட்டும் அளவிடப்படுவதில்லை. காலம் மாறினாலும் கலை மீதான ஆர்வம் குறையாமல் தொடர்ந்து பயணிப்பதில்தான் அதன் உண்மையான பெருமை இருக்கிறது.

"நடிப்பு என் மூச்சும் வாழ்க்கையும்" என்ற க. குணசேகரனின் வார்த்தைகள் வெறும் உணர்ச்சிப் பெருக்கல்ல. 11 வயதில் தொடங்கி ஆறு தசாப்தங்களாகத் தொடரும் அவரது கலைப் பயணத்தின் சாராம்சம் அது.

க. குணசேகரன் கலைப் பயணத்தின் மைல்கற்கள்

பிறந்த தேதி : 5 நவம்பர் 1955.

பெற்றோர் : வெ. கருப்பையா, குமார சின்னப்பிள்ளை.

கல்வி : ஜாலான் சன் பெங் தமிழ்ப்பள்ளி, கோலாலம்பூர்.

குடும்பம் : மனைவி ரா. ராசம்மா, ஓய்வுபெற்ற தலைமையாசிரியை. மகள் கு. நித்தியாம்பிகை, மருத்துவர். மகன் கு. குமரகுரு, பொறியாளர்.

1966 : சிலாங்கூர் மாநிலத் தமிழ்ப்பள்ளிகளுக்கு இடையிலான நாடகப் போட்டியில் இளங்கோ துறவு நாடகத்தின் மூலம் இரண்டாம் பரிசு. அதே ஆண்டு மலேசிய வானொலியில் சிறுவர் நட்சத்திரமாக அறிமுகம்.

1967-1982: கல்வி அமைச்சின் வானொலிக் கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

வானொலி: இதுவரை ஏறத்தாழ 1,300 நாடகங்கள்.

தொலைக்காட்சி: 1986-ஆம் ஆண்டு 'அடுத்த வீடு'; தொடர்ந்து 'நல்ல மனசு', 'அன்பு வழி' உள்ளிட்ட தீபாவளிச் சிறப்புப் படைப்புகள். இதுவரை ஏறத்தாழ 140 தொலைக்காட்சி நாடகங்கள், படங்கள், தொடர்கள்.

மேடை நாடகங்கள்: இளங்கோ துறவு, மகாபாரதத்தில் பீஷ்மர், பொன்னியின் செல்வன், யோபு, சாணக்கிய சபதம், கரிகாற்சோழன்.

திரைப்படங்கள்: நான் ஒரு மலேசியன் (1992), அச்சம் தவிர், கீதையின் ராதை, வீமன், அழகிய தீ. கபாலி, வேலைக்காரன் ஆகிய தமிழ்த் திரைப்படங்களில் சிறப்புத் தோற்றம்.

அனைத்துலக படைப்பு: Indian Summer பிரிட்டிஷ் தொடர் (2015).


விளம்பரப் படம்: PETRONAS தீபாவளி விளம்பரம் (2018).

முக்கிய விருதுகள்: 1989-ஆம் ஆண்டு Malaysian Indian Music Awards சிறந்த தொலைக்காட்சி ஆண் கலைஞர் விருது; 2017-ஆம் ஆண்டு கலைமகள் ஈவண்ட் மேனஜ்மண்ட் வாழ்நாள் சாதனையாளர் விருது; 2020-ஆம் ஆண்டு விமர்சகன் மீடியாவின் கே. எஸ். மணியம் விருது; 2022-ஆம் ஆண்டு மலேசிய சிவாஜி கணேசன் கலை மன்றத்தின் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விருது; 2023-ஆம் ஆண்டு "நம்பிக்கை" கலைத்துறை வாழ்நாள் சாதனையாளர் விருது; 2024-ஆம் ஆண்டு மலேசிய முத்தமிழ் சங்கம் கலை மற்றும் கலாச்சார விருது; MICA விருது, மூன்றாவது நிகழ்வில் வாழ்நாள் சாதனையாளர் விருது; 2025-ஆம் ஆண்டு மலேசிய இந்திய கலைஞர்கள் அறவாரியம் (YASI) சிறந்த வானொலி நாடக நடிகர் விருது.



















அந்தத் தீபாவளி வாழ்த்துக் கார்டுகள்

சில நினைவுகள் பழையவை அல்ல... அவை நம்மை விட்டுப் போகாதவை.

இன்று தீபாவளி வாழ்த்து என்றால் கைபேசி நினைவுக்கு வருகிறது. ஒரு படம், ஒரு வாழ்த்து வாசகம். ஒரு விரல் தொடுதலில் நூற்றுக்கணக்கானோருக்கு அனுப்பிவிடலாம்.

ஆனால் ஒரு காலத்தில் தீபாவளி வாழ்த்து அப்படியில்லை. அது நம்மை வந்தடைய சில நாட்கள் காத்திருக்க வேண்டும். அந்தக் காத்திருப்பிலேயே ஒரு தனி மகிழ்ச்சி இருந்தது.

தீபாவளி நெருங்கும் நாட்களில் கடைகளில் வண்ணமயமான வாழ்த்துக் கார்டுகள் வரிசையாகத் தொங்கும். தீபங்கள், மலர்கள், கோலங்கள், கோயில் காட்சிகள் மட்டுமல்ல அக்காலத்தில் பிரபலமாக இருந்த சினிமா நடிகர், நடிகைகளின் படங்களுடன் கூடிய தீபாவளி கார்டுகளும் இளைஞர்களையும் குழந்தைகளையும் வெகுவாகக் கவர்ந்தன.

யாருக்கு எந்தக் கார்டு பிடிக்கும் என்று நினைத்துப் பார்த்து தேர்ந்தெடுப்போம். வாங்கிய பிறகு, அதில் நம் கையெழுத்தில் சில வரிகளை எழுதுவோம்.

''இனிய தீபாவளி நல்வாழ்த்துகள் ''

சில வரிகள்தான். ஆனால் அந்த எழுத்துகளில் நம்முடைய அன்பு இருந்தது.

அதில் ஒரு தனி உலகம் இருந்தது. பள்ளி, கல்லூரி நண்பர்கள், சக பணியாளர்களின் வாழ்த்துக் கார்டுகளில்.

சக மாணவர்கள் அனுப்பிய கார்டுகளைப் பெறுவது ஒரு தனி மகிழ்ச்சி. குறிப்பாக நெருங்கிய நண்பர் அல்லது வகுப்புத் தோழர் அனுப்பிய கார்டு என்றால், அதை மற்ற கார்டுகளைவிட கவனமாகப் பாதுகாப்போம்.

அதிலும் வீட்டுக்குள் ஒரு சின்னப் போட்டியே நடக்கும்.


''இந்த வருடம் யாருக்கு அதிகமான தீபாவளி கார்டுகள் வந்திருக்கின்றன?

என்று சகோதரர்கள் ஒருவரை ஒருவர் எண்ணிப் பார்ப்பார்கள். ஒருவருக்கு பத்து கார்டுகள்.

இன்னொருவருக்கு பதினைந்து.

''எனக்குத்தான் அதிகம்! என்று பெருமைப்பட்டுக் கொள்வோம்.

அந்தக் காலத்தில் அதிகமான வாழ்த்துக் கார்டுகள் வருவது, அந்த வீட்டில் அந்த நபருக்கு எவ்வளவு நண்பர்கள் இருக்கிறார்கள் என்பதற்கான ஒரு சிறிய பெருமையாகவே இருந்தது.



முகவரி எழுதி, தபால் தலை ஒட்டி, தபால் பெட்டிக்குள் போடும்போது ஒரு சிறிய பிரார்த்தனையும் இருக்கும்.

''சரியாகப் போய்ச் சேர வேண்டும் ''

பின்னர் தொடங்கும் இன்னொரு காத்திருப்பு.

நமக்கான வாழ்த்துக் கார்டு எப்போது வரும்?

தபால்காரர் தெருவில் நும்போதெல்லாம் கண்கள் அவரைத் தேடும். கையில் ஒரு வண்ண உறை தெரிந்தால் மனம் துள்ளும்.

உறையைத் திறந்தால் தொலைவில் இருக்கும் உறவினர் ஒருவரின் பெயர்.

பல மாதங்களாகப் பார்க்காத நண்பரின் வாழ்த்து.

பிற மாநிலங்களில் இருக்கும் அண்ணன், அக்காவின் அன்பு.

அல்லது நம்மை நினைத்த ஒருவர் அனுப்பிய ஒரு சிறிய அட்டை.

அந்தக் கார்டில் அச்சிடப்பட்டிருந்த வாழ்த்தைவிட, கடைசியில் இருந்த அந்தக் கையெழுத்துதான் நம்மை அதிகமாகத் தொடும்.

ஏனென்றால் அந்தக் கையெழுத்துக்குப் பின்னால் ஒரு மனிதர் இருந்தார். ஓர் உறவு இருந்தது. ஒரு நினைவு இருந்தது.

அந்தக் கார்டுகள் வந்தவுடன் அவற்றை வீட்டின் வரவேற்பறையில் அழகாகத் தொங்கவிடுவதும் அன்றைய தீபாவளியின் ஒரு பகுதிதான்.

வீட்டின் மின்விசிறிக்குக் கீழே எக்ஸ் வடிவில் நூல்களைக் கட்டி, அந்த நூல்களில் ஒன்றன் பின் ஒன்றாக தீபாவளி வாழ்த்துக் கார்டுகளைத் தொங்கவிடுவோம்.

வரவேற்பறைக்குள் நுழைந்தவுடன் கண்களில் படுவது அந்த வண்ணமயமான கார்டுகள்தான்.









அது ஓர் அலங்காரம் மட்டுமல்ல. அந்த வீட்டின் தீபாவளி மகிழ்ச்சியின் அடையாளம்.

யாருக்கு அதிகமான கார்டுகள் வந்திருக்கின்றன என்பதும் அங்கே தெரிந்துவிடும்!

சில வீடுகளில் அந்த நூல்கள் முழுவதும் கார்டுகளால் நிரம்பியிருக்கும். ஒவ்வொரு கார்டும் ஓர் உறவைச் சொல்லும். ஒரு நண்பரை, ஓர் உறவினரை, ஒரு வகுப்புத் தோழரை, ஒரு தொலைதூர மனிதரை நினைவுபடுத்தும்.

தீபாவளி முடிந்த பின்னரும் சில நாட்கள் அந்தக் கார்டுகள் அப்படியே தொங்கிக் கொண்டிருக்கும்.

வந்த கார்டுகளை அப்படியே தூக்கி எறிய மனம் வராது. புத்தகங்களுக்கு இடையில், அலமாரியின் ஒரு மூலையில், பழைய பெட்டிக்குள் என்று பத்திரமாக வைத்திருப்போம்.

ஆண்டுகள் கழித்து அந்தப் பெட்டி திறக்கப்படும். ஒரு பழைய கார்டு கண்ணில் படும்.

அதில் இருக்கும் கையெழுத்தைப் பார்த்தவுடன் ''அட இவரா இதை அனுப்பியிருந்தார்?'' என்று மனம் திடுக்கிடும்.

அந்த முகம் நினைவுக்கு வரும். அந்தக் குரல் நினைவுக்கு வரும். அந்த வீட்டின் நினைவு வரும். ஒரு காலத்தில் சேர்ந்து கொண்டாடிய தீபாவளி நினைவுக்கு வரும்.

சில நேரங்களில் அந்தக் கார்டை அனுப்பியவர் இன்று நம்முடன் இல்லாமல் இருக்கலாம்.

அப்போது அந்தச் சிறிய காகித அட்டை திடீரென்று மிகவும் கனமாகிவிடும்.

அது ஒரு வாழ்த்துக் கார்டாக மட்டும் இருக்காது. ஒரு காலத்தின் நினைவாக மாறிவிடும்.

இன்று கைபேசி வாழ்த்துகள் நொடியில் வந்து சேர்கின்றன. வேகம் அதிகம். வசதி அதிகம். தொலைவு இல்லை.

ஆனால் அந்தப் பழைய வாழ்த்துக் கார்டுகளோடு இருந்த காத்திருப்பு, கையெழுத்து, எதிர்பார்ப்பு, நண்பர்களின் போட்டி, வீட்டின் வரவேற்பறை அலங்காரம், நினைவாகச் சேமித்தல் ஆகியவை எங்கே போயின?

ஒருவேளை இந்தத் தீபாவளியில் வீட்டின் பழைய அலமாரியைத் திறந்து பாருங்கள்.

மஞ்சள் பிடித்த ஒரு பழைய கார்டு இன்னும் அங்கே இருக்கலாம். வண்ணம் மங்கியிருக்கலாம்.

அதில் இருந்த சினிமா நட்சத்திரத்தின் முகமும் காலத்தால் மங்கியிருக்கலாம்.

ஆனால் உள்ளே இருக்கும் ஒருவரின் கையெழுத்து இன்னும் தெளிவாக இருக்கலாம்.

அந்த எழுத்தை மீண்டும் படித்துப் பாருங்கள்.

ஒரு காலத்தில் உங்களை நினைத்த ஒருவரின் அன்பு அங்கே இன்னும் இருக்கலாம்.

அவை வெறும் காகிதங்கள் அல்ல நம் வாழ்வின் சில பக்கங்கள்.

அந்தப் பக்கங்களைத் திருப்பும்போது ஒரு புன்னகை வரலாம். ஒரு பெருமூச்சு வரலாம். அல்லது விழியோரத்தில் ஒரு துளி கண்ணீர் கசியலாம்.

-ஆர். சங்கீதா

SELANGOR

SAMBUTAN HARI

Deepavali

தீபாவளி கொண்டாட்டம்

PERINGKAT NEGERI SELANGOR 2026

14 NOVEMBER 2026 (SABTU)

6.00 PETANG - 11.30 MALAM

DATARAN KLANG @
PADANG CHETTY, KLANG

Cahaya Perpaduan, Selangor Sejahtera



Y.A.B DATO' SERI AMIRUDIN BIN SHARI
DATO' MENTERI BESAR SELANGOR



Y.B TUAN PAPPARAIDU A/L VERAMAN
EXCO SUMBER MANUSIA & PEMBASMIAN KEMISKINAN

MALAYSIA MADANI

KITASELANGOR

மலேசியாவின் முதல் இந்தியப் பெண் தொலைக்காட்சி நாடக இயக்குநர் – தேவராணி

ரா.சங்கீதா



மலேசியத் தமிழ்த் தொலைக்காட்சி வரலாற்றில் தனக்கென அழியாத இடத்தைப் பிடித்தவர் கே. தேவராணி. சிலாங்கூர், கோலா குபு பாருவில் ஜவர் கொண்ட குடும்பத்தில் பிறந்த இவர், சிறு வயதிலேயே நடனம், பாடல், நாடகம் எனக் கலைகளில் ஆர்வம் கொண்டிருந்தார். தந்தையின் எதிர்ப்பையும் மீறி, சொந்த ஊரிலுள்ள கோயில்களில் நடத்தப்பட்ட பரதநாட்டிய வகுப்புகளில் சேர்ந்து தனது கலை ஆர்வத்தை வளர்த்துக் கொண்டார். பின்னர் நிறுவனச் செயலாளர் பட்டப்படிப்பை முடித்து, பாங்கியில் உள்ள ஜப்பானிய நிறுவனம் ஒன்றில் 15 ஆண்டுகள் செயலாளராகப் பணியாற்றினார்.



பாடகியாக வேண்டும் என்ற கனவுடன் தனது பாடலைப் பதிவு செய்து வானொலிக்கு அனுப்பியபோது, தமிழ்மொழிப் புலமை போதாது என்று கூறி அது நிராகரிக்கப்பட்டது. ஆனால், அந்த மறுப்பு அவரது கலைப் பயணத்துக்கு ற்றுப்புள்ளியாகவில்லை. வானொலியில் தொடங்கிய பயணம் தொலைக்காட்சிக்கு விரிந்தது. 1991ஆம் ஆண்டு 'ஒரு விடியலை நோக்கி' என்ற தமிழ் நாடகத்தை எழுதி, தயாரித்து, இயக்கியதன் மூலம் மலேசியாவின் முதல் இந்தியப் பெண் தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் என்ற வரலாற்றுச் சிறப்பைப் பெற்றார். அவரது முதல் தயாரிப்பே பெரும் வெற்றியடைந்து, அவரைத் தனித்துவமான இயக்குநராக அடையாளப்படுத்தியது.

ஆர்.டி.எம். வானொலி தமிழ் நாடகத் தயாரிப்பாளர் சந்திராசூரியா வழங்கிய வாய்ப்பின் மூலம் தொடர் நாடகங்களில் சிறு சிறு பாத்திரங்களில் தேவராணி ஏற்று நடித்து வந்தார். பின்னர் மேடை நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பையும் பெற்றார். சில நாடகங்களுக்கு பிறகு பெரும் திருப்புமுனையாக ரெ.சா. ஆனந்தன் இயக்கிய தொலைக்காட்சி நாடகமான 'வாசுகி நீ வாழ்க' தேவராணிக்கு பெரும் புகழைத் தேடி தந்தது. திசைகளின் தீபாவளி சிறப்பு இதழுக்காக அவர் அளித்த நேர்காணலை காணலாம்.

கேள்வி: உங்கள் தொலைக்காட்சிப் பயணம் எப்படித் தொடங்கியது?

தேவராணி: மின்னல் வானொலியில் வானொலி நாடகங்களில் குரல் கொடுத்ததுதான் எனது கலைப் பயணத்தின் தொடக்கம். பின்னர் Tumpon Mengkuang என்ற தீபாவளி சிறப்பு நாடகத்தில் ராதியா கதாபாத்திரத்தில் நடித்தேன். தொலைக்காட்சி கேமரா முன் நின்றது எனக்குப் புதிய அனுபவம். தீபாவளியன்று குடும்பத்தினருடன் அமர்ந்து என்னைத் தொலைக்காட்சியில் பார்த்தபோது அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. அதன்பிறகு ஒவ்வொரு முறை தொலைக்காட்சியில் தோன்றும்போதும் தேர்வு எழுதி, அதில் வெற்றி பெற்று நல்ல மதிப்பெண் பெற்றதைப் போன்ற உணர்வு இருக்கும்.

என்னைத் தொலைக்காட்சிக்கு அறிமுகப்படுத்திய மறைந்த மூத்த கலைஞர் மனுராமலிங்கத்தையும், ஆரம்ப காலத்தில் வழிகாட்டிய தயாரிப்பாளர் பார்த்தசாரதியையும் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

கேள்வி: 1991ஆம் ஆண்டு உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது எப்படி?

தேவராணி: அந்த ஆண்டுதான் ''ஒரு விடியலை நோக்கி'' என்ற தீபாவளி சிறப்பு நாடகத்தை நானே எழுதி, தயாரித்து, இயக்கினேன். மலேசியாவில் இந்தியப் பெண் ஒருவர் தொலைக்காட்சி நாடகத்தை இயக்கிய முதல் நிகழ்வாக அது அமைந்தது. ஆனால், அந்தக் காலத்தில் பெண் இயக்குநராகப் பணியாற்றுவது எளிதல்ல. ஆதரவு கிடைப்பதற்குப் பதிலாக, முன்னேற விடாமல் தடுப்பவர்களையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

இருப்பினும், அந்த நாடகம் பெரும் வரவேற்பைப் பெற்றது. எனக்குப் பெயரையும் அங்கீகாரத்தையும் தேடித் தந்தது. எனது முதல் தயாரிப்பும் முதல் இயக்கமும் என்பதால், அந்தப் படைப்பு இன்றளவும் என் மனதுக்கு மிக நெருக்கமானது.





தலைமுறையினருக்கும் அறிமுகப்படுத்த விரும்பினேன்.

தெய்வீகக் கதாபாத்திரத்தில் நடிப்பவர்கள் அந்தப் பாத்திரத்தின் புனிதத்தன்மையைப் புரிந்து கொண்டு உரிய மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது என் நம்பிக்கை. அதேவேளை, படப்பிடிப்பின்போது எனது செல்ல நாய்க்குட்டியை இழந்த சம்பவமும் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. இந்த அனுபவங்கள் உயிர்கள் மீதான அக்கறையையும் பொறுப்புணர்வையும் எனக்கு நினைவூட்டின.

கேள்வி: இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

தேவராணி: எங்கள் காலத்தில் குறைந்த செலவில், நேரடிப் பாரம்பரிய உடைகளையும் மிகப் பிரம்மாண்டமாகக் காட்சிப்படுத்த முடியும். மீண்டும் ஒரு தீபாவளி நிகழ்ச்சியை உருவாக்கும் வாய்ப்பு கிடைத்தால், தமிழ் இலக்கியத்தையும் பண்பாட்டையும் இன்னும் அழகாகத் திரையில் கொண்டு வரப் பல புதிய யோசனைகள் என்னிடம் உள்ளன.

தொழில்நுட்பம் மாறிக் கொண்டே இருந்தாலும், தீபாவளி நிகழ்ச்சிகளின் உயிர்நாடி நமது பண்பாட்டைப் போற்றுவதிலும், இலக்கியத்தைப் பாதுகாப்பதிலும், தலைமுறைகளை இணைக்கும் கதைகளைச் சொல்வதிலும்தான் இருக்கிறது.



கேள்வி: உங்கள் இசைச் சிறப்பு நிகழ்ச்சிகளில் தனித்துவம் என்ன?

தேவராணி: தமிழ் இலக்கியம், வரலாற்றுப் பின்னணி, பழங்காலக் கலை அழகியல் ஆகியவற்றை இணைத்து நிகழ்ச்சிகளை உருவாக்குவதில் எனக்கு எப்போதும் ஆர்வம் உண்டு. கண்ணன், ராதை, யசோதை போன்ற கதாபாத்திரங்களை மையமாகக் கொண்ட நிகழ்ச்சிகளில் பழைய தமிழ்த் திரைப்படப் பாடல்களையும் தேர்ந்தெடுத்து மறுசீரமைத்துப் பயன்படுத்தினேன். 1950களில் வெளியான ''என்னடி அநியாயம் இது'' போன்ற பாடல்களை இளைய



பின்னணிகளையும் கையால் தயாரிக்கப்பட்ட பொருட்களையும் வைத்தே நிகழ்ச்சிகளை உருவாக்கினோம். இன்று கணினி வரைகலை (CGI), செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற தொழில்நுட்பங்கள் மூலம் வரலாற்றுச் சூழல்களையும்



MALAYSIA MADANI

Selamat Hari

Deepavali

இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்



Hannah Yeoh
Menteri di Jabatan Perdana Menteri
(Wilayah Persekutuan)
Ahli Parlimen Segambut



மலேசியத் தமிழ்த் தொலைக்காட்சியில் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகள் மக்களின் பொழுதுபோக்கின் மையமாகத் திகழ்ந்த காலம் அது. 1980களின் பிற்பகுதியிலிருந்து 2000களின் தொடக்கம் வரை தனது துடிப்பான நடனத்தாலும் தனித்துவமான ஆளுமையாலும் ரசிகர்களைக் கவர்ந்தவர் சிட்டி டான்சர் மணிமாறன்.

1986ஆம் ஆண்டு சுகூஆ தொலைக்காட்சியின் தீபாவளி நிகழ்ச்சியில் முதன்முதலாகத் தோன்றிய அவரது கலைப் பயணம், பின்னர் மலேசியா முழுவதும் ரசிகர்களின் அன்பையும் வெளிநாடுகளில் நிகழ்ச்சிகளைப் படைக்கும் வாய்ப்புகளையும் பெற்றுத் தந்தது. தொலைக்காட்சிப் படப்பிடிப்புகளின் பிரம்மாண்டம், மாதந்தோறும் குவிந்த ரசிகர் கடிதங்கள், நாட்டின் பல பகுதிகளில் கிடைத்த வரவேற்பு, வெளிநாட்டு மேடை அனுபவங்கள் எனப் பல இனிய நினைவுகளைத் திசைகளுடன் பகிர்ந்து கொள்கிறார் மணிமாறன்.

தீபாவளித் தொலைக்காட்சியின் நடன நட்சத்திரம்

சிட்டி டான்சர் மணிமாறன்: மறக்க முடியாத பொற்கால நினைவுகள்

-ரா. சங்கீதா



கேள்வி: உங்கள் முதல் தொலைக்காட்சி நிகழ்ச்சி, குறிப்பாகத் தீபாவளி நிகழ்ச்சி, எப்போது ஒளிபரப்பானது?

1986ஆம் ஆண்டுதான் எனது முதல் தொலைக்காட்சி நிகழ்ச்சியும் முதல் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சியும் சுகூஆ வழியாக ஒளிபரப்பாயின. அப்போது கோலாலம்பூரைத் தளமாகக் கொண்ட பிரகாஷ் நடனக் குழுவில் இடம் பெற்றிருந்தேன். அந்தக் குழுவின் மூலம் தேசியத் தொலைக்காட்சியில் நடனமாடும் வாய்ப்பு கிடைத்தது. தொலைக்காட்சியில் என்னைப் பார்த்த அந்தத் தருணம், என் கனவு நனவானதைப் போன்ற மகிழ்ச்சியைத் தந்தது.

கேள்வி: முதல் தீபாவளி நிகழ்ச்சியின் நினைவுகளில் முதன்மையாக இருப்பது எது?

கேமரா முன் நடனமாடுவது எனக்குப் பெரிய பதற்றத்தை ஏற்படுத்தவில்லை. நடனத்தின் மீதிருந்த ஆர்வத்தால் ஒவ்வொரு நொடியையும் ரசித்தேன். கேமரன் ஹைலண்ட்ஸின் இயற்கை எழில் சூழ்ந்த பகுதியில் படப்பிடிப்பு நடைபெற்றது. ‘‘விவசாயி’’ என்ற புகழ்பெற்ற பாடலுக்கு நாட்டுப்புற நடனம் ஆடியது இன்றும் நினைவில் இருக்கிறது. ஸ்ரீ சண்முகநாதன் ஐயா, டத்தோ பட்டம் பெறுவதற்கு முந்தைய காலத்தில் னுது னுயஎந ஆகியோருடன் ஒரே மேடையில் நிகழ்ச்சி வழங்கியதும் மறக்க முடியாத அனுபவம்.

கேள்வி: அக்காலத் தொலைக்காட்சிப் படப்பிடிப்புச் சூழல் எப்படி இருந்தது?

ஹாலிவுட் அல்லது பாலிவுட் படப்பிடிப்புத் தளத்தில் இருப்பதைப் போன்ற உணர்வு ஏற்படும். பெரிய கேமராக்கள், ஏராளமான தொழில்நுட்பக் கலைஞர்கள், பிரம்மாண்டமான விளக்குகள் என நிகழ்ச்சிகள் மிகுந்த பொருட்செலவில் தயாரிக்கப்பட்டன. அப்போது தொலைக்காட்சிதான் மக்களின் முக்கியமான பொழுதுபோக்கு ஊடகம். தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக மலேசியத் தமிழர்கள் ஆவலுடன் காத்திருப்பார்கள். அந்த எதிர்பார்ப்பின் ஒரு பகுதியாக இருந்ததைப் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

அக்காலத்தில் மேடை ஆடைகளில் சில குறைபாடுகள் இருந்தன. உள்ளூர் தையல்காரர்கள் தயாரித்த ஆடைகள் சில நேரங்களில் இந்திய நடன மரபுக்கு முழுமையாகப் பொருந்தியிருக்காது. அரசுத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் வெளியிலிருந்து நியமிக்கப்பட்ட நடன ஆசிரியர்களின் அமைப்புக்கு ஏற்ப ஆட வேண்டியிருந்தது. சில நடன அமைப்புகள் எனது பாணிக்குப் பொருந்தாததால் அவற்றில் முழு மனநிறைவு இருக்காது. பின்னர் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சொந்தமாக நடன அமைப்புகளை உருவாக்கும் சுதந்திரம் கிடைத்தபோது அதிக மகிழ்ச்சி அடைந்தேன்.



கேள்வி: தொலைக்காட்சி புகழ் உங்களுக்குப் பெற்றுத் தந்த ரசிகர் வரவேற்பு எப்படிப்பட்டது?

1986 முதல் 2003 வரை மலேசியாவில் எங்கு சென்றாலும் அன்பான வரவேற்பு கிடைத்தது. உச்சக்கட்டத்தில் மாதந்தோறும் குறைந்தது 100 ரசிகர் கடிதங்கள் வந்தன. கையொப்பம் பெறுவதற்கும் புகைப்படம் எடுப்பதற்கும் ரசிகர்கள் தீரள்வார்கள். சிலர் உணவும் தங்குமிடமும் இலவசமாக வழங்கி அன்பைப் பொழிவார்கள். அந்தக் காலகட்டம் பரபரப்பும் மகிழ்ச்சியும் நிறைந்ததாக இருந்தது.





KEMENTERIAN BELIA DAN SUKAN



Selamat menyambut Hari Deepavali

இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



YB Dr. Mohammed Taufiq bin Johari

Menteri Belia & Sukan

Ahli Parlimen Sungai Petani

தீபாவளி என்றாலே வண்ண விளக்குகள், புத்தாடைகள், இனிப்புகள் எனப் பல நினைவுகள் மனதில் மலரும். அந்த நினைவுகளோடு பின்னிப் பிணைந்திருப்பவை, நம் பால்ய காலத்திலிருந்து நாவிற்குச் சுவை சேர்த்துவரும் கச்சாங் பூத்தே வகைகளும் அவற்றைச் சுற்றியுள்ள குடும்பக் கதைகளும்தான். ஈப்போ, புந்தோங் பகுதியில் தலைமுறை தலைமுறையாகக் கச்சாங் பூத்தே வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் குடும்பங்களைச் சந்தித்தபோது, இது வெறும் வியாபாரம் மட்டுமல்ல; உழைப்பு, விடாமுயற்சி, குடும்ப ஒற்றுமை, பாரம்பரியத்தின் மீதான பற்றுதல் ஆகியவற்றின் அடையாளம் என்பதும் புலப்பட்டது.

காலங்கள் மாறினாலும், தலைமுறைகள் மாறினாலும், கச்சாங் பூத்தே மீதான மக்களின் ஈர்ப்பு குறையவில்லை. தீபாவளிக் காலத்தில் கூடுதல் உற்சாகத்துடன் தொடரும் இந்தத் தொழிலின் பின்னணியில், பல தலைமுறைகளின் உழைப்பும் இனிய நினைவுகளும் பொதிந்துள்ளன. அந்த அனுபவங்களையும் உணர்வுகளையும் திசைகள் தீபாவளி சிறப்பிதழ் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

கச்சாங் பூத்தே. வண்ணவண்ணமாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் அந்தச் சிற்றுண்டிகளைப் பார்த்தாலே சிறுவயது நினைவுகள் திரும்பி வருகின்றன. பெரியவர்கள் வாங்கி வரும் பொட்டலத்தைச் சுற்றி குடும்பமே அமர்ந்து சுவைத்த காலம் உறவினர்களுடன் பகிர்ந்து கொண்ட தருணங்கள் தீபாவளி நாளின் பரபரப்பு அதனால் கச்சாங் பூத்தே ஒரு சிற்றுண்டி மட்டுமல்ல; பல குடும்பங்களின் தீபாவளி நினைவுகளோடு கலந்துவிட்ட ஒரு சுவை. ஒரு காலத்தில் வீடு வீடாகச் சென்று விற்கப்பட்ட அது, இன்று பல குடும்பங்களின் வாழ்வாதாரமாகவும், மலேசிய இந்தியர்களின் பண்டிகை உணவுப் பாரம்பரியத்தின் ஓர் அடையாளமாகவும் மாறியுள்ளது. ஈப்போ புந்தோங் பகுதியில் இந்தத் தொழிலைத் தலைமுறைகளாகத் தொடர்ந்து வரும் மூன்று குடும்பங்களின் கதை, அந்தச் சுவைக்குப் பின்னால் இருக்கும் உழைப்பையும் குடும்பப் பாரம்பரியத்தையும் எடுத்துச் சொல்கிறது.

கையில் கச்சாங் பூத்தே...

மனதில் தலைமுறைகளின் நினைவுகள்

ஈப்போ புந்தோங் கச்சாங் பூத்தே வியாபாரிகளின் மூன்று தலைமுறைப் பயணம்

ஹேமா எம். எஸ். மணியம்
சரவணன் தசரதன்

1938-ல் விதைக்கப்பட்ட சுவை இன்று நான்காவது தலைமுறையில்! D.N.S. கச்சாங் பூத்தே.

D.N.S

1938-ல் விதைக்கப்பட்ட சுவை இன்று நான்காவது தலைமுறையில்! D.N.S. கச்சாங் பூத்தே. 1938-ல் ஒரு சிறிய குடும்பத் தொழிலாகத் தொடங்கியது. இன்று நான்காவது தலைமுறையின் கைகளில் தொடர்கிறது. D.N.S.





கச்சாங் பூத்தே நிறுவனத்தின் உரிமையாளர் சதீஸ் குமார் சங்கரலிங்கம், தங்கள் குடும்பத் தொழிலின் நீண்ட பயணத்தைப் பெருமையுடன் பகிர்ந்து கொள்கிறார்.

நிறுவனம் 1980-ஆம் ஆண்டு அதிகாரப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்டாலும், அதன் வேர்கள் 1938-ஆம் ஆண்டிலேயே பதிந்துவிட்டன. காலம் மாறியது. வாடிக்கையாளர்களின் ரசனை மாறியது. விற்பனை முறைகளும் மாறின. ஆனால் குடும்பம் காத்து வந்த சுவை மட்டும் தலைமுறை தோறும் தொடர்ந்தது.

இன்று D.N.S.-ல் 85-க்கும் மேற்பட்ட பாரம்பரியச் சிற்றுண்டி வகைகள் தயாரிக்கப்படுகின்றன. மிக்சர், அச்சு முறுக்கு, சீட்டு உருண்டை, லட்டு, ஜிலேபி என பட்டியல் நீள்கிறது.

தீபாவளி நெருங்கும்போது புந்தோங் கடையில் பரபரப்பு உச்சத்தைத் தொடுகிறது. உற்பத்தியும் விற்பனையும் வழக்கமான நாட்களைவிட பல மடங்கு அதிகரிக்கின்றன.

தீபாவளி நாளில் மட்டும் சுமார் 14,000 கிலோ வரை மிக்சர் விற்பனையாகும் அளவுக்கு வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிப்பதாக சதீஸ் குமார் கூறுகிறார்.

அதனால் பண்டிகைத் தேவையைச் சமாளிக்க முன்கூட்டியே உற்பத்தி அதிகரிக்கப்படுகிறது.

இப்போது புந்தோங் கடைக்கு வர முடியாதவர்களும் இந்தச் சுவையைப் பெற முடிகிறது. J&T, Lazada உள்ளிட்ட வழிகளிலும், நிறுவனத்தின் சொந்தப் போக்குவரத்து மூலமாகவும் மலேசியா முழுவதும் சிற்றுண்டிகள் அனுப்பப்படுகின்றன.

தீபாவளிக்கு முந்தைய நாட்களில் வாடிக்கையாளர்கள் கூட்டம் அதிகரித்தாலும், பண்டிகை நாளிலும் சேவை தொடரும் வகையில் கடைகள் நீண்ட நேரம் இயங்குகின்றன.

1938-ல் விதைக்கப்பட்ட ஒரு குடும்பத் தொழில் நான்கு தலைமுறைகளைக் கடந்து, இன்றும் தீபாவளியின் சுவையைப் பாதுகாத்து வருகிறது.









ஒரு பொட்டலம் கச்சாங் பூத்தே அதற்குள் ஒரு குடும்பத்தின் நினைவுகள்! CTS கச்சாங் பூத்தே



‘‘கச்சாங் பூத்தே என்பது வெறும் உணவு அல்ல; அது நினைவுகளையும் சுமந்து வருகிறது.

CTS கச்சாங் பூத்தே நிறுவனத்தின் உரிமையாளர் வேலன் சுப்பிரமணியம் கூறும் இந்த வார்த்தைகள், இந்தப் பாரம்பரியச் சுவையின் இன்னொரு முகத்தை வெளிப்படுத்துகின்றன.

தீபாவளி காலத்தில் CTS-ன் சிற்றுண்டிகள் புதிதாகத் தயாரிக்கப்படுகின்றன. குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அவை தயாரிக்கப்படுவதாக வேலன் கூறுகிறார்.

ஒரு வாடிக்கையாளர் கச்சாங் பூத்தே பொட்டலத்தை வாங்கிச் செல்லும்போது, அவர் எடுத்துச் செல்வது உணவு மட்டுமல்ல. சிறுவயது சுவை குடும்பத் தீபாவளி உறவுகளின் நினைவு - அனைத்தும் அந்தப் பொட்டலத்துக்குள் இருப்பதுபோல. அதனால்தான் ஈப்போவுக்கு வெளியே வசிப்பவர்கள்கூட புந்தோங் வழியாகச் செல்லும்போது CTS கச்சாங் பூத்தே வாங்கிச் செல்கின்றனர். தங்களுக்காக மட்டுமல்ல; வீட்டில் இருப்பவர்களுக்கும் நண்பர்களுக்கும் கொடுப்பதற்காகவும். தீபாவளி நெருங்கும்போது அந்த வரவேற்பு மேலும் அதிகரிக்கிறது. வழக்கமான நாட்களுடன் ஒப்பிடுகையில் தீபாவளிக் காலத்தில் CTS-ன் விற்பனை 10 முதல் 20 மடங்கு வரை

















அதிகரிக்கிறது என வேலன் தெரிவிக்கிறார். இந்த எண்ணிக்கை விற்பனையின் வளர்ச்சியை மட்டும் காட்டுவதில்லை. ஒரு தலைமுறையின் பண்டிகை மேசையில் இருந்த சுவை, அடுத்த தலைமுறையின் மேசையையும் அடைகிறது என்பதையும் காட்டுகிறது. இந்தத் தீபாவளியில் மலேசியர்கள் அனைவரும் குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாகப் பண்டிகையைக் கொண்டாட வேண்டும் என்பதே வேலனின் வாழ்த்து.

கச்சாங் பூத்தே வாங்க வருபவர்கள் பலர். ஆனால் வீடு திரும்பும்போது அவர்கள் எடுத்துச் செல்வது ஒரு பொட்டலம் மட்டுமல்ல–ஒரு பழைய சுவையின் நினைவும் கூட.

தாத்தா தொடங்கிய தொழில் இன்று 3ஆம் தலைமுறையின் கைகளில்!

செம்பூர்னா கச்சாங் பூத்தே











நிறுவனத்தின் உரிமையாளர் புவனேஸ்வரி ஜெயபாலன், தாத்தா காலத்தில் தொடங்கிய தொழிலை இன்று மூன்றாம் தலைமுறையாகத் தொடர்ந்து வருகிறார்.



செம்பூர்னா ஒன்பது ஆண்டுகளாக

ஒரு தொழிலைத் தொடங்குவது எளிது. ஆனால் அதன் சுவையையும் நம்பிக்கையையும் அடுத்த தலைமுறைக்கு ஒப்படைப்பதே உண்மையான வெற்றி.

செம்பூர்னா கச்சாங் பூத்தே இயங்கி வந்தாலும், அதன் பின்னணியில் இருக்கும் குடும்பப் பாரம்பரியம் அதைவிடப் பழமையானது. தாத்தாவிடமிருந்து தந்தைக்கும், பின்னர் தமக்கும் வந்த இந்தத் தொழிலில் பாரம்பரியச் சுவையும் தயாரிப்பு முறையும் பாதுகாக்கப்படுவதாக புவனேஸ்வரி கூறுகிறார். கச்சாங் பூத்தே மட்டுமல்லாமல், பலவகையான முறுக்கு, அச்சு முறுக்கு, அதிரசம், நெய் உருண்டை, கட்டி உருண்டை உள்ளிட்ட பாரம்பரியச் சிற்றுண்டிகளும் இங்கு தயாரிக்கப்படுகின்றன.

புவனேஸ்வரிக்கு தீபாவளி என்பது புத்தாடை அணிந்து, வீட்டை அலங்கரித்து, வழிபாடு செய்யும் நாள் மட்டுமல்ல. பெற்றோர், உறவினர்கள், நண்பர்களைச் சந்திப்பதும், வீட்டில் தயாரிக்கப்படும் பாரம்பரிய உணவுகளைப் பகிர்ந்து கொள்வதும் பண்டிகையின் முக்கிய அங்கம் என அவர் கருதுகிறார். தீபாவளிக்கு முந்தைய நாள் இரவு வரை வேலை தொடர்ந்தாலும், மறுநாள் காலையிலேயே குடும்பத்துடன் பண்டிகையைத் தொடங்கும் மகிழ்ச்சி தனியானது என்கிறார்.

இன்றைய தலைமுறை உணவு மற்றும் உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. குறைந்த எண்ணெய், குறைந்த உப்பு கொண்ட உணவுகளுக்கான தேவையும் அதிகரித்து வருகிறது.

இருந்தாலும், பாரம்பரிய அரிசி மற்றும் தானியங்களை அடிப்படையாகக் கொண்ட சிற்றுண்டிகளுக்கான வரவேற்பு இன்னும் குறையவில்லை.

சுவை மாறலாம். உணவு முறைகள் மாறலாம். ஆனால், குடும்பத்துடன் பகிர்ந்து சாப்பிடும் மகிழ்ச்சி மாறுவதில்லை.

அதனால்தான் தாத்தா காலத்தில் தொடங்கிய செம்பூர்னாவின் சுவைப் பயணம், இன்று மூன்றாம் தலைமுறையிலும் தொடர்கிறது .

சுவை மட்டும் அல்ல தலைமுறைகளை இணைக்கும் பாரம்பரியம்!

கச்சாங் பூத்தேவின் நிறங்களும் வடிவங்களும் மாறியிருக்கலாம். தயாரிப்பு முறைகளும் விற்பனை வழிகளும் காலத்துக்கேற்ப வளர்ந்திருக்கலாம்.

ஆனால், தீபாவளி நாளில் குடும்பத்துடன் அமர்ந்து பகிர்ந்து சாப்பிடும் அந்த மகிழ்ச்சி மட்டும் மாறவில்லை.

D.N.S.-ன் நான்கு தலைமுறைப் பயணம் CTS-ன் நினைவுகளோடு இணைந்த சுவை செம்பூர்னாவின் மூன்றாம் தலைமுறைத் தொடர்ச்சி மூன்று குடும்பங்களின் கதைகளும் ஒரே உண்மையைச் சொல்கின்றன:

ஒரு பாரம்பரியம் உயிருடன் இருக்க வேண்டுமென்றால், அதை அடுத்த தலைமுறையின் கைகளில் ஒப்படைக்க வேண்டும். அந்தப் பணியைத்தான் இந்தக் குடும்பங்கள் தொடர்ந்து செய்து வருகின்றன.

ஒரு தலைமுறை உருவாக்கிய சுவையை அடுத்த தலைமுறை கற்றுக் கொள்கிறது. ஒரு தலைமுறை சம்பாதித்த நம்பிக்கையை அடுத்த தலைமுறை காப்பாற்றுகிறது. அதனால்தான் ஒவ்வொரு தீபாவளியிலும் கச்சாங் பூத்தே மீண்டும் மீண்டும் தேடப்படுகிறது. அது வெறும் சிற்றுண்டி அல்ல. குடும்பம் பகிர்ந்து கொள்ளும் அன்பு. தலைமுறை கடத்தும் பாரம்பரியம்.

தீபாவளி மீண்டும் மீண்டும் நினைவூட்டும் ஒரு பழைய சுவை. இறுதியில் கச்சாங் பூத்தே பொட்டலம் காலியாகிவிடலாம்.

ஆனால் அதனுடன் வந்த நினைவுகள் மட்டும் காலியாகிவிடுவதில்லை.

கையில் ஒரு பொட்டலம் வாயில் ஒரு சுவை மனதில் தலைமுறைகளின் நினைவு



அந்தத் தீபாவளி... ஒரு குடியிருப்பே குடும்பமான நாள்



என் பெயர் தேன்மொழி. குடும்பத்தில் என்னைக் கவிதா என்றுதான் அழைப்பார்கள். என் அப்பா இராமசாமி. எல்லோரும் அவரை சிவாஜி என்றுதான் அழைப்பார்கள். அவர் பத்திரிகை விற்பனையாளர். அம்மா காசியம்மாள் இல்லத்தரசி. எனக்கு ஓர் அண்ணனும் ஒரு தங்கையும். பெற்றோருக்கு நாங்கள் மூவரும்தான் உலகம்.

அப்பா குடும்பத் தலைவர். கண்டிப்பானவர். ஆனால், அந்தக் கண்டிப்புக்குள் அளவில்லாத பாசம் இருந்தது.

சிறு வயதில் தீபாவளி வந்துவிட்டால் எங்களுக்கு ஒரே குதூகலம்தான். ஒரு மாதத்திற்கு முன்பே நாங்கள் வசித்த கோலாலம்பூர், செந்தூல், ஸ்ரீ கிளந்தான் அடுக்குமாடிக் குடியிருப்பு களைகட்டி விடும். குறிப்பாக, நாங்கள் வசித்த பத்தாவது மாடி.

எங்கள் அண்டை வீட்டில் கிறிஸ்தவக் குடும்பத்தைச் சேர்ந்த ரீத்தா அக்காள், மலாய்க்காரக் குடும்பத்தைச் சேர்ந்த காக்காக் பாத்திமா, ராஜா என்ற ராசப்பா, சரளா அக்காள் குடும்பம், மலா அம்மம்மா குடும்பம் என்று பல குடும்பங்கள் இருந்தன.



இனம் வேறு. சமயம் வேறு. வாழ்க்கை முறையும் வேறு. ஆனால், எங்கள் வாசலில் அந்த வேறு பாடுகளுக்கு இடமே இல்லை. எல்லோரும் அக்காள், மாமா, அண்ணன், தம்பி என்ற உறவு முறையில்தான் பழகினோம். யார் குழந்தை என்ற பேதமே இல்லை. எல்லாக் குழந்தைகளும் எல்லா வீடுகளுக்கும் சொந்தம்.



தீபாவளிக்கு மூன்று வாரங்களுக்கு முன்பே பலகாரங்கள் செய்யத் தொடங்கிவிடுவோம். ஒரு வீட்டில் மட்டும் அல்ல; அனைவரும் ஒருவருக்கொருவர் உதவுவோம். வேலை முழுவதும் சிரிப்பும் பேச்சுமாக இருக்கும்.

அது பலகாரம் செய்வது மட்டுமல்ல; உறவுகளைச் சேர்த்து வைத்துக் கொண்டாடிய காலம்.

தீபாவளிக்கு முந்தைய நாள் இரவு பத்து, பதினொரு மணி ஆனாலும் நாங்கள் இளம் பிள்ளைகள் அனைவரும் சேர்ந்து பத்தாவது மாடியின் நீண்ட கோரிடாரைக் கழுவிச் சுத்தம் செய்வோம். ஒவ்வொரு வீட்டிலும் ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி என்று சமையல் நடந்து கொண்டிருக்கும். நாங்கள் கோரிடாரைத் தேய்த்துக் கொண்டிருப்போம்.

காய்ந்ததும் அதன் நெடுகிலும் அனைவரும் சேர்ந்து கோலம் போடுவோம்.

அப்போது பாத்திமா அக்கா அன்புடன்,

‘‘ஏய் பிள்ளைகளா... என் வீட்டிலும் கோலம் போடுங்கள்!’’

என்று அழைப்பார்.

அந்தக் குரல் இன்றும் என் காதில் ஒலிக்கிறது.

வீடுகளின் ஜன்னல் திரைச்சீலைகளை மாற்றுவதிலும் ஒருவருக்கொருவர் உதவுவோம். மறுநாள் காலை யார் வீட்டில் என்ன பசியாறை என்பது கூட முதல் நாளே முடிவு செய்யப்பட்டுவிடும்.

ஒரு வீட்டில் தோசை; இன்னொரு வீட்டில் இட்லி; மற்றொரு வீட்டில் இடியாப்பம்.

எங்கள் வீட்டில் சாப்பிட்டாலும் பக்கத்து வீட்டுக்குச் செல்வோம்.

அவர்கள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். வீடுகள் பல; ஆனால் பசியாறிய வயிறுகளும் அன்பான உள்ளங்களும் ஒன்றுதான்.

அந்தப் பசியாறையில் உணவின் சுவையைவிட அன்பின் சுவைதான் அதிகம்.

தீபாவளிக்கு முந்தைய இரவு முன்னோர்களுக்குப் படையலிட்டு, மறுநாள் அதிகாலையில் சாமி படங்களுக்கு புத்தாடைகளை வைத்து பூஜை செய்ததும் எங்கள் தீபாவளிக் குதூகலம் தொடங்கிவிடும்.

புத்தாடை அணிந்து, ஒருவருக்கொருவர் வாழ்த்துச் சொல்லிக் கொண்டு எல்லா வீடுகளுக்கும் செல்வோம். பிள்ளைகள் ஓடிக் கொண்டிருப்பார்கள். பெரியவர்கள் பேசிக் கொண்டிருப்பார்கள். எங்கும் சிரிப்பும் மகிழ்ச்சியும்.

அனைத்து வீடுகளுக்கும் சென்று வந்த பின்னர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் சிறப்பு நிகழ்ச்சிகள் எங்கள் தீபாவளி மகிழ்ச்சியை மேலும் அதிகப்படுத்தும்.

“தோட்டப்புறத் தீபாவளியைப் பலரும் நினைவுகூர்வார்கள். ஆனால், கோலாலம்பூரின் பத்தாவது மாடியிலும் ஒரு தீபாவளி இருந்தது. வீடுகள் வேறாக இருந்தாலும், இதயங்கள் ஒன்றாக இருந்த அந்தத் தீபாவளி...”

இன்று அப்பாவும் அம்மாவும் இல்லை. அந்தக் காலமும் அப்படியே இல்லை. ஆனால், அவர்கள் எங்களுக்குக் கொடுத்த பாசம் மட்டும் இன்னும் எங்களுக்குள் இருக்கிறது. அண்டை வீட்டுக்காரர்களுடன் கொண்டிருந்த அந்த நட்பும், இன பேதமற்ற அந்த நெருக்கமும் என் நினைவுகளில் அழியாமல் இருக்கிறது.

அப்போது வீடுகள் சிறியதாக இருந்தாலும், உள்ளங்கள் பெரிதாக இருந்தன. வசதிகள் குறைவாக இருந்தாலும், பகிர்ந்து கொள்ளும் மனம் நிறைந்திருந்தது.

அன்று நாங்கள் தீபாவளியை மட்டும் கொண்டாடவில்லை; ஒற்றுமையையும் கொண்டாடினோம்.

அந்த மகிழ்ச்சியை எங்கள் பிள்ளைகளும் அனுபவிக்க வேண்டும். அண்டை வீட்டுக்காரர் என்றால் கதவை மூடிக் கொள்ள வேண்டியவர் அல்ல; தேவையான நேரத்தில் கதவைத் திறந்து ஓடி வரக்கூடிய உறவு என்பதை அவர்கள் உணர வேண்டும்.


அந்தக் காலம் மீண்டும் அப்படியே வருமா என்று தெரியாது. ஆனால், அந்தக் காலத்தின் அன்பை நம்மால் மீண்டும் உருவாக்க முடியும்.

இந்தத் தீபாவளியில் வீடுகளில் விளக்கேற்றுவோம். அதைவிட முக்கியமாக, மனங்களில் ஒற்றுமைக்கான விளக்கை ஏற்றுவோம்.

அந்த ஒளி நம் பிள்ளைகளின் வாழ்க்கையிலும் தொடர்ந்து எரியட்டும்.

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்.






KEMENTERIAN PERUMAHAN
DAN KERAJAAN TEMPATAN

MALAYSIA MADANI

இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



YB Nga Kor Ming

Menteri Perumahan dan
Kerajaan Tempatan

மறந்துபோன 4 தீபாவளிப் பலகாரங்கள்

● - ரா.சங்கீதா

சிட்டுருண்டை



பயறு, வெல்லம், அரிசி மாவு ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் பாரம்பரிய இனிப்பாகச் சிட்டுருண்டை அறிமுகப்படுத்தப்படுகிறது. இதன் பெயரும் தயாரிக்கும் முறையும் குடும்பத்துக்கு குடும்பம் மாறுபடலாம்.

தேவையான பொருட்கள்

வறுத்த பாசிப்பயறு மாவு – 1 கப், துருவிய வெல்லம் – அரை கப், தண்ணீர் – 2 முதல் 3 மேசைக்கரண்டி, ஏலக்காய்த் தூள் – கால் தேக்கரண்டி, துருவிய தேங்காய் – 2 மேசைக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப) நெய் – தேவையான அளவு, உப்பு – சிறிதளவு (விருப்பத்திற்கேற்ப)

செய்முறை

பாசிப்பயற்றை மணம் வரும் வரை வறுத்து ஆற வைத்து, நன்றாக அரைத்துச் சலித்துக் கொள்ளவும்.
வெல்லத்தில் தண்ணீர் சேர்த்து மிதமான தீயில் கரைக்கவும். அழுக்குகளை நீக்க வடிகட்டி, மீண்டும் அடுப்பில் வைத்து சற்றுக் கெட்டியாக்கவும்.
பயறு மாவுடன் ஏலக்காய்த் தூள், விருப்பப்பட்டால் தேங்காய்த் துருவல் சேர்க்கவும். வெல்லப் பாகைச் சிறிது சிறிதாக ஊற்றி, உருண்டை பிடிக்கும் பதத்திற்குக் கலக்கவும்.
கலவை கையாளும் அளவுக்கு ஆறியதும், உள்ளங்கையில் சிறிது நெய் தடவி சிறிய உருண்டைகளாகப் பிடிக்கவும்.

சிறு குறிப்பு:
வெல்லப் பாகை ஒரே நேரத்தில் ஊற்றாமல் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்க்க வேண்டும். அதிக ஈரப்பதம் உருண்டையை மென்மையாக்கிவிடும்.

கட்டி உருண்டை

பெயருக்கு ஏற்றபடி உறுதியான உருண்டை வடிவில் தயாரிக்கப்படும் இனிப்புகளுக்குப் பல இடங்களில் இந்தப் பெயர் பயன்படுத்தப்படுகிறது. அதன் பொருட்களும் செய்முறையும் பிரதேசத்துக்கும் குடும்ப வழக்கத்துக்கும் ஏற்ப மாறுபடலாம்.

தேவையான பொருட்கள்

வறுத்த கடலை மாவு – 1 கப், துருவிய வெல்லம் – அரை கப், தண்ணீர் – 2 முதல் 3 மேசைக்கரண்டி, ஏலக்காய்த் தூள் – கால் தேக்கரண்டி, நெய் – 1 முதல் 2 மேசைக்கரண்டி, தேங்காய்த் துருவல் – 1 மேசைக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப)

செய்முறை

கடலை மாவைச் சலித்து ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவும்.
வெல்லத்துடன் தண்ணீர் சேர்த்து மிதமான தீயில் கரைத்து வடிகட்டவும். பின்னர் பாகு சற்றுக் கெட்டியாகும் வரை கூடாக்கவும்.
மாவுடன் ஏலக்காய்த் தூள் சேர்த்து, வெல்லப் பாகைச் சிறிது



சிறிதாகக் கலந்து, பிடிக்கக்கூடிய பதத்திற்குக் கொண்டு வரவும். தேவைக்கேற்ப நெய் சேர்த்து, கையாளும் அளவுக்கு ஆறியதும் சிறிய உறுதியான உருண்டைகளாகப் பிடிக்கவும்.

சிறு குறிப்பு:
கலவை உலர்ந்து இருந்தால் சிறிது வெதுவெதுப்பான நெய் சேர்க்கலாம். உருண்டைகள் முழுமையாக ஆறிய பின்னரே காற்றுப்புகாத பாத்திரத்தில் வைக்க வேண்டும்.

நெய் உருண்டை

வறுத்த மாவு, சர்க்கரை, நெய் ஆகியவற்றின் சேர்க்கையில் உருவாகும் நெய் உருண்டை, வாயில் இட்டதும் கரையும் மென்மையான தன்மைக்கும் நறுமணத்திற்கும் பெயர் பெற்றது. சில குடும்பங்களில் கடலை மாவும், வேறு சிலவற்றில் மாறுபட்ட மாவு வகைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

தேவையான பொருட்கள் :
வறுத்த கடலை மாவு – 1 கப், பொடித்த சர்க்கரை – அரை கப், நெய் – கால் முதல் மூன்றில் ஒரு கப் வரை, ஏலக்காய்த் தூள் – கால் தேக்கரண்டி, நறுக்கிய முந்திரிப் பருப்பு –1 முதல் 2 மேசைக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப)

செய்முறை : கடலை மாவை மிதமான தீயில் 3 முதல் 4 நிமிடங்கள் வரை மணம் வரும் அளவுக்கு வறுத்து, சற்றே ஆற வைக்கவும்.
மாவையும் பொடித்த சர்க்கரையையும் சலித்து, ஏலக்காய்த் தூள் சேர்த்துக் கலக்கவும்.
வெதுவெதுப்பான உருக்கிய நெய்யைச் சிறிது சிறிதாகச் சேர்த்துப் பிசையவும். விரல்களால் அழுத்தும்போது மாவு ஒன்றாகச் சேர்ந்தால் சரியான பதம்.
கலவை சற்றுச் சூடாக இருக்கும்போதே சிறிய உருண்டைகளாகப் பிடிக்கவும்.



சிறு குறிப்பு: நெய்யை அளவுக்கு அதிகமாகச் சேர்த்தால் உருண்டை எண்ணெய்ப்பசையுடன் மாறிவிடும். தேவையான அளவு மட்டுமே சேர்க்கவும்.

சிப்பி

சிப்பி என்பது சிப்பி ஓடு போன்ற வடிவில் தயாரிக்கப்படும் இனிப்புப் பலகாரமாகும். மாவைச் சிறு துண்டுகளாக வெட்டி, ஓடு போன்ற வடிவத்தில் செய்து எண்ணெயில் பொரித்துச் சர்க்கரைப் பாகில் புரட்டுவது இதன் எளிய தயாரிப்பு முறை. மலேசியத் தமிழர் குடும்பங்களில் இதன் பாரம்பரிய வடிவமும் செய்முறையும் மாறுபடக்கூடும்.

தேவையான பொருட்கள்:
மைதா மாவு – 2 கப், அரிசி மாவு – 2 மேசைக்கரண்டி, நெய் – 2 மேசைக்கரண்டி, உப்பு – சிறிதளவு, தண்ணீர் –தேவையான அளவு, பொரிப்பதற்கு எண்ணெய், சர்க்கரைப் பாகிற்கு சர்க்கரை – 1 கப், தண்ணீர் – அரை கப், ஏலக்காய்த் தூள் – கால் தேக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப)

செய்முறை :
மைதா மாவு, அரிசி மாவு, நெய், உப்பு ஆகியவற்றைக் கலந்து, சிறிது சிறிதாகத் தண்ணீர் சேர்த்து இறுக்கமான மாவாகப் பிசையவும். 20 நிமிடங்கள் மூடி வைக்கவும். மாவை மெல்லியதாகத் தேய்த்து சிறு துண்டுகளாக வெட்டவும். சுத்தமான முள் கரண்டி அல்லது பொருத்தமான அச்சைப் பயன்படுத்தி சிப்பி வடிவம் கொடுக்கவும்.



மிதமான சூட்டில் எண்ணெயைக் காய வைத்து, மாவுத் துண்டுகளைச் சிறிது சிறிதாகப் போட்டு மொறுமொறுப்பாகப் பொரித்து எடுக்கவும். சர்க்கரையையும் தண்ணீரையும் சேர்த்துச் சற்றுக் கெட்டியாகும் வரை கூடாக்கவும். விருப்பப்பட்டால் ஏலக்காய்த் தூள் சேர்க்கவும். பொரித்த சிப்பிகளைப் பாகில் புரட்டி, தட்டில் பரப்பி ஆற விடவும்.

சிறு குறிப்பு: மாவு மிகவும் மென்மையாக இருந்தால் வடிவம் நிலைக்காது. பொரித்த சிப்பிகள் முழுமையாக ஆறிய பின்னரே காற்றுப்புகாத பாத்திரத்தில் சேமிக்க வேண்டும்.

இந்தப் பலகாரங்கள் வெறும் இனிப்புகளோ சிற்றுண்டிகளோ அல்ல. குடும்பத்தினருடன் சமையலறையில் செலவிட்ட நேரம், பாட்டி சொல்லித் தந்த பக்குவங்கள், தலைமுறைகளாகக் கடத்தப்பட்ட சுவைகள் எனப் பல நினைவுகளைத் தாங்கி நிற்கின்றன. இந்தத் தீபாவளியில், கடைகளில் வாங்கும் பலகாரங்களுடன் வீட்டில் ஒரு பாரம்பரியப் பலகாரத்தையாவது செய்து பார்ப்போம். சுவையோடு நமது மரபையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்துவோம்.

KEMENTERIAN PEMBANGUNAN
USAHAWAN DAN KOPERASI

MALAYSIA
MADANI

Selamat Hari Deepavali

இனிய
தீபாவளி
நல்வாழ்த்துகள்



YB Steven Sim
Menteri Pembangunan Usahawan dan Koperasi



எல்லைகளைக் கடந்த தீபாவளி: கலாசாரங்கள் இணையும் குடும்பக் கொண்டாட்டம்

◆ ரா. சங்கீதா



இந்தியர்-தாய்லாந்து வம்சாவளி தம்பதியருக்கு ஐந்து பிள்ளைகள். வெவ்வேறு பின்னணிகள் இருந்தாலும், தீபாவளி அவர்களை அன்பாலும் பாரம்பரியத்தாலும் ஒன்றிணைக்கிறது.

தீபாவளி என்பது ஒளியின் திருவிழா மட்டுமல்ல; குடும்ப உறவுகளையும், பாரம்பரியத்தையும், கலாசாரப் புரிதலையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் மகிழ்ச்சியான தருணம். மலேசிய இந்தியரான சுரேந்திரன் (வயது 42), அவருடைய தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த மனைவி ரத்தாபிட் (வயது 46), ஆகியோரின் குடும்பத்தில் தீபாவளி இப்படித்தான் அர்த்தம் பெறுகிறது.

இருவேறு கலாசாரப் பின்னணிகளைக் கொண்ட இந்தத் தம்பதியரின் தீபாவளிப் பயணம், திருமணத்துக்கு முன்பே தொடங்கிவிட்டது. ஆனால், திருமணத்துக்குப் பிறகு வந்த முதல் தீபாவளியில் இருவரும் ஒன்றாகக் கொண்டாட முடியாத சூழல் ஏற்பட்டது.

“திருமணமான பிறகு வந்த முதல் தீபாவளியின்போது நான் தாய்லாந்தில் இருந்தேன். அப்போது மலேசியாவில் உள்ள என் வீட்டையும் குடும்பத்தினரையும் மிகவும் நினைத்தேன். இரண்டாவது தீபாவளியின்போதுதான் மலேசியாவில் ஒன்றாகக் கொண்டாட முடிந்தது,” என்று தமது தொடக்க கால அனுபவத்தை நினைவுகூர்ந்தார் சுரேந்திரன்.

தீபாவளியின் அர்த்தத்தை அறிந்த மனைவி

இந்தியப் பாரம்பரியத்தில் வளராத ரத்தாபிட்டுக்கு, தீபாவளியின் சில பழக்கவழக்கங்கள் ஆரம்பத்தில் புதுமையாக இருந்தன. குறிப்பாக, தீபாவளியின்போது பட்டாசுகள் வெடிப்பதன் காரணம் என்ன, இந்தப் பண்டிகையின் உண்மையான பொருள் என்ன என்ற கேள்விகள் அவருக்கு எழுந்தன. “திருமணத்துக்குப் பிறகு என் மனைவி, ‘தீபாவளி என்றால் என்ன? ஏன் பட்டாசு வெடிக்கிறார்கள்?’ என்று என்னிடம் கேட்டார்,” என்கிறார் சுரேந்திரன்.

அப்போது, தீபாவளி என்பது பட்டாசு வெடிப்பதும் புத்தாடை அணிவதும் மட்டுமல்ல; குடும்பத்தினருடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதும், மறைந்த உறவினர்களை நினைவுகூர்வதும் அதன் முக்கியமான அம்சங்கள் என்பதையும் அவர் மனைவிக்கு விளக்கினார்.

காலப்போக்கில், ரத்தாபிட் இந்தியர்களின் தீபாவளிப் பாரம்பரியத்தைப் புரிந்து கொள்ளத் தொடங்கினார்.

இருவரும் இணைந்து குடும்ப வாழ்க்கையை வளர்த்தெடுத்த நிலையில், இன்று ஐந்து பிள்ளைகளுடன் தீபாவளியைக் கொண்டாடுவது அவர்களின் குடும்பத்தில் தனித்துவமான மகிழ்ச்சியாக மாறியுள்ளது.

உறவினர் வீடுகளில் விருந்தும் மகிழ்ச்சியும்

சுரேந்திரனின் நினைவுகளில், தீபாவளி என்றாலே உறவினர்களைச் சந்திப்பதும் அவர்களுடன் உணவைப் பகிர்ந்து கொள்வதும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன.

“அதிகாலையிலேயே ஒவ்வொரு உறவினர் வீட்டுக்கும் சென்று தோசை, ஆட்டிறைச்சிக் கறி போன்றவற்றைச் சாப்பிடுவார்கள். உறவினர் வீடுகளுக்குச் சென்று ஒன்றாக உணவருந்துவதில் தனி மகிழ்ச்சி இருக்கிறது,” என்று அவர் கூறினார்.

இந்தச் சந்திப்புகளும் விருந்தோம்பலும் தீபாவளியின் உறவுப் பிணைப்பை வலுப்படுத்துகின்றன. பெரியவர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், குழந்தைகள் உறவினர்களுடன் பழகவும் இத்தகைய குடும்பக் கொண்டாட்டங்கள் வாய்ப்பளிக்கின்றன.

ஐந்து பிள்ளைகள்; இரட்டிப்பு மகிழ்ச்சி

ஐந்து பிள்ளைகளைக் கொண்ட இந்தக் குடும்பத்தில், தீபாவளி குழந்தைகளுக்கான மகிழ்ச்சியான எதிர்பார்ப்புகளையும் சுமந்து வருகிறது.

புத்தாடைகள், அன்பளிப்பாகக் கிடைக்கும் பணம், பட்டாசுகள் எனப் பிள்ளைகள் தீபாவளியை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகச் சுரேந்திரன் கூறுகிறார்.

“குழந்தைகளுக்கு இது மிகவும் மகிழ்ச்சியான நேரம். அன்பளிப்புப் பணம், புத்தாடைகள், அனுமதிக்கப்பட்ட இடங்களில் பட்டாசுகள் என அவர்களுக்கு எல்லாமே மகிழ்ச்சிதான்,” என்கிறார் அவர்.

வெவ்வேறு கலாசாரப் பின்னணிகளைக் கொண்ட குடும்பமாக இருந்தாலும், இந்தியர்களின் தீபாவளிப் பழக்கவழக்கங்களைப் பிள்ளைகள் அறிந்து கொள்வதற்கும் அவற்றின் மதிப்பைப் புரிந்து கொள்வதற்கும் இந்தக் கொண்டாட்டம் வாய்ப்பளிக்கிறது.

அவர்களைப் பொறுத்தவரை, தீபாவளி என்பது ஒருநாள் கொண்டாட்டத்துடன் முடிந்துவிடுவதில்லை. உறவினர்களுடன் நேரம் செலவிடுவது, பாரம்பரிய உணவுகளைச் சுவைப்பது, குடும்பத்தினருடன் மகிழ்ச்சியான நினைவுகளை உருவாக்குவது என அதன் அனுபவங்கள் விரிந்து கொண்டே செல்கின்றன.

வீட்டில் தொடங்கும் தீபாவளித் தயாரிப்புகள்

இந்தக் குடும்பத்தின் தீபாவளிக் கொண்டாட்டத்தில் உணவுக்கும் முக்கிய இடமுண்டு. ரத்தாபிட் வீட்டிலேயே முறுக்கு உள்ளிட்ட பாரம்பரியத் தின்பண்டங்களைத் தயாரித்து, பண்டிகைக்கான ஏற்பாடுகளில் பங்கெடுக்கிறார்.

வீட்டில் பலகாரங்கள் தயாரிப்பது முதல் உறவினர்களை வரவேற்பது வரை, ஒவ்வொரு ஏற்பாடும் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து தீபாவளியைக் கொண்டாடுவதற்கான சூழலை உருவாக்குகிறது.

இந்தியப் பாரம்பரியத்தைத் தனது மனைவி அறிந்து கொள்ளத் தொடங்கிய காலத்திலிருந்து, இன்று ஐந்து பிள்ளைகளும் பங்கேற்கும் குடும்பக் கொண்டாட்டமாகத் தீபாவளி வளர்ந்திருப்பதைச் சுரேந்திரனின் அனுபவம் எடுத்துக் காட்டுகிறது.



இருவேறு கலாசாரப் பின்னணிகளைக் கொண்டிருந்தாலும், ஒருவரது பாரம்பரியத்தை மற்றவர் புரிந்து கொண்டு மதிக்கும்போது குடும்ப உறவுகள் மேலும் வலுப் பெறுகின்றன.

சுரேந்திரன் ரத்தாபிட் தம்பதியரின் தீபாவளி, கலாசார வேறுபாடுகளைத் தாண்டி அன்பையும் புரிதலையும் வளர்க்கும் குடும்ப விழாவாகத் திகழ்கிறது. ஐந்து பிள்ளைகளும் இத்தகைய அனுபவங்களுடன் வளர்வதன் மூலம், குடும்பப் பாரம்பரியத்தை அறிந்து கொள்வதோடு, வேறுபாடுகளை மதிக்கும் பண்பையும் கற்றுக் கொள்கின்றனர்.

தீபாவளியின் உண்மையான மகிழ்ச்சி, விளக்குகளின் ஒளியில் மட்டுமல்ல; வெவ்வேறு பின்னணிகளைக் கொண்ட மனிதர்களை அன்பால் இணைத்து, அந்தப் பிணைப்பை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதிலும்தான் இருக்கிறது.

Wishing you & your family

a blessed & auspicious

Deepavali

இனிய தீபாவளி வாழ்த்துகள்





Sincerely

YB Dato' Seri Sundarajoo Somu

Penang State EXCO for Housing and Environment
ADUN N.16 Perai

MALAYSIA MADANI · PENANG 2030 · HARAPAN · DSR

தீபாவளி மாறிவிட்டது

உறவுகளின் நினைவுகள் மட்டும் மாறவில்லை

கொண்டாட்டங்கள் மாறின... காலம் கடந்தாலும் குடும்பப் பாசமும் இழப்பின் வலியும் மனதை விட்டு அகலவில்லை

■ ரா. சங்கீதா

தீபாவளி என்றாலே புத்தாடைகள், அதிகாலைக் குளியல், பலகாரங்கள், பட்டாசுகள், குடும்பத்தினரின் ஒன்றுகூடல் எனப் பல நினைவுகள் மனதில் மலரும். ஆனால், காலம் மாறும்போது கொண்டாட்டங்களும் மாறுகின்றன. குறிப்பாக, திருநங்கைகளின் வாழ்க்கையில் தீபாவளி ஏற்படுத்தியிருக்கும் மாற்றங்கள் என்ன? இந்தத் தீபாவளியில் அவர்கள் யாரை நினைத்து ஏங்குகிறார்கள்? கோலாலம்பூரைச் சேர்ந்த நான்கு திருநங்கைகள் தங்கள் தீபாவளி நினைவுகளையும், இன்றைய கொண்டாட்டங்களையும், மனதில் நிறைந்திருக்கும் உறவுகளையும் திசைகளுடன் பகிர்ந்துகொள்கின்றனர்.



ஒவ்வொரு தீபாவளியிலும் தந்தையைத் தவறவிடுகிறேன்

“எனது தந்தையுடன் சிறுவயதில் கொண்டாடிய தீபாவளிதான் எனக்கு மிகவும் மறக்க முடியாதது. அந்த இனிய நினைவுகள் எப்போதும் என் இதயத்தில் இருக்கும். தந்தை உயிருடன் இருந்தபோது தீபாவளிக்கு அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்து, குடும்பத்தினருடன் சேர்ந்து கொண்டாடுவோம். அந்தப் பழக்கங்கள் ஒவ்வொன்றும் அவரை எனக்கு நினைவூட்டுகின்றன.

முன்பெல்லாம் தீபாவளிக்குத் தேவையான பொருட்களை முன்கூட்டியே வாங்கிவிடுவோம். இப்போது சில நேரங்களில் தீபாவளி அன்றுதான் பொருட்கள் வாங்குகிறோம். காலத்துக்கு ஏற்ப வாழ்க்கை மாறிவிட்டது. பழைய கொண்டாட்டங்கள் அப்படியே இல்லாவிட்டாலும், தந்தையுடன் கழித்த அந்த நாட்கள் எனக்கு மிகவும் சிறப்பானவை. ஒவ்வொரு தீபாவளியிலும் அவரை மிகவும் தவறவிடுகிறேன்.”

யவினா ஸ்ரீ, நிர்வாக உதவியாளர், கோலாலம்பூர்

விளக்கேற்றி, குடும்பத்துடன் உணவருந்துவதில் மகிழ்ச்சி



“சிறுவயதில் தீபாவளி என்றால் அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, புத்தாடை அணிவது, நண்பர்களுடன் பட்டாசு வெடிப்பது என வீடே களைகட்டும். அம்மா செய்த முறுக்கு, லட்டு போன்ற பலகாரங்களைச் சாப்பிடுவதும் தனி மகிழ்ச்சி. பெரியவர்களிடம் ஆசி பெறுவதும் எனக்கு மிகவும் முக்கியமானது.

இப்போது ஒப்பனைக் கலைஞராக இருப்பதால் தீபாவளிக் காலத்தில் மற்றவர்களைத் தயார்படுத்துவதில் அதிக நேரம் செலவிடுகிறேன். அதனால் எனது கொண்டாட்டம் அமைதியானதாக மாறிவிட்டது. வீட்டில் அகல் விளக்குகளை ஏற்றி, வண்ணக் கோலமிட்டு, பாரம்பரிய உடையணிந்து குடும்பத்தினருடன் விருந்துண்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அதேவேளையில், தொலைவில் இருப்பவர்களையும், எங்களுடன் இல்லாத அன்புக்குரியவர்களையும் நினைக்காமல் இருக்க முடியாது.



பரமேஸ்வரி சிவகுமார், ஒப்பனைக் கலைஞர், டேசா பெட்டாலிங், கோலாலம்பூர்



ஒன்றாக இருந்த அந்தத் தருணங்களே விலைமதிப்பற்றவை

“ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக லங்காவிக்குச் சென்றது எனக்கு மறக்க முடியாத நினைவு. கடற்கரையில் நேரம் செலவிட்டோம், விளையாடினோம், சிரித்தோம். அனைவரும் ஒன்றாக இருந்த அந்தத் தருணங்கள் மிகவும் விலைமதிப்பற்றவை. கொண்டாட்டம் எவ்வளவு பெரியதாக இருந்தது என்பது முக்கியமல்ல; ஒருவருக்கொருவர் நேரம் ஒதுக்கி உறவைப் பேணுவதுதான் முக்கியம்.

முன்பெல்லாம் தீபாவளி வாழ்த்து அட்டைகள் அனுப்புவோம், பலகாரங்களைப் பகிர்ந்துகொள்வோம், தொலைபேசியில் பேசுவோம், நேரில் சென்று உறவினர்களைப் பார்ப்போம். அந்தப் பழக்கங்களில் ஓர் அன்பும் நெருக்கமும் இருந்தன. இப்போது அவை மாறிவிட்டதாக உணர்கிறேன். வண்ணமயமான பாரம்பரிய உடைகளை அணிவதும், மற்றவர்கள் அழகாகத் தயாராகி வருவதைக் காண்பதும் எனக்குப் பிடிக்கும். இந்தத் தீபாவளியில் என் தாத்தா, பாட்டி, அன்பான பெரியம்மா ஆகியோரை நினைத்துக்கொள்கிறேன். அவர்களது அன்பை அந்த நினைவுகள் வழியாகத் தொடர்ந்து உணர்கிறேன்.”

விஜயவிர்மன், செந்தூல், கோலாலம்பூர்

குடும்பத்தினர் இல்லை; நினைவுகள் மட்டும் இருக்கின்றன

“முன்பெல்லாம் தீபாவளி என்றால் எங்கள் வீட்டில் பெரிய கொண்டாட்டமாக இருக்கும். பெற்றோர், சகோதரிகள் எனக் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக மகிழ்ச்சியாகக் கொண்டாடுவோம். ஆனால், நான் திருநங்கையாக மாறிய பிறகு இன்று வரை தீபாவளியைத் தனியாகவே கொண்டாடுகிறேன்.

எனது பெற்றோரும் இப்போது உயிருடன் இல்லை. அதனால் ஒவ்வொரு தீபாவளியும் குடும்பத்தினரின் நினைவுகளை அதிகமாகக் கிளறுகிறது. முன்பு எங்களுடன் இருந்தவர்கள் இன்று இல்லை என்பதை நினைக்கும்போது மனதுக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. குடும்பத்தினருடன் கொண்டாடிய அந்த நாட்கள் இப்போது நினைவுகளாக மட்டுமே இருக்கின்றன. எல்லாமே மறைந்துவிட்டாலும், அந்த நினைவுகள் மட்டும் என்னைவிட்டு அகலவில்லை. தீபாவளி வரும்போதெல்லாம் என் குடும்பத்தினரை மிகவும் தவறவிடுகிறேன்.”



துர்கா, பள்ளி பணியாளர், கோலாலம்பூர்

தீபாவளி மகிழ்ச்சியில் அம்மாவையும் சகோதரியையும் தவறவிடும் இதயம்



தீபாவளி என்றாலே அதிகாலையில் எழுந்து குளித்து, புத்தாடை அணிந்து, இறைவனை வழிபட்டு, குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்ளும் இனிய நினைவுகள் மனதில் மலர்கின்றன. இனிப்புகளைப் பகிர்ந்து, பட்டாசுகளை வெடித்து மகிழ்வதும் எனது தீபாவளிக் கொண்டாட்டத்தின் முக்கியமான பகுதியாகும். அகல் விளக்குகளை ஏற்றி, வண்ணக் கோலமிட்டு தீபாவளியைக் கொண்டாடும் பாரம்பரியத்தில் எனக்கு அதிக ஈடுபாடு உண்டு. குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் இணைந்து மகிழ்ச்சியாகத் தீபாவளியைக் கொண்டாடுவது எனக்கு மனநிறைவைத் தருகிறது. ஆனால், இந்தத் தீபாவளியில் எனது தாயாரையும் சகோதரியையும் மிகவும் தவறவிடுவதாக கருதுகிறேன். தீபாவளியின் மகிழ்ச்சிக்கு மத்தியில், அன்பானவர்களின் நினைவுகள் எனது மனதை நெகிழச் செய்கின்றன.

ரமேஷ் சுவாவினி சிகாம்புட், கோலாலம்பூர்

KEMENTERIAN KOMUNIKASI

SELAMAT HARI

DEEPAVALI

இனிய தீபாவளி வாழ்த்துகள்



YB Teo Nie Ching
Timbalan Menteri Komunikasi

தோட்டத்துத் தீபாவளி...
நினைவுகளில் இன்னும் அணையாத விளக்குகள்

ஹேமா எம்.எஸ். மணியம் ப.சாந்தகுமார்

குடும்பம், உறவுகள், விருந்தோம்பல் என வாழ்வையே கொண்டாட்டமாக்கிய பழைய தீபாவளி

தீபாவளி என்றாலே புத்தாடைகள், பலகாரங்கள், பட்டாசுகள், கோயில் வழிபாடு எனப் பல நினைவுகள் மனதில் மலரும். ஆனால், ஒரு காலத்தில் தோட்டப்புறங்களில் கொண்டாடப்பட்ட தீபாவளி என்பது இவற்றையெல்லாம் கடந்து, குடும்பத்தினரையும் அண்டை வீட்டாரையும் ஒரே பாசப்பிணைப்பில் இணைத்த ஒரு சமூகக் கொண்டாட்டமாகத் திகழ்ந்தது.

வீட்டிலேயே பலகாரங்கள் தயாரிப்பது முதல் அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது வரை ஒவ்வொரு நிகழ்விலும் குடும்ப உறுப்பினர்களின் பங்களிப்பு இருந்தது. அண்டை வீட்டாருடன் உணவையும் பலகாரங்களையும் பகிர்ந்து கொள்வதிலும், உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வதிலும் அளவற்ற மகிழ்ச்சி இருந்தது.

இன்றைய நவீன வாழ்க்கையில் வசதிகள் பெருகியுள்ளன. பலகாரங்களை வாங்கலாம்; புத்தாடைகளை எளிதாகத் தேர்வு செய்யலாம்; கொண்டாட்டங்களையும் திட்டமிடலாம். ஆனால், அன்று தோட்டப்புறங்களில் நிலவிய கூட்டு மகிழ்ச்சி, குடும்ப ஒற்றுமை, விருந்தோம்பல், இன நல்லிணக்கம் ஆகியவற்றை மீண்டும் உருவாக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

தோட்டப்புறங்களில் தீபாவளி கொண்டாடியவர்களின் நினைவுகளைக் கேட்டறிந்தபோது, அவர்களின் மனங்களில் இன்றும் அணையாமல் ஒளிரும் அந்தப் பழைய தீபாவளியின் அழகிய தருணங்கள் வெளிப்பட்டன.

பலகாரம் செய்வதில் இருந்த மகிழ்ச்சி, இன்று எங்கே?



பேரா, கிரியான், கோல குரோ தோட்டத்தில் கொண்டாடிய தீபாவளி நினைவுகள் எனக்கு இன்றும் பசுமையாக இருக்கின்றன. அப்போது பண்டிகைக்கான ஏற்பாடுகளில் பெண்கள் அனைவரும் ஒன்றுகூடிப் பங்கேற்போம். தானியங்களை நாங்களே கைமுறையில் இடித்து, மாவு தயாரித்து, முறுக்கு உள்ளிட்ட பாரம்பரியப் பலகாரங்களைச் செய்வோம்.

பலகாரங்கள் செய்வதோடு எங்கள் கொண்டாட்டம் முடிந்துவிடாது. இறைச்சி உள்ளிட்ட பல்வேறு உணவு வகைகளையும் சமைப்போம். அண்டை வீட்டாருக்கும் அவற்றைக் கொடுப்போம். குடும்பத்தினர், குழந்தைகள் என அனைவரும் ஒன்றுகூடி, ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டாடிய அந்த நாட்கள் மகிழ்ச்சி நிறைந்தவை.

இப்போது வேலைப்பளுவும் குடும்பப் பொறுப்புகளும் அதிகரித்து விட்டன. முன்புபோல அனைவரும் ஒன்றுகூடி பலகாரம் தயாரிக்கும் பழக்கம் குறைந்து விட்டது. பெரும்பாலான பலகாரங்களைக் கடைகளிலேயே வாங்கி விடுகிறோம்.

அன்று வீடு வீடாக உணவையும் பலகாரங்களையும் பகிர்ந்து கொண்டோம். இன்று அவரவர் வீடுகளுக்குள்ளேயே கொண்டாட்டத்தைச் சுருக்கிக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

பலகாரங்களின் சுவையைவிட, அவற்றை அனைவரும் ஒன்றாகச் செய்து பகிர்ந்து கொண்ட அனுபவம்தான் என் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. பழைய தீபாவளியில் நிலவிய அந்தக் கூட்டு மகிழ்ச்சியும் அன்பும் மீண்டும் வராதா என்ற ஏக்கம் எனக்கு இருக்கிறது.

சுசீலா தான் குய் லான், 70 வயது, கோலா குராவ் தோட்டம்

தீபாவளி வந்துருச்சு எழுந்திருங்க!”

அப்பாவின் குரல் இன்னும் காதில் ஒலிக்கிறது



கெடா மாநிலம், கூலிம், சுங்கை ஊலார் தோட்டத்தில் குடும்பத்தினருடன் வாழ்ந்த காலத்தை நினைத்தாலே எனக்கு முதலில் நினைவுக்கு வருவது அப்பாவின் குரல்தான். தீபாவளியன்று அதிகாலையில், “தீபாவளி வந்துருச்சு எழுந்திருங்க!” என்று அவர் எழுப்புவது இன்னும் காதில் ஒலிக்கிறது.

எங்கள் குடும்பத்தில் சுமார் 10 பேர் இருந்தோம். தீபாவளிக்கு ஒரு மாதத்திற்கு முன்பே வீட்டைச் சுத்தம் செய்து, சுவர்களுக்குப் புதுச் சாயம் பூசி, புத்தாடைகள் வாங்கி, பண்டிகைக்கான ஏற்பாடுகளைத் தொடங்கிவிடுவோம். முறுக்கு உள்ளிட்ட பாரம்பரியப் பலகாரங்களை வீட்டிலேயே தயாரிப்போம். அம்மா இரண்டு டின் நிறைய முறுக்கு செய்து வைப்பார். அப்போது கடையில் வாங்கிய பலகாரங்களுக்கு இடமே இல்லை.

தீபாவளியன்று அதிகாலை ஐந்து மணிக்கே அப்பா எங்களை எழுப்பி விடுவார். அனைவருக்கும் எண்ணெய் தேய்த்துவிட்டு, அம்மா தயாரித்து வைத்திருக்கும் வெந்நீரில் குளிப்போம். பின்னர் குடும்பத்தினருடன் கோயிலுக்குச் சென்று வழிபடுவோம்.

இறைவனை வழிபட்ட பின்னர்தான் பலகாரங்களைச் சாப்பிட அனுமதிப்பார்கள்.

புத்தாடை அணிந்து கோயிலுக்குச் சென்ற பிறகு, உறவினர்கள் மற்றும் அண்டை வீட்டாரின் வீடுகளுக்குச் செல்வோம். எந்த வீட்டிற்குச் சென்றாலும் அன்பான வரவேற்பும் பலகார உபசரிப்பும் காத்திருக்கும்.

எங்கள் தோட்டத்தில் வசித்த மலாய் குடும்பங்களுடனும் பலகாரங்களைப் பரிமாறிக் கொள்வோம். தீபாவளியின்போது நாங்கள் பலகாரங்களைக் கொடுப்போம். ஹரிராயா காலத்தில் மலாய் குடும்பங்கள் தங்களது உணவையும் பலகாரங்களையும் எங்களுடன் பகிர்ந்து கொள்வார்கள். அந்தப் பழக்கம் எங்களிடையே நல்லிணக்கத்தையும் நெருக்கத்தையும் வளர்த்தது.

அந்தக் காலத்தில் குழந்தைகளுக்குக் கிடைத்த 50 வெள்ளிகூட எங்களுக்கு அளவற்ற மகிழ்ச்சியைத் தரும். இன்று வசதிகள் அதிகரித்து விட்டன. ஆனால், குடும்பத்தினர் அனைவரும் ஒன்றுகூடி மகிழ்ந்த அந்த நாட்களை மீண்டும் பெற முடியுமா என்ற ஏக்கம் எனக்கு இருக்கிறது.

பார்வதி, சுங்கை ஊலார் தோட்டம், கூலிம்.

தோட்டத்தில் அனைவரும் ஒன்றுகூடி மகிழ்ந்த காலம் மாறிவிட்டது!

கெடா, கூலிம், சுங்கை கோப் தோட்டத்தில் பிறந்து வளர்ந்த எனக்கு, தீபாவளி என்றாலே தோட்டத்து மக்கள் அனைவரும் ஒன்றுகூடி மகிழ்ந்த காலம்தான் நினைவுக்கு வருகிறது. எங்கள் குடும்பத்தில் ஒன்பது உடன்பிறப்புகள் இருந்தோம். பண்டிகைக்கான ஏற்பாடுகள் சில நாட்களுக்கு முன்பே தொடங்கிவிடும்.

வீட்டில் பலகாரங்கள் தயாரிப்போம். தீபாவளியன்று அதிகாலையில் எண்ணெய் தேய்த்துக் குளித்து, சாம்பிராணி புகையிட்டு இறைவனை வழிபடுவோம். காலை ஏழு மணிக்குள் புத்தாடைகளையும் நகைகளையும் அணிந்து கொண்டு, பட்டாசுகளை வெடித்துக் கொண்டாடுவோம்.

தீபாவளிக்கு ஒரு வாரத்திற்கு முன்பே பட்டாசுச் சத்தம் தோட்டம் முழுவதும் கேட்கத் தொடங்கிவிடும். அண்டை வீட்டாரின் வீடுகளுக்குச் சென்று பலகாரங்களைப் பகிர்ந்து கொள்வோம். வாழ்த்துகளையும் பரிமாறிக் கொள்வோம்.


ஆனால், நகரமயமாக்கலும் மாறிவிட்ட வாழ்க்கை முறையும் அன்றைய கொண்டாட்டத்தை மாற்றிவிட்டன. முன்பு தோட்டத்தில் அனைவருடனும் ஒன்றுகூடி மகிழ்ந்தோம். இப்போது ஒவ்வொருவரும் தங்களது வீடுகளுக்குள் அடைபட்டிருப்பதைப் போன்ற உணர்வு ஏற்படுகிறது.



அன்றைய காலத்தில் ஐந்து பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்துக் குக்கூட வீட்டுச் செலவு, தீபாவளிச் செலவு அனைத்தையும் சேர்த்து 500 வெள்ளிக்குள் சமாளிக்க முடிந்தது. இன்று துணிமணிகள் மற்றும் பிற செலவுகளுக்காக 1,000 வெள்ளிக்கு மேல் செலவிட்டாலும் போதவில்லை.

தோட்டப்புறத் தீபாவளியின் சிறப்பு பட்டாசுகளிலும் புத்தாடைகளிலும் மட்டும் இருக்கவில்லை. அனைவரும் ஒன்றுகூடி வாழ்ந்த அன்பும், உணவைப் பகிர்ந்து கொண்ட பண்பாடும் இன்றும் மறக்க முடியாதவை.

கிருஷ்ணம்மா, சுங்கை கோப் தோட்டம், கூலிம்





வீட்டுக்கு வருபவர்களுக்குக் குறைந்தது பத்து பேருக்காவது விருந்து கொடுக்க வேண்டும்

தோட்டப்புறங்களில் தீபாவளி என்றாலே மகிழ்ச்சியும் பரபரப்பும் நிறைந்திருக்கும். பண்டிகைக்கு ஒரு மாதத்திற்கு முன்பே ஏற்பாடுகளைத் தொடங்கிவிடுவோம். ஒருவர் மற்றவருக்கு உதவுவது, பலகாரங்கள் தயாரிப்பது எனத் தோட்டமே கொண்டாட்டத்திற்குத் தயாராகும். கல்லுருண்டை அரைக்கும் இயந்திரத்தைச் சைக்கிளில் வைத்துக் கொண்டு, ஒவ்வொரு வீட்டிற்கும் எடுத்துச் சென்று மாவு அரைத்த நினைவுகள் இன்றும் மறக்க முடியாதவை. இன்று இயந்திரங்களும் வசதிகளும் மாறியிருக்கலாம். ஆனால், அப்போது அந்த இயந்திரத்துடன் வீடு வீடாகச் சென்று உதவியதில் வெறும் வேலையைத் தாண்டி, அண்டை வீட்டாருடன் பகிர்ந்து கொண்ட உறவும் மகிழ்ச்சியும் இருந்தன. எங்கள் பெற்றோர் கற்றுக் கொடுத்த விருந்தோம்பல் பண்பாட்டை இன்றும் தொடர்ந்து கடைப்பிடிக்கிறோம். தீபாவளியன்று வீட்டிற்கு வருபவர்களுக்குக் குறைந்தது பத்து பேருக்காவது விருந்து அளிக்க வேண்டும் என்பது எங்கள் குடும்பத்தில் தலைமுறையாகப் பின்பற்றப்படும் பாரம்பரியம். வீட்டிற்கு வருபவர்களின் எண்ணிக்கையைப் பார்த்து உபசரிப்பைக் குறைக்கக்கூடாது. வந்தவர்களை அன்புடன் வரவேற்று உணவளிப்பதுதான் உண்மையான தீபாவளி மகிழ்ச்சி. பிள்ளைகள் பட்டாசு வெடித்து மகிழ்வது ஒரு பக்கம் இருந்தாலும், வீட்டிற்கு வருபவர்களுடன் உணவைப் பகிர்ந்து கொள்வதில்தான் பண்டிகையின் முழுமை இருக்கிறது. பெற்றோரிடம் கற்ற இந்தப் பண்பாடு அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

ஆறுமுகம் -ஆயி தம்பதியர், ஜெராம் பாடாங், பகாங்

தலைத் தீபாவளி முதல் இன்றுவரை மாமியார் வீடுதான் எங்கள் கொண்டாட்டத்தின் மையம்

திருமணமானபோது மாமியார் வீட்டில் தலைத் தீபாவளியைக் கொண்டாடினோம். அதன்பிறகு ஒவ்வோர் ஆண்டும் அங்கேயே தீபாவளியைக் கொண்டாடி வருகிறோம். மாமியார் குடும்பத்தினர் எங்கள் மீது காட்டும் அன்பும் அக்கறையும்தான் இந்த வழக்கம் தொடர்ந்து வருவதற்கான முக்கியக் காரணம். எங்களுக்கு லாவன்ராஜ் என்ற மகனும் சப்னா என்ற மகளும் உள்ளனர். எங்கள் குடும்பத்தில் தீபாவளி என்பது ஒரு பண்டிகையைக் கொண்டாடுவது மட்டுமல்ல; உறவுகளைப் புதுப்பித்துக் கொள்ளும் நாளாகவும் இருக்கிறது. திருமணத்திற்குப் பிறகு புதிய குடும்ப உறவுகளுடன் இணைந்து, அவர்களின் பாரம்பரியத்தையும் பண்டிகை வழக்கங்களையும் பகிர்ந்து கொள்வது தனி மகிழ்ச்சியைத் தருகிறது. தலைத் தீபாவளியன்று கிடைத்த அன்பான வரவேற்பு இன்றுவரை தொடர்கிறது. விலையுயர்ந்த பரிசுகளிலோ ஆடம்பர ஏற்பாடுகளிலோ மட்டும் பண்டிகையின் மகிழ்ச்சி இல்லை. நம்மை அன்புடன் ஏற்றுக் கொண்டு, சொந்த மக்களாகக் கொண்டாடும் உறவுகளிடம்தான் அதன் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது.

ரோபி சந்திரா - பிரேமலதா தம்பதியர், கெபிஸ் தோட்டம், பகாவ்



உறவினர்களின் அன்பு உபசரிப்பில் கழிந்த மறக்க முடியாத தலைத் தீபாவளி

திருமணத்திற்குப் பிறகு கொண்டாடிய எங்கள் முதல் தீபாவளி மறக்க முடியாத அனுபவம். பண்டிகைக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் முடித்துவிட்டு, தீபாவளிக்கு முந்தைய நாள் இரவு இருவரும் சேர்ந்து வீட்டிற்கு என்ன கோலம் போடலாம் என்று ஆலோசித்தோம். பின்னர் வீட்டின் வாசலில் கோலமிட்டு, மறுநாள் கொண்டாட்டத்திற்குத் தயாரானோம். தீபாவளி அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளித்தோம். பின்னர் மாமனார், மாமியாரின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றோம். தொடர்ந்து கோயிலுக்குச் சென்று வழிபட்டோம். அதன் பின்னர்தான் எங்களது தலைத் தீபாவளி உண்மையான உற்சாகத்துடன் தொடங்கியது. "பொண்ணையும் மாப்பிள்ளையையும் கூட்டிக் கொண்டு வாங்க!" என்று உறவினர்கள் அன்புடன் அழைத்ததால், மாமியார் வீட்டின் உறவினர்கள் ஒவ்வொருவரின் வீடாகச் சென்றோம். ஒவ்வொரு வீட்டிலும் விதவிதமான உணவு வகைகளுடன் அன்பான உபசரிப்பு காத்திருந்தது. ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்குச் செல்வதும், உறவினர்களுடன் அமர்ந்து உணவருந்துவதும், வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வதுமாக அந்த நாள் முழுவதும் மகிழ்ச்சியாகக் கழிந்தது. நேரம் சென்றதே தெரியவில்லை. தலைத் தீபாவளி என்பது ஒரு தம்பதியரின் தனிப்பட்ட கொண்டாட்டம் மட்டுமல்ல. புதிய உறவுகளின் அன்பையும் குடும்பத்தின் அரவணைப்பையும் உணர்த்தும் இனிய தொடக்கம் என்பதற்கு எங்களது அனுபவமே சான்று.

ரோபர்ட்- பத்மா தம்பதியர், NUPW பணியாளர், நெகிரி செம்பிலான்





தலைத் தீபாவளி எங்கள் புதிய வாழ்க்கையில் மறக்க முடியாத அத்தியாயம்

தீபாவளி என்றாலே குடும்பத்தினருடன் ஒன்றுகூடி மகிழ்வது, இறைவனை வழிபடுவது, உறவினர்களைச் சந்தித்து வாழ்த்துகளைப் பரிமாறுவது எனப் பல இனிய தருணங்கள் நினைவுக்கு வருகின்றன. திருமணத்திற்குப் பிறகு கொண்டாடிய எங்கள் தலைத் தீபாவளி இந்த மகிழ்ச்சியில் மேலும் ஓர் அழகிய அத்தியாயத்தைச் சேர்த்தது. தீபாவளி என்பது பழைய நினைவுகளைப் புதுப்பிப்பதோடு புதிய நினைவுகளையும் உருவாக்கும் திருநாள். குறிப்பாக, தலைத் தீபாவளி தம்பதியருக்கு மட்டுமின்றி இரு குடும்பங்களுக்கும் நெருக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்பாக அமைகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் தீபாவளி கொண்டாடப்படும் விதம் மாறுபட்டாலும், அதன் அடிப்படையில் இருப்பது அன்பும் மகிழ்ச்சியும் குடும்ப ஒற்றுமையும்தான். இந்தத் தீபாவளி அனைவரது இல்லங்களிலும் மகிழ்ச்சியையும் அமைதியையும் ஒற்றுமையையும் கொண்டு வரட்டும் என்பதே எங்கள் வாழ்த்து.

மதியழகன் கலைவாணி தம்பதியர், லாபு தோட்டம், நீலாய்

தீபாவளித் திரையில் ஐந்து படங்கள்:

தீபாவளி என்றாலே புத்தாடை, பலகாரம், குடும்பச் சந்திப்பு மட்டுமல்ல; புதிய திரைப்படங்களைக் குடும்பத்துடன் திரையரங்கில் ரசிப்பதும் ரசிகர்களின் முக்கியமான கொண்டாட்டம். இந்த ஆண்டு தீபாவளித் திரைப்படப் பட்டியலில் ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய், அஜித் குமார் போன்ற முன்னணி நட்சத்திரங்களின் படங்கள் இடம்பெறாத நிலையில், வெவ்வேறு கதைக்களங்களுடன் ஐந்து திரைப்படங்கள் ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கத் தயாராகியுள்ளன.

நவம்பர் 5, 6 ஆகிய தேதிகளில் வெளியாகத் திட்டமிடப்பட்டுள்ள இந்தப் படங்கள், அதிரடி, நகைச்சுவை, ஆன்மிகம், புராணம், குடும்பப் பாசம் எனப் பல்வேறு அம்சங்களை முன்வைக்கின்றன.

நட்சத்திரப் போட்டியைத் தாண்டிய புதுமைகள்

சீன் (SCENE)

ஜித்து மாதவன் இயக்கத்தில் சூர்யா, நஸ்ரியா நசீம், நஸ்லென் உள்ளிட்டோர் நடிக்கும் இப்படத்தில், வழக்கமான பாணிக்கு மாறாகச் செயல்படும் காவல் அதிகாரியாகச் சூர்யா தோன்றுகிறார். குற்றவாளிகளைக் கையாள்வதில் தனித்துவமான அணுகுமுறையைக் கொண்ட அதிகாரியை மையமாக வைத்து, அதிரடி, நகைச்சுவை, குற்றப் பின்னணி ஆகியவற்றுடன் கதை நகர்கிறது. சுஷின் ஷ்யாம் இசையமைக்கிறார். நவம்பர் 6 வெளியீடாக அறிவிக்கப்பட்டுள்ளது.



அப்பா கெட்டி

விஜய் ஆண்டனி நடிப்பில் உருவாகியுள்ள இப்படம், தந்தைக்கும் மகளுக்கும் இடையிலான பாசத்தையும் அவர்களது உறவைச் சோதிக்கும் சவால்களையும் மையமாகக் கொண்டது. பிரீத்தி அஸ்ரானி, லிதன்யா சிவபாலன் உள்ளிட்டோர் நடிக்கின்றனர். நடிப்புடன் இசையமைப்பு, படத்தொகுப்பு உள்ளிட்ட பொறுப்புகளையும் விஜய் ஆண்டனி ஏற்றுள்ளார். நவம்பர் 6 வெளியீடு.

மூக்குத்தி அம்மன் 2



சுந்தர் சி இயக்கத்தில் நயன்தாரா மீண்டும் தெய்வீகக் கதாபாத்திரத்தில் நடிக்கிறார். ஓர் அரசாட்சிக்கு ஏற்படும் அச்சுறுத்தல், இளவரசனைக் காக்கும் தாயின் தியாகம், தீய சக்திக்கு எதிரான தெய்வீகப் போராட்டம் ஆகியவை கதையின் மையமாக அமைகின்றன. ரெஜினா கசாண்ட்ரா, ஊர்வசி, யோகி பாபு உள்ளிட்டோர் நடிக்கும் இப்படத்திற்கு ஹிப் ஹாப் தமிழா இசையமைக்கிறார். நவம்பர் 6 வெளியாகிறது.

மூன் வாக்



பிரபுதேவா நடிக்கும் இந்தப் படத்தை மனோஜ் என்.எஸ். இயக்குகிறார். நடனம், இசை, நகைச்சுவை ஆகியவற்றை மையமாகக் கொண்ட குடும்பப் பொழுதுபோக்குப் படமாக இது உருவாகியுள்ளது. ஏ.ஆர். ரஹ்மான் இசையமைப்பதுடன், பாடல்களைப் பாடியிருப்பதும் படத்தின் சிறப்பம்சமாகக் கூறப்படுகிறது. யோகி பாபுவும் முக்கியப் பங்கு வகிக்கிறார். நவம்பர் 6 திரைக்கு வருகிறது.

ராமாயணம்: ஒரு காவியுத்தின் மறுவடிவம்

நிதேஷ் திவாரி இயக்கத்தில் ரன்பீர் கபூர் ராமராகவும், சாய் பல்லவி சீதையாகவும், யஷ் ராவணனாகவும் நடிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ள இப்படம், இந்தியாவின் புகழ்பெற்ற இதிகாசத்தைப் பிரம்மாண்டமான திரை அனுபவமாக வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சீதையின் கடத்தல், அவரை மீட்க ராமர் மேற்கொள்ளும் பயணம், நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டம் ஆகியவை கதையின் முக்கிய அம்சங்கள். ஹான்ஸ் சிம்மர், ஏ.ஆர். ரஹ்மான் இசையமைப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நவம்பர் 5 வெளியீடாக அறிவிக்கப்பட்டுள்ளது.




இந்தத் தீபாவளியில் எந்தப் படம் ரசிகர்களின் மனதை வெல்லும், வசூலில் முன்னிலை பெறும் என்பது திரையிடலுக்குப் பின்னரே தெரியவரும். ஆனால், வெவ்வேறு கதைகளையும் கலை அனுபவங்களையும் குடும்பத்தினருடன் ரசிக்கும் வாய்ப்பை இந்தப் படங்கள் வழங்குகின்றன. தீபாவளிக் கொண்டாட்டத்தில் திரையரங்க அனுபவமும் ஓர் அங்கமாக மாறுமா என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பு.

PERAK

MALAYSIA MADANI

2030 PERAK SEJAHTERA

இனிய தீபாவளி வாழ்த்துகள்



ஒளி பிறக்கட்டும், மகிழ்ச்சி மலரட்டும்...
அன்பு பெருகட்டும், வளம் நிறையட்டும்...
ஒவ்வொரு இல்லமும் இன்ப ஒளியால்
நிறைந்திடட்டும்

அன்புடன்,

மாண்புமிகு

டத்தோ சிவநேசன் அச்சலிங்கம்

பேராக் மாநில சுகாதாரம், மனிதவளம்,
தேசிய ஒருமைப்பாடு
மற்றும் இந்தியர் நலப்பிரிவு ஆட்சிக்குழு
உறுப்பினர்
சுங்கை சட்டமன்ற உறுப்பினர்

• தாயகத்தை விட்டு வந்தாலும்... •

தீபாவளி நினைவுகள் மட்டும் அங்கேயே

• ரா.சங்கீதா • சரவணன் தசரதன்

மலேசியாவில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்களின் மனதில் ஒளிரும் தாயகத் தீபாவளி

தீபாவளி வந்துவிட்டாலே வீடு நிறையும் பலகார மணம், அதிகாலை எண்ணெய்க் குளியல், புத்தாடை, பட்டாசு சத்தம், குடும்பத்தினரின் சிரிப்பு, நண்பர்களின் கலகலப்பு என ஒரு முழுமையான கொண்டாட்டம் கண்முன் விரியும்.

ஆனால், குடும்பத்தை விட்டு வெகு தொலைவில் வந்து வேலை செய்யும் இந்தியத் தொழிலாளர்களுக்கு தீபாவளி என்பது மகிழ்ச்சியோடு கலந்த ஏக்கமும் கூட. கோலாலம்பூரில் பல்வேறு இடங்களில் வேலை செய்யும் எட்டு இந்தியர்களிடம், ''இந்தத் தீபாவளியை எப்படி கொண்டாடப் போகிறீர்கள்? இந்தியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையே நீங்கள் காணும் வித்தியாசம் என்ன? உங்கள் மனதில் ஆழமாக சொல்ல வேண்டியது என்ன?'' என்று கேட்டோம். அவர்களின் பதில்களில் ஒலித்தது வெறும் தீபாவளி கொண்டாட்டம் அல்ல தாயகத்தின் நினைவு.

பூசைக்குமார்,

கண்ணமங்கலம், தமிழ்நாடு



மூன்று ஆண்டுகளாக மலேசியாவில் இருக்கும் பூசைக்குமாருக்கு, தீபாவளி என்றாலே தனது கிராமமும் அங்குள்ள குழந்தைகளும்தான் நினைவுக்கு வருகின்றனர். கிரிக்கெட் குழுவை உருவாக்கி குழந்தைகளுக்குப் பயிற்சி அளித்ததும், அவர்களுடன் விளையாடியதும், அவர்களுக்கு பட்டாசும் உணவும் வாங்கிக் கொடுத்ததும் இன்று இனிய நினைவுகளாகிவிட்டன.

''நான் பயிற்சி கொடுத்த குழந்தைகளில் ஒருவர் வழக்கறிஞராகவும், ஒருவர் ராணுவத்திலும் சேர்ந்திருக்கிறார். இப்போது அந்தக் கிராமமே வெறிச்சோடி இருப்பதுபோல் உணர்கிறேன். அந்தக் குழந்தைகள் என்னை ஊருக்குத் திரும்பி வரச் சொல்கிறார்கள்'' என்கிறார்.

மணிகண்டன்,

காரைக்குடி, சிவகங்கை



மலேசியாவில் 12 ஆண்டுகளாக இருக்கும் மணிகண்டனுக்கு, இந்தியாவைக் காட்டிலும் மலேசியாவில் தீபாவளிக்கான ஏற்பாடுகள் வெகு முன்னதாகவே தொடங்குவது வியப்பாக இருக்கிறது.

இந்தியாவில் தமது ஊரில் ஒரு வாரத்துக்கு முன்புதான் பரபரப்பு தொடங்கும் நிலையில், மலேசியாவில் ஒரு மாதத்துக்கு முன்பே பலகாரம் செய்வது, பொருட்கள் வாங்குவது எனக் கொண்டாட்டக் களைகட்டிவிடுகிறது.

''குடும்பத்தையும் ஊரையும் நாங்கள் மிகவும் நினைக்கிறோம். ஆனால் மலேசியாவில் தீபாவளி மிகவும் கோலாகலமாக இருப்பதால், அது எங்கள் மனதில் இருக்கும் தாயக ஏக்கத்தை ஓரளவு ஆற்றுகிறது'' என்கிறார்.

ரெங்கசாமி காந்தீஸ்வரன்,

ஹட்டன், இலங்கை



நான்கு ஆண்டுகளாக மலேசியாவில் இருக்கும் இலங்கையின் ஹட்டனைச் சேர்ந்த ரெங்கசாமிக்கு, தீபாவளி என்றாலே குழந்தைகளுடன் பட்டாசு வெடித்ததும், வீட்டில் செய்த பலகாரங்களும் நினைவுக்கு வருகின்றன. இங்கும் மகிழ்ச்சியாகக் கொண்டாடினாலும், மறுநாளே வேலைக்குத் திரும்ப வேண்டியிருப்பதால், ஊரில் இருப்பதைப் போன்ற முழுமையான கொண்டாட்டம் அமையவில்லை என்பது அவரது ஏக்கம்.

மனோபாலன்,

ராமநாதபுரம்



2021ஆம் ஆண்டு மலேசியா வந்த மனோபாலனுக்கு, இங்குள்ள தீபாவளி ஒரு பெரிய விழாவைப் போலத் தெரிகிறது.

ஊரில் ஒரு வாரத்துக்கு முன்புதான் கடைகள் திறக்கும் நிலையில், மலேசியாவில் ஒரு மாதத்துக்கு முன்பே தீபாவளி பரபரப்பு தொடங்கிவிடுகிறது. ஆனால், அந்தக் கொண்டாட்டத்துக்கு நடுவிலும் அவரது மனம் சொந்த ஊரையே தேடுகிறது.

''அம்மா, அப்பா, குடும்பத்தினர், நண்பர்கள் எல்லோரையும் நினைக்கிறேன். எல்லாவற்றையும் விட, என் ஊரில் இருந்த அந்த நாட்களின் நினைவுதான் மிகவும் அதிகமாக வருகிறது'' என்கிறார்.

விஷால்,
அதிராம்பட்டினம், தஞ்சாவூர்



மலேசியாவுக்கு வந்து ஆறு மாதங்களே ஆன விஷாலுக்கு இது முதல் மலேசியத் தீபாவளி. இதுவரை பெற்றோருடன் கொண்டாடிய தீபாவளியே அவரது நினைவில் நிற்கிறது. ‘‘இந்த ஆண்டு அம்மா, அப்பாவுடன் தீபாவளி கொண்டாட வேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால் வெளிநாட்டுக்கு வந்துவிட்டதால், இந்தத் தீபாவளியில் அவர்களை மிகவும் நினைத்துக் கொண்டிருக்கிறேன்’’ என்கிறார்.

பாண்டியன்,
அறந்தாங்கி, புதுக்கோட்டை



மூன்று ஆண்டுகளாக மலேசியாவில் இருக்கும் பாண்டியனுக்கு, குடும்பத்துக்காகப் போராடும் வாழ்க்கையில் தீபாவளியின் மகிழ்ச்சியே குறைந்துவிட்டதாகத் தோன்றுகிறது.

ஊரில் குழந்தைகள் பட்டாசு கேட்கும் முன்பே, வேலை முடிந்து வரும் வழியில் சிறிது சிறிதாக வாங்கி வைத்து மகிழ்ந்த தந்தை அவர். இப்போது அந்த மகிழ்ச்சியைத் தொலைவில் இருந்து மட்டுமே பார்க்கிறார். ‘‘குடும்பத்துக்காகத்தான் இங்கு கஷ்டப்படுகிறேன். ஆனால் மூன்று ஆண்டுகளாகப் பார்த்தால், எனக்கு தீபாவளி என்றால் முன்பு இருந்த அர்த்தமே இல்லை. குழந்தைகளையும் குடும்பத்தையும் மிகவும் நினைக்கிறேன்’’ என்கிறார்.

சதீஷ்குமார்,
திருவண்ணாமலை



2022ஆம் ஆண்டு மலேசியா வந்த சதீஷ்குமாருக்கு மலேசியா மீது தனிப்பட்ட பாசம் ஏற்பட்டுவிட்டது.

‘‘என் ஊருக்குப் பிறகு எனக்கு மிகவும் பிடித்த இடம் மலேசியாதான். இங்குள்ள நண்பர்களுடன் தீபாவளி கொண்டாடும்போது ஊரில் இருப்பதைப் போலவே உணர்கிறேன். ஆனால் குடும்பத்துடன் கொண்டாடுவது மட்டுமே இங்கு குறையாக இருக்கிறது’’ என்கிறார்.

அவருக்கு தீபாவளி என்றாலே இன்னொரு இனிய நினைவும் உண்டு – ஊரில் தீபாவளி தினத்தில் நடிகர் அஜித் நடித்த புதிய திரைப்படத்தைத் தவறாமல் பார்ப்பது!

குமார் குருக்கள்
காரைக்கால், பாண்டிசேரி



மலேசியாவில் 25 ஆண்டுகளாக கோயில் பணியில் இருக்கும் குமாருக்கு, இந்தியாவில் சிறுவயதில் கொண்டாடிய தீபாவளியும் இன்றைய மலேசியத் தீபாவளியும் வெவ்வேறு நினைவுகளைத் தருகின்றன.

இந்தியாவில் அதிகாலை எண்ணெய்க் குளியல், படையல், புத்தாடை, குடும்ப வழிபாடு எனத் தொடங்கும் தீபாவளி, மலேசியாவில் பெரும்பாலும் கோயில் வழிபாட்டை மையமாகக் கொண்டிருப்பதாக அவர் கூறுகிறார். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் தீபாவளி கொண்டாடாத அவர், இந்த ஆண்டு மட்டும் குழந்தைகளுக்காகத் தாயகம் செல்லத் திட்டமிட்டுள்ளார்.

‘‘‘அப்பா, தீபாவளிக்கு வருவீர்களா?’ என்று குழந்தைகள் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். இத்தனை ஆண்டுகள் தவறவிட்ட அந்தத் தருணங்களை இனியும் தவறவிடக்கூடாது. குழந்தைகளுடன் நேரம் செலவிடுவதுதான் முக்கியம்’’ என்கிறார்.

தீபாவளி ஒரு நாள் அல்ல

தாயகத்தை விட்டு ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் தொலைவில் இருந்தாலும், இந்த எட்டு பேரின் மனதிலும் தீபாவளி இன்னும் தாயகத்தில்தான் கொண்டாடப்படுகிறது.

ஒருவருக்கு குழந்தைகள் இன்னொருவருக்கு பெற்றோர் ஒருவருக்கு நண்பர்கள் மற்றொருவருக்கு ஊரின் தெருக்களும், பலகாரங்களும், பட்டாசு சத்தமும் கையில் இருக்கும் தீபம் மலேசியாவில் எரிந்தாலும், அதன் வெளிச்சம் அவர்களின் நினைவுகளில் இன்னும் தாயகத்தையே தேடிக் கொண்டிருக்கிறது.

உங்கள் ராசிக்கு பிடித்த தீபாவளி பலகாரம் எது?

-ஒரு ஜோதிடப் பார்வை

■ ரா. சங்கீதா

மலேசியாவில் தீபாவளித் திருநாள் நெருங்கிவிட்ட நிலையில், புத்தாடைகள், எண்ணெய் குளியல் மற்றும் உறவினர்களின் சந்திப்புகளுடன் நம் வீடுகளில் மணக்கும் பலகாரங்களும் பண்டிகையின் முக்கிய அம்சமாக மாறுகின்றன. முறுக்கு முதல் அச்சு முறுக்கு வரை, உங்கள் ராசிக்கு ஏற்ற பாரம்பரிய இந்திய பலகாரம் எது என்பதை இந்தச் சிறப்புச் செய்தி அலசுகிறது.

தீபாவளி என்றாலே நினைவுக்கு வருவது சுடச்சுடச் சுவைக்கும் பாரம்பரியப் பலகாரங்கள்தான். முறுக்கு, அச்சு முறுக்கு, ஓமப்பொடி, மிக்சர், அதிரசம், லட்டு, சீடை, நெய் அப்பம் எனப் பலவிதமான இனிப்பு மற்றும் கார வகைகளால் தீபாவளி மேசைகள் அலங்கரிக்கப்படும். இந்த உற்சாகக் கொண்டாட்டத்தில், ஜோதிட நம்பிக்கைகளின் அடிப்படையில் 12 ராசிகளுக்கும் எந்தெந்தப் பலகாரங்கள் பொருத்தமாக இருக்கும் என்பதைப் பார்ப்போம்.

குறிப்பு இது பாரம்பரிய ஜோதிட நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொழுதுபோக்கு அம்சம் மட்டுமே)

12 ராசிகளும் தீபாவளி பலகாரங்களும்



மேஷம்

முறுக்கு: துடிப்பும் தன்னம்பிக்கையும் கொண்டவர்களாக மேஷ ராசியினர் கருதப்படுகின்றனர். அதனால், எங்கு சென்றாலும் தனக்கென தனித்த இடத்தைப் பிடிக்கும் முறுக்கு இவர்களுக்கு மிகப் பொருத்தமான பலகாரமாகும்.

ரிஷபம்

அதிரசம்: பாரம்பரியம், குடும்பம் மற்றும் சுவையான உணவுகளை விரும்புபவர்களாக ரிஷப ராசியினர் பார்க்கப்படுகின்றனர். தலைமுறைகள் கடந்து வரும் அதிரசத்தின் பாரம்பரியச் சுவை இவர்களுக்கு மிகவும் ஏற்றது.






மிதுனம் -

அச்சு முறுக்கு: வித்தியாசமான விஷயங்களை ஆர்வத்துடன் அணுகும் மிதுன ராசியினருக்கு அச்சு முறுக்கு பொருத்தமான தேர்வு. அதன் அழகான வடிவமும் மென்மையான மொறுமொறுப்பும் அனைவரது கவனத்தையும் ஈர்க்கும்.

கும்பம்

தேங்காய் பர்பி: தனித்துவமான சிந்தனையும் வித்தியாசமான அணுகுமுறையும் கொண்டவர்களாகக் கும்ப ராசியினர் கருதப்படுகின்றனர். தேங்காயின் தனித்துவமான சுவை கொண்ட பர்பி இவர்களுக்குப் பொருத்தமானதாக இருக்கும்.



கடகம் -

நெய் அப்பம்: குடும்பப் பாசம் மற்றும் பழைய நினைவுகளுடன் தொடர்புடையவர்களாகக் கருதப்படும் கட ராசியினருக்கு நெய் அப்பம் பொருத்தமாக இருக்கும். வீட்டில் பெரியவர்கள் தயாரித்த பலகாரங்களின் நினைவுகளையும் இது கண்முன்னே கொண்டுவரும்.



கன்னி - ரிப்பன் பகோடா: ஒழுங்கையும் நுணுக்கத்தையும் விரும்பும் கன்னி ராசியினருக்கு ரிப்பன் பகோடா பொருத்தமானது. ஒரே மாதிரியான நேர்த்தியான வடிவத்தில் தயாரிக்கப்படும் இந்த பலகாரம் இவர்களின் குணத்துடன் ஒத்துப்போகும்.



சிம்மம் - லட்டு தன்னம்பிக்கை மற்றும் தனித்துவம் கொண்ட சிம்ம ராசியினருக்கு, பண்டிகை மேசையில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் லட்டு சரியான தேர்வாகும்.





விருச்சிகம் -

கார மிக்சர்: வலுவான தன்மை கொண்டவர்களாக விருச்சிக ராசியினர் கருதப்படுகின்றனர். காரமும் சுவையும் நிறைந்த மிக்சர், இவர்களின் தீவிரமான குணநலன்களுடன் ஒப்பிடப்படுகிறது.

துலாம் - மிக்சர்: பல சுவைகளையும் சமநிலையையும் விரும்பும் துலாம் ராசியினருக்கு மிக்சர் ஒரு நல்ல பொருத்தமாகும். இனிப்பு, காரம், மொறுமொறுப்பு எனப் பல சுவைகள் ஒன்றாகக் கலந்திருப்பது இதன் சிறப்பம்சமாகும்.



மகரம் -தேங்குழல்: பாரம்பரியத்தையும் ஒழுங்கையும் மதிப்பவர்களாக மகர ராசியினர் பார்க்கப்படுகின்றனர். பல தலைமுறைகளாக பண்டிகைக் காலங்களில் தவறாமல் இடம்பெறும் தேங்குழல் இவர்களுக்கு ஏற்ற பலகாரமாகும்.



தனுசு -சீடை: புதிய அனுபவங்களையும் பலவிதமான சுவைகளையும் விரும்பும் தனுசு ராசியினருக்கு சீடை பொருத்தமாக இருக்கலாம். எளிமையான தோற்றம் கொண்டிருப்பினும், இது தனித்துவமான சுவையைக் கொண்டது.



மீனம்

ஓமப்பொடி: மென்மையான மனப்பான்மை மற்றும் உணர்வுகளுடன் தொடர்புடைய வர்களாக மீன ராசியினர் பாரம்பரியமாகக் கருதப்படு கின்றனர்.



தேநீருடன் அல்லது குடும்பக் கூடுகையில் ரசிக்கப்படும் ஓமப்பொடி இவர்களுக்கு மிகவும் ஏற்றது.







அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்!

ஹராப்பான் மற்றும் ஜசெக
முன்னிறுத்தும் நம்பிக்கை,
ஒற்றுமை மற்றும்
நல்லிணக்க உணர்வுடன்,
அனைத்து மலேசியர்களின்
வாழ்விலும் ஒளியும் வளமும்
பெருகட்டும்!



�வூ கா லியோங்
பேராக் ஆட்சிக்குழு உறுப்பினர்
பாசிர் பெடாமார் சட்டமன்ற உறுப்பினர்



ஙா கோர் மிங்
வீடமைப்பு ஊராட்சித் துறை அமைச்சர்
தெலுக் இந்தான் நாடாளுமன்ற உறுப்பினர்

MALAYSIA MADANI HARAPAN



பக்காத்தான் ஹராப்பான் வேட்பாளர்கள்

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



KAPTEN (B) MOHAMAD BIN JAAFAR
N.23 TELOK MAS

CALON NO. : 01

UMUR 66 TAHUN

PENDIDIKAN

1978
SEKOLAH MENENGAH JENIS KEBANGSAAN YOK BIN, BUKIT SERINDIT, MELAKA

1981
DIPLOMA SEKOLAH TEMPUR PEGAWAI MUDA

PENGLIBATAN

2026
SETIAUSAHA AMANAH NEGERI MELAKA

2015
PENGARAH BIRO MOBILISASI AMANAH NEGERI MELAKA

2015
TIMBALAN KETUA AMANAH KAWASAN KOTA MELAKA

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



ALONG FAIQ
N.26 SERKAM

CALON NO. : 02

UMUR 36 TAHUN

PENDIDIKAN

2008
GIAT MARA BUKIT KATIL

1997-2002
SEK REN KEBANGSAAN PULAI

2003-2007
SEK MEN SERI MAHKOTA

PENGLIBATAN

2000-KINI
GURU SILAT
PERSATUAN SENI SILAT LANGKAH BROMO

2020-KINI
AJK — PERSATUAN SENI SILAT GERAK TEPAT

2015 - 2016
PENOLONG PESURUH JAYA PENGAKAP NEGERI

2009 - 2012
NAIB PENGERUSI
MAJLIS GABUNGAN MELAKA

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



ESMA EAZREEN
N.25 RIM

CALON NO. : 01

UMUR 45 TAHUN

PENDIDIKAN

2022-KINI
UNIVERSITI UTARA MALAYSIA, IJAZAH SARJANA MUDA PENGURUSAN AWAM

1998
SEKOLAH MENENGAH TUN PERAK, JASIN (SPM)

PENGLIBATAN

2026
BENDAHARI, PANEL PENASIHAT
KLINIK KESIHATAN KEMENDOR

2025
NAIB KETUA WANITA NEGERI
PARTI KEADILAN RAKYAT NEGERI MELAKA CABANG JASIN

2025
KETUA CABANG
PARTI KEADILAN RAKYAT CABANG JASIN

2025
KETUA WANITA CABANG
PARTI KEADILAN RAKYAT CABANG JASIN

2025
KETUA BIRO KEBAJIKAN
MAJLIS PIMPINAN NEGERI (PKR) MELAKA

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



ALLEX SEAH
N.19 KESIDANG

CALON NO. : 02

UMUR 43 TAHUN

PENDIDIKAN

KOLEJ TUNKU ABDUL RAHMAN
DIPLOMA SAINS

UNIVERSITI TUNKU ABDUL RAHMAN
IJAZAH SARJANA MUDA KEJURUTERAAN SISTEM MAKLUMAT

PENGLIBATAN

ADUN KESIDANG
(2 PENGGAL) (2018- 2026)

SETIAUSAHA DAP MELAKA
(2022-KINI)

EXCO KERAJAAN NEGERI MELAKA
(2023 - 2026)

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



KHUZAIRE KAMAL
N.06 REMBIA

CALON NO. : 03

UMUR 42 TAHUN

PENDIDIKAN

2021 – 2023
DIPLOMA PENGURUSAN PERNIAGAAN KEJURUTERAAN, UNIVERSITI TEKNOLOGI MALAYSIA

AKADEMI LAUT MALAYSIA

SMK DATO' HAJI TALIB KARIM

SRK ALOR GAJAH 1

KERJAYA

USAHAWAN / AHLI PERNIAGAAN

PENGLIBATAN

2024 - KINI:
PENYELARAS PARTI KEADILAN RAKYAT
DUN REMBIA

2024 - KINI
TIMBALAN PENGERUSI MAJLIS PIMPINAN KEADILAN NEGERI MELAKA

2024
SETIAUSAHA MAJLIS PIMPINAN
KEADILAN NEGERI MELAKA

2024 - KINI
KETUA CABANG ALOR GAJAH

2018
NAIB KETUA AMK MELAKA

2018
KETUA AMK ALOR GAJAH

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



ASHRAF MINGHAT
N.09 DURIAN TUNGGAL

CALON NO. : 02

UMUR 55 TAHUN

PENDIDIKAN

2008 – 2009
UNIVERSITI PUTRA MALAYSIA (SARJANA PENDIDIKAN)

1994 – 1996
UNIVERSITI AL-AZHAR, MESIR (SARJANA MUDA PENGAJIAN ISLAM & BAHASA ARAB)

1991 – 1993
KOLEJ AGAMA SULTAN ZAINAL ABIDIN, KUALA TERENGGANU (DIPLOMA BAHASA ARAB DENGAN PENDIDIKAN)

PENGLIBATAN

MENJADI PENGHUBUNG ANTARA
RAKYAT DENGAN AHLI PARLIMEN ALOR GAJAH SERTA AGENSI KERAJAAN

2023-KINI
PENGERUSI AMANAH NEGERI MELAKA

2023-KINI
KETUA AMANAH KAWASAN ALOR GAJAH

2018-2020
SETIAUSAHA POLITIK
KETUA MENTERI MELAKA

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



HAKIMIN MOKHTAR
N.15 AYER MOLEK

CALON NO. : 02

UMUR 35 TAHUN

PENDIDIKAN

2008
SIJIL PELAJARAN MALAYSIA (SPM)

2011
DIPLOMA PENTADBIRAN AWAM UNIVERSITI TEKNOLOGI MARA

2014
SARJANA MUDA SAINS PENTADBIRAN (KEPUJIAN), UNIVERSITI TEKNOLOGI MARA

PENGLIBATAN

2026 - KINI
PEGAWAI PARLIMEN HANG TUAH JAYA

2024 - KINI
PENGURUS SYARIKAT ANITAR CERIA ENTERPRISE

2025-2026
AHLI MAJLIS, MAJLIS PERBANDARAN JASIN

2016-2024
EKSEKUTIF PERHUBUNGAN PERNIAGAAN
BANK SIMPANAN NASIONAL (BSN), CAWANGAN UTAMA MELAKA

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



AMINUDDIN JALIL
N.28 SUNGAI RAMBAI

CALON NO. : 02

UMUR 55 TAHUN

PENDIDIKAN

SEKOLAH DATUK ABDUL RAHMAN YAAKUB MERLIMAU
SIJIL TINGGI PELAJARAN MALAYSIA

SEKOLAH DATUK ABDUL RAHMAN YAAKUB MERLIMAU
SIJIL PELAJARAN MALAYSIA

KERJAYA

AHLI PERNIAGAAN

PENGLIBATAN

AJK KOPERASI TENAGA BAKTI

2025 – 2026
AJK BIRO PILIHAN RAYA NEGERI MELAKA

2025 - 2026
KETUA CAWANGAN / AJK CAWANGAN JASIN

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



LENG CHAU YEN
N.22 BANDAR HILIR

CALON NO. : 02

UMUR 42 TAHUN

PENDIDIKAN

IJAZAH BERSEKUTU
DENGAN PENGKHUSUSAN REKA BENTUK GRAFIK

PENGLIBATAN

2023 – KINI
KETUA DAP WANITA MELAKA

2025 – KINI
KETUA WANITA PAKATAN HARAPAN MELAKA

2026
AJK DAP WANITA KEBANGSAAN

2025-KINI
NAIB PENGERUSI DAP MELAKA

2019-2025
SETIAUSAHA PUBLISITI DAP MELAKA

2017-2019
PENOLONG SETIAUSAHA DAP MELAKA

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



KERK CHEE YEE
N.16 AYER KEROH

CALON NO. : 02

UMUR 34 TAHUN

PENDIDIKAN

IJAZAH SARJANA MUDA
PERDAGANGAN (PENGKHUSUSAN PERAKAUNAN DAN KEWANGAN), UNIVERSITI MELBOURNE, AUSTRALIA

PENGLIBATAN

2018 – KINI
ADUN AYER KEROH

2024 -2026
SETIAUSAHA PUBLISITI DAP MELAKA

2023-2026
TIMBALAN SPEAKER NEGERI MELAKA

2018 – 2020
EXCO KOMUNIKASI, MULTIMEDIA NGO, BELIA & SUKAN MELAKA

2017
SETIAUSAHA POLITIK KEPADA YB LIM KIT SIANG
AHLI PARLIMEN GELANG PATAH

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



AYU HAMZAH
N.27 MERLIMAU

CALON NO. : 02

UMUR 43 TAHUN

PENDIDIKAN

SARJANA PENGURUSAN (MASTER OF MANAGEMENT)
UITM SHAH ALAM
PENGIKTIRAFAN PEMBELAJARAN BERASASKAN PENGALAMAN TERDAHULU BAGI PENGANUGERAHAN KREDIT – PENTADBIRAN PERNIAGAAN.

DIPLOMA INDUSTRI KIMIA
UITM SHAH ALAM

SIJIL PELAJARAN MALAYSIA
SMK DANG ANUM MERLIMAU MELAKA

PENILAIAN MENENGAH RENDAH
SEK MENENGAH AGAMA MAHAD AL-EHYA EL KARIM TANJUNG BIDARA MELAKA

SEKOLAH RENDAH KEBANGSAAN
SEMPANG, MERLIMAU MELAKA

PENGALAMAN

KETUA WANITA
PARTI AMANAH NEGARA, MELAKA

KETUA WANITA AMANAH
KAWASAN JASIN

PENYELARAS AMANAH
DUN MERLIMAU

TIMBALAN PENGERUSI BIRO IT
ANGKATAN WANITA AMANAH NASIONAL -CAWANGAN MELAKA,

SUKARELAWAN
YAYASAN DAKWAH ISLAMIAH MALAYSIA

SUKARELAWAN
JABATAN KEBAJIKAN MASYARAKAT JASIN.

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



DATUK AZMAN ABIDIN
N.13 PAYA RUMPUT

CALON NO. : 03

UMUR 54 TAHUN

PENDIDIKAN

2023
SARJANA PENTADBIRAN PERNIAGAAN (PMBA), UNIVERSITI TEKNOLOGI MALAYSIA (UTM)

1998
DIPLOMA ANALISIS PELABURAN (DIIA), THE RESEARCH INSTITUTE OF INVESTMENT ANALYSTS MALAYSIA (KUALA LUMPUR STOCK EXCHANGE - BURSA MALAYSIA)

SEKOLAH MENENGAH KEBANGSAAN RAHMAT KUALA SUNGAI BARU MELAKA

PENGLIBATAN

2023 - 2026
SETIAUSAHA POLITIK
KEPADA PERDANA MENTERI MALAYSIA DATO' SERI ANWAR IBRAHIM

2018 - 2020
PEGAWAI TUGAS-TUGAS KHAS (PTTK)
KEPADA TIMBALAN MENTERI PENGANGKUTAN

2012 - 2014
SETIAUSAHA POLITIK
KEPADA MENTERI BESAR SELANGOR TAN SRI ABD KHALID IBRAHIM


1996-2023
REMISIER
KENANGA INVESTMENT BANK

PILIHAN RAYA NEGERI MELAKA

மலாக்கா மாநிலத் தேர்தல் 2026

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



AJUE SAHAT
N.05 TABOH NANING

CALON NO. : 01

UMUR 41 TAHUN

PENDIDIKAN

SIJIL PEGAWAI KESELAMATAN DAN KESIHATAN PEKERJAAN MALAYSIA
NIOSH (NATIONAL INSTITUTE OCCUPATIONAL SAFETY AND HEALTH)

EKSEKUTIF DIPLOMA DALAM
KESELAMATAN DAN KESIHATAN PEKERJAAI UITM

DIPLOMA KEJURUTERAAN AWAM
POLITEKNIK PORT DICKSON

PENGLIBATAN

2026 - KINI
PANEL PENASIHAT
KLINIK KESIHATAN LUBOK CHINA

2025 - 2026
TIMBALAN SPEAKER
ANGKATAN WANITA AMANAH NEGERI MELAKA

2026
KETUA AWAN MASJID TANAH

2025 - 2026
PANEL PENASIHAT
KLINIK KESIHATAN MASJID TANAH

2025-2026
SETIAUSAHA
PERSATUAN WARGA EMAS KLINIK KESIHATAN MASJID TANAH

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



MUKHLISUL MUBIN
N.01 KUALA LINGGI

CALON NO. : 01

UMUR 25 TAHUN

PENDIDIKAN

IJAZAH SARJANA MUDA
UNDANG UNDANG
UNIVERSITI KEBANGSAAN MALAYSIA

2019 (STPM)
SMK AGAMA SULTAN MUHAMMAD

2014-2018
SEKOLAH MENENGAH TAHFIZ CHENDERAH

PENGLIBATAN

SETIAUSAHA AGUNG
KESATUAN MAHASISWA UKM / MPP,

KETUA MAHASISWA
AMANAH NASIONAL

SETIAUSAHA AMANAH
CAWANGAN KAMPUNG PERMATANG

AJK PEMUDA AMANAH
NEGERI MELAKA

2023
JUARA PIDATO ANTARABANGSA
BAHASA MELAYU

2025
JUARA PIDATO ANTARABANGSA
MALAYSIA - JORDAN

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



JASON TZE-XI NATHAN
N.15 PENGKALAN BATU

CALON NO. : 03

UMUR 31 TAHUN

PENDIDIKAN

2021 - KINI
SIJIL TAHUNAN / SIJIL AMALAN GUAMAN, MAJLIS PEGUAM MALAYSIA

2025
IJAZAH SARJANA UNDANG-UNDANG (MELALUI PENYELIDIKAN)

2018
IJAZAH SARJANA MUDA UNDANG-UNDANG (KEPUJIAN)

PENGLIBATAN

JAN 2026 - KINI
PENGAMAL UNDANG-UNDANG KANAN
(SENIOR LEGAL ASSOCIATE)

NOV 2023 - FEB 2024
PENSYARAH SEPARUH MASA DAN TUTOR
HARTA INTELEK DAN PENGENALAN KEPADA UNDANG-UNDANG), MMU

2026 - KINI
BENDAHARI DAPSY MELAKA

2024 - KINI
AHLI MAJLIS EKSEKUTIF
KEBANGSAAN DAPSY

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



YUNAZRI MUSTAMIRI
N.02 TANJUNG BIDARA

CALON NO. : 01

UMUR 36 TAHUN

PENDIDIKAN

2025
IJAZAH SARJANA MUDA KELAS PERTAMA, MALAYSIA UNIVERSITY OF SCIENCE AND TECHNOLOGY

2013
SIJIL KEMAHIRAN MALAYSIA TAHAP 2 DAN 3, GRED A, NEGERI SEMBILAN SKILLS DEVELOPMENT CENTRE (NSSDC)

SEK. KEBANGSAAN SUNGAI TUANG

SEK. MENENGAH KEBANGSAAN RAHMAT

KERJAYA

JURUTERA PEMBUATAN AUTOMOTIF
KAYAKU SAFETY SYSTEMS MALAYSIA SDN. BHD.

PENGLIBATAN

SETIAUSAHA PENAJA
KEADILAN, MASJID TANAH

TIMBALAN BENDAHARI
AMK NEGERI MELAKA

BENDAHARI
AMK MASJID TANAH

BENDAHARI
PERTUBUHAN ASPIRASI KEBAJIKAN SINERGI

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



ADLY ZAHARI
N.17 BUKIT KATIL

CALON NO. : 01

UMUR 55 TAHUN

PENDIDIKAN

SEKOLAH MENENGAH TEKNIK MELAKA, BUKIT PIATU

IJAZAH SARJANA MUDA KEJURUTERAAN ELEKTRIK, UNIVERSITI TEKNOLOGI MALAYSIA (UTM)

PENGLIBATAN

AHLI DEWAN UNDANGAN NEGERI
N.17 BUKIT KATIL (2018-KINI)

NAIB PRESIDEN AMANAH
2021 - KINI

AHLI PARLIMEN P.135 ALOR GAJAH
2022 - KINI

TIMBALAN MENTERI PERTAHANAN
2022 - KINI

KERJAYA

JURUTERA UNIVERSITI MULTIMEDIA
1997–2000

JURUTERA MALAYSIA INTERNATIONAL SHIPPING CORPORATION (MISC)
2000–2005

MENCEBURI BIDANG PERNIAGAAN
BERMULA 2005

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



GINIE LIM
N.08 MACHAP JAYA

CALON NO. : 02

UMUR 45 TAHUN

PENDIDIKAN

2010 – 2011
UNIVERSITI OF SUSSEX UK (SARJANA PEMBANGUNAN)

2001 – 2004
UNIVERSITI SAINS MALAYSIA (USM)

SMK GAJAH BERANG

MELAKA GIRL HIGH SCHOOL

PENGLIBATAN

KETUA PENERANGAN WANITA PUSAT KEADILAN
EXCO WANITA PUSAT KEADILAN

2023 -2026
CEO INVEST MELAKA

2018-2020
EXCO KERAJAAN NEGERI MELAKA

2018-2021
ADUN MACHAP JAYA

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



DENESH
N.10 ASAHAN

CALON NO. : 02

UMUR 37 TAHUN

PENDIDIKAN

2025-2026
SARJANA PENTADBIRAN PERNIAGAAN (MBA), UNITAR UNIVERSITY COLLEGE, KUALA LUMPUR

2011-2013
DIPLOMA, KOLEJ PROFESIONAL DAN PENGURUSAN KLIA

2002-2006
SMK DATO DOL SAID (PMR, SPM)

PENGLIBATAN

KETUA MASYARAKAT INDIA DUN REMBIA
PARTI KEADILAN RAKYAT DUN REMBIA

KETUA DATA & AJK CABANG
PARTI KEADILAN CABANG ALOR GAJAH

NAIB KETUA AMK MELAKA
AJK MPN MELAKA
KETUA AMK CABANG
PARTI KEADILAN NEGERI

KETUA RANTING PEKAN REMBIA
PARTI KEADILAN CABANG ALOR GAJAH

AJK CABANG
PARTI KEADILAN CABANG ALOR GAJAH

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



JEGAN K.
N.07 GADEK

CALON NO. : 01

UMUR 45 TAHUN

PENDIDIKAN

IJAZAH SARJANA
KESUSASTERAAN TAMIL

STPM
SMK TUNKU BESAR TAMPIN

SMK TAMAN INDAH

PENGLIBATAN

KINI
PENGERUSI CAWANGAN DAP KUALA INA

2022–2024
SETIAUSAHA
MAJLIS PERUNDINGAN AGAMA NEGERI MELAKA

2014–2026
PENGELOLA PUSAT TUISYEN SISWAZAH NEGERI SEMBILAN

2023-2026
PENGERUSI
MALAYSIA HINDU SANGAM NEGERI MELAKA

2022–2026
TENAGA PENGAJAR PENDIDIKAN MORAL PLKN A'FAMOSA (JAYA GEMILANG)

2023-2025
PENGERUSI CAWANGAN PULAU SEBANG MALAYSIA HINDU SANGAM MELAKA

2018-2020
AHLI MAJLIS
MAJLIS PERBANDARAN ALOR GAJAH

2018-2020
PEGAWAI KHAS DUN GADEK

2008 – 2017
TENAGA PENGAJAR PENDIDIKAN MORAL
PUSAT SERENTI TAMPIN

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



MEJAR JAINI DIMON
N.03 AYER LIMAU

CALON NO. : 01

UMUR 59 TAHUN

PENDIDIKAN

DIPLOMA PENGURUSAN
UNIVERSITI TUN ABDUL RAZAK

SIJIL PELAJARAN MALAYSIA
SMK TUN ISMAIL

PENGLIBATAN

2024
PENGARAH STRATEGI
PARTI KEADILAN RAKYAT CABANG MASJID TANAH

2021
SETIAUSAHA
PERSATUAN VETERAN KOR KESIHATAN NEGERI MELAKA

2013 - 2017
PEGAWAI TADBIR
HOSPITAL ANGKATAN KOR KESIHATAN DIRAJA MALAYSIA

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



FARZANA HAYANI
N.14 KELEBANG

CALON NO. : 01

UMUR 26 TAHUN

PENDIDIKAN

2023
UITM SHAH ALAM

2020
UITM REMBAU

2017
SMJK TINGGI CINA MELAKA

PENGLIBATAN

2025-2026
PEGAWAI MEDIA
PEJABAT PERDANA MENTERI

2024-2025
PEGAWAI EKSEKUTIF PEJABAT SUPOL PERDANA MENTERI

2023-2024
PEGAWAI KHAS KEPADA SUPOL MENTERI PENDIDIKAN
KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



POO LONG SUAN
N.21 DUYONG

CALON NO. : 01

UMUR 43 TAHUN

PENDIDIKAN

IJAZAH SARJANA MUDA SAINS
PENGKHUSUSAN KIMIA GUNAAN
UNIVERSITI MALAYA

STPM
SMK TEMERLOH

SPM
SMK ABU BAKAR TEMERLOH

PENGLIBATAN

BEKAS AHLI MAJLIS
MAJLIS PERBANDARAN HANG TUAH JAYA

AHLI JAWATANKUASA BIRO ADUAN
DAP MELAKA

SETIAUSAHA
CAWANGAN WIDURI, DAP MELAKA

TIMBALAN KETUA KEMPEN
PILIHAN RAYA NEGERI 2021

TERLIBAT DALAM AKTIVITI POLITIK
SEJAK 2018

PILIHAN RAYA NEGERI MELAKA

HARAPAN MELAKA RUMAH KITA

PROFIL CALON



LOW CHEE LEONG
N.20 KOTA LAKSAMANA

CALON NO. : 01

UMUR 56 TAHUN

PENDIDIKAN

SMJK YOK BIN

SMK SERI KOTA

IJAZAH SARJANA MUDA
PENGURUSAN SUMBER MANUSIA (OUM)

PENGLIBATAN

2023 – 2026
TIMBALAN EXCO KEMAJUAN DESA, PERTANIAN DAN KETERJAMINAN MAKANAN MELAKA

2018 - 2020
EXCO KESIHATAN DAN ANTIDADAH MELAKA

SETIAUSAHA ORGANISASI
DAP MELAKA

PILIHAN RAYA NEGERI MELAKA

Nija Delights Studio

EST. 2012

Everything We Bake Is LOVE !

- Customised cake
- Premium cookies
- Skills training
- Corporate Desserts
- Malaysian Traditional kuih muih
- Personal and Group Baking Pastries Classes
- SLDN and HRDF Trainer
- Local Food and Western Food Catering services



Sarasvathe Suppaya @ Nija

019-240 5502

இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்!

SAIVAANIS

Est.1995

Fashion Family Lifestyle

All Under One Roof

Your *One Stop Destination* for Traditional, Contemporary and Everyday Needs





SAREES
TRADITIONAL & CONTEMPORARY



INDIAN CLOTHING
LEHENGAS • SUITS
MEN'S WEAR • KIDS WEAR



PRAYER ITEMS
TRADITIONAL ESSENTIALS FOR EVERY OCCASION



MINI MART
SNACKS • BEVERAGES
DAILY ESSENTIALS



BEAUTY & NAIL CARE
FACIAL • NAIL CARE
WAXING • EYELASH SERVICES
RELAXING FOOT SPA

No.1, Jalan 16, Selayang Baru,
68100 Batu Caves

03-61277140


இனிய
தீபாவளி
நல்வாழ்த்துகள்
இருள் நீங்கி
ஒளி பிறக்கும்
தருணம் இது
மனதில் நம்பிக்கை
விளக்கேற்றும்
டாக்டர் R. சிவபிரகாஷ்,
NAIB PRESIDEN MUDA
KETUA BAHAGIAN MUDA HULU SELANGOR
drsivaprakash_



தமிழ்த் திரையுலக வரலாற்றில் காலத்தால் அழியாத சாதனைகளைப் படைத்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் உழைப்பும், அர்ப்பணிப்பும் எத்தகையது என்பதற்கு 1968-இல் வெளியான 'குடியிருந்த கோயில்' திரைப்படத்தின் "ஆடலுடன் பாடலைக் கேட்டு ரசிப்பதிலேதான் சுகம் சுகம்..." என்ற பாடலே ஆகச் சிறந்த சான்றாகும். தமிழ் சினிமாவில் முதன்முதலாகப் பஞ்சாபி கலாச்சாரத்தின் அதிவேக 'பாங்க்ரா' நடனக் கலவையுடன் அமைக்கப்பட்ட இப்பாடலில், எம்.ஜி.ஆருடன் இணைந்து போட்டி போட்டு ஆடியவர் நாட்டியப் பேரொளி எல். விஜயலட்சுமி ஆவார்.



ஆடலுடன் பாடலைக் கேட்டு...

எம்.ஜி.ஆரின் அசாத்திய

நடன மேஜிக்



அடிப்படையில் ஒரு தேர்ந்த பரதநாட்டியக் கலைஞரான எல். விஜயலட்சுமி அவர்கள், பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் இப்பாடல் உருவான பின்னணி குறித்து வியக்கத்தக்க பல உண்மைகளைப் பகிர்ந்து கொண்டார்.

அந்த அதிவேகப் பாடலின் நடன அசைவுகளை வடிவமைப்பதற்காக மும்பையிலிருந்து 'சோப்ரா' என்ற ஒரு சீக்கிய நடன இயக்குநர் பிரத்யேகமாக வரவழைக்கப்பட்டிருந்தார். நடனக் கலையில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்த தனக்கே, அந்தச் சீக்கிய மாஸ்டர் சொல்லிக் கொடுத்த மிகக் கடினமான மற்றும் அதிவேகமான பாங்க்ரா நடன அசைவுகளைத் துல்லியமாகக் கற்றுக் கொண்டு ஆடுவதற்கு முழுமையாக ஒரு வார காலம் (7 நாட்கள்) தேவைப்பட்டதாக எல். விஜயலட்சுமி நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டிருந்தார்.



ஆனால், படப்பிடிப்புத் தளத்திற்கு வந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள், அந்தச் சீக்கிய நடன இயக்குநர் சொல்லிக் கொடுத்த அத்தனை கடினமான நடன ஸ்டெப்ஸ்களையும் ஒரே நாளில், அதுவும் ஒரே ஷாட்டில் ஆடும் அளவிற்குத் துல்லியமாகக் கற்றுக் கொண்டு, அசல் சீக்கியரைப் போன்றே கம்பீரமான உடலமைப்போடு அசாத்திய வேகத்துடன் ஆடி முடித்தார்.

ஒரு தேர்ந்த வட இந்திய நடனக் கலைஞரின் முன்னிலையில், தமிழ்நாட்டின் மக்கள் திலகம் காட்டிய அந்த அசாத்தியமான கிராஸ்பிங் பவர், சுறுசுறுப்பு மற்றும் உழைப்பைக் கண்டு ஒட்டுமொத்தப் படப்பிடிப்புத் தளமே மெய்சிலிர்த்து நின்றதாக எல். விஜயலட்சுமி அந்தப் பேட்டியில் பெருமிதத்துடன் குறிப்பிட்டிருந்தார். வெள்ளித்திரையில் இன்றும் ஒளிரும் அந்தத் தீபாவளி நாயகனின் உழைப்பைப் பறைசாற்றும் உன்னதமான திரை வரலாறு இது!


TAFADHDAL SECURITY SDN BHD
இனிய
தீபாவளி
வாழ்த்துகள்
தீப ஒளி தீபாவளி திருநாளாம் தித்திக்கும் நாளாம் திகைக்கவைத்த திருநாளாம்
புதுவித ஆடைகளை உடுத்தி பூரிக்கவைக்கும் தீபாவளி வெடிகள் வெடித்து
வெற்றிக்களிப்பில் கொண்டாடும் தீபாவளி தீப ஒளி தீபாவளி இருளை அகற்றி
இன்பத்தை அள்ளித் தந்திடும் நம் நாட்டில் உள்ள அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துகள்.
TAFADHDAL SECURITY SDN BHD
No. C-1-3, 3rd Floor, Jalan BK 5A/2B,
Bandar Kinrara, 47180 Puchong,
Selangor Darul Ehsan.
டத்தோ பத்தமந்தன் @ சுரேஷ்


GFS
இனிய தீபாவளி
நல்வாழ்த்துகள்
அன்புடன் வாழ்த்தும்
DATUK DR VISVANATHAN
DATIN PUNITHA
இயக்குநர்கள்
GLOBAL FORCE SECURITY SDN BHD
DPP TRADING SDN BHD



100 குழந்தைகளின் முகங்களில் தீபாவளி ஒளி!

‘அன்பு ஒளி 2026’

வழியாக அன்பையும் ஒற்றுமையையும் விதைத்த கிளப் மீடியா திசைகள்

நாட்டின் முன்னணி தமிழ் ஊடகங்களில் ஒன்றான திசைகளின் ஆதரவுடன், கிளப் மீடியா திசைகள் ஏற்பாட்டில் நடைபெற்ற ‘அன்பு ஒளி 2026’ தீபாவளி விருந்து உபசரிப்பு நிகழ்வு, மூன்று கருணை இல்லங்களைச் சேர்ந்த 100 குழந்தைகளின் பங்கேற்புடன் கோலாகலமாக நடைபெற்றது. தீபாவளியின் மகிழ்ச்சியை ஆதரவற்ற குழந்தைகளுடன் பகிர்ந்துகொள்ளும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு, விருந்து, கலை நிகழ்ச்சிகள், அன்பளிப்புகள் எனப் பல சிறப்பு அம்சங்களுடன் அன்பும் மனிதநேயமும் நிறைந்த கொண்டாட்டமாக அமைந்தது.



ஷா ஆலம், கோத்தா கெமுனிங் சமூக மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில், குழந்தைகளுக்குத் தீபாவளிப் புத்தாடைகள், பள்ளிப் புத்தகப் பைகள், இனிப்பு பலகாரங்கள் உள்ளிட்ட பல்வேறு அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. வண்ணமயமான தீபாவளிக் கொண்டாட்டத்துடன் குழந்தைகளின் முகங்களில் மகிழ்ச்சியை மலரச் செய்த இந்நிகழ்வு, பண்டிகையின் உண்மையான மகத்துவம் பகிர்ந்துகொள்வதிலும் பிறரது மகிழ்ச்சியில் பங்கெடுப்பதிலும் அடங்கியிருக்கிறது என்பதை எடுத்துரைத்தது.

- Pertubuhan Kebajikan Kanak-Kanak Istimewa Klang Selangor,
- Pertubuhan Kebajikan Kanak-Kanak Selangor,
- Pertubuhan Kebajikan Waja home Malaysia

ஆகிய மூன்று கருணை இல்லங்களைச் சேர்ந்த 100 குழந்தைகள் இந்நிகழ்வில் பங்கேற்றுத் தீபாவளி அன்பளிப்புகளைப் பெற்றுக்கொண்டனர்.

கிளப் மீடியா திசைகள் தொடங்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு, திசைகளின் நிர்வாக இயக்குநர் ஜி.கே. பசுபதி மற்றும் கண்மணி ஆகியோரின் மேற்பார்வையில் நடைபெற்றது. ஊடகப் பணிகளுக்கு அப்பால் சமூகத்தின் மீதும் அக்கறை செலுத்தும் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கொண்டாட்டம், குழந்தைகளின் நலனையும் மகிழ்ச்சியையும் முன்னிறுத்திய சமூகப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாக அமைந்தது.



கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் சம்புநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இந்தியச் சமூகத்தின் உருமாற்றத்திற்கான பிரிவான மித்ராவின் தலைமை இயக்குநர் கே. ரவீந்திரன் நாயர், கிள்ளான் ரோட்டரி கிளப்பின் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் ரவிராஜ், ஷா ஆலம் நகராண்மைக் கழக உறுப்பினர் யோகேஸ்வரி சாமிநாதன், வழக்கறிஞர் பரம், சுங்கை பூலோ சிறைச்சாலை அதிகாரி பி. விஷ்ணு, சிலம்பக் கழக மகாகுரு ஆர். தாமோதரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

திசைகளின் கெடா, பினாங்கு மாநில நிருபர் ஹேமா எம்.எஸ். மணியத்தின் விறுவிறுப்பான அறிவிப்புடன் நிகழ்ச்சி தொடங்கியது. விருந்தினர்களின் வரவேற்பு, குழந்தைகளுக்கான கலை நிகழ்ச்சிகள், விருந்து உபசரிப்பு, அன்பளிப்புகள் வழங்குதல் என அடுத்தடுத்து இடம்பெற்ற அம்சங்கள் நிகழ்வை உற்சாகமான கொண்டாட்டமாக மாற்றின.

ஒற்றுமையே சமூக முன்னேற்றத்தின் அடித்தளம்

நிகழ்வுக்குத் தலைமை தாங்கிச் சிறப்புரையாற்றிய கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் சம்புநாதன், இந்தியச் சமூகம் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமானால், பரஸ்பர மோதல்களைக் கைவிட்டு ஒற்றுமையுடன் முன்னேற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

சமூக ஊடகங்களிலும் செய்திகளிலும் ஒருவரையொருவர் குறை கூறுவதையும் தாழ்த்திப் பேசுவதையும் தவிர்த்து, சமூகத்தின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் நல்ல முயற்சிகளிலும்





செயல்பாடுகளிலும் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

தீபாவளியை 'Deepavali' என்றா அல்லது 'Divali' என்றா அழைப்பது என்பது குறித்த சர்ச்சைகள் அதிகமாகப் பேசப்படும் நிலையில், சமூகத்துக்கு உண்மையில் நன்மை பயக்கும் செயல்கள் போதிய கவனத்தைப் பெறுவதில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். தீபாவளியின் அடிப்படைச் செய்தியான நன்மையைப் போற்றுவதும் தீமையைக் கைவிடுவதும் நமது அன்றாட வாழ்க்கையிலும் பிரதிபலிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தொடர்ந்து பேசிய அவர், கிளப் மீடியா திசைகள் தனது முதலாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில், கருணை இல்லக் குழந்தைகளை மையப்படுத்தி இத்தகைய சிறப்பான நிகழ்வை ஏற்பாடு செய்திருப்பதைப் பாராட்டினார். குழந்தைகளுக்குத் தீபாவளி அன்பளிப்புகளை வழங்கி அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டதற்காகத் திசைகளின் நிர்வாக இயக்குநர் ஜி.கே. பசுபதி மற்றும் கண்மணி ஆகியோருக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

கருணை இல்லக் குழந்தைகளின் கல்வி உள்ளிட்ட எதிர்கால முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய எந்தவொரு ஆதரவையும் வழங்கத் தாம் தயாராக இருப்பதாகவும் பிரகாஷ் சம்புநாதன் குறிப்பிட்டார். குழந்தைகளின் வளர்ச்சிக்கும் கல்விக்கும் ஆதரவளிப்பது அவர்களது எதிர்காலத்துக்கு வழிவகுப்பதுடன், சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாகவும் அமைகிறது என்பதை அவரது கருத்துகள் எடுத்துக்காட்டின.

இதனைத் தொடர்ந்து, பிரகாஷ் சம்புநாதனுக்குத் திசைகளின் நிர்வாக இயக்குநர் ஜி.கே. பசுபதி நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ் ஊடகத் துறையில் புதிய உயரங்களை எட்டுவதே இலக்கு

நிகழ்வில் தலைமையுரையாற்றிய திசைகள் தலைமை ஆசிரியர் இ.எம். சாமி, பத்திரிகைத் துறையில் தமக்குள்ள நீண்டகால அனுபவத்தைக் குறிப்பிட்டு, தமிழ் ஊடகத் துறையில் திசைகளை முன்னணி ஊடகமாக வளர்த்தெடுப்பதுடன், திசைகள் வெளியிடும் மாதாந்திர சஞ்சிகையையும் நாட்டில் முன்னுதாரணமான வெளியீடாகப் பரிணமிக்கச் செய்வதே தங்களின் நோக்கம் என்று தெரிவித்தார்.

ஊடகத்தின் வளர்ச்சி என்பது செய்திகளை வெளியிடுவதுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது; அது சார்ந்திருக்கும் சமூகத்தின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் உணர்ந்து செயல்படுவதிலும் அதன் முக்கியத்துவம் அடங்கியிருக்கிறது. அந்த வகையில், கிளப் மீடியா திசைகள் முன்னெடுத்துள்ள 'அன்பு ஒளி 2026' போன்ற முயற்சிகள், ஊடகப் பணிக்கும் சமூகப் பொறுப்புக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தும் முயற்சிகளாக அமைகின்றன என்று இ.எம்.சாமி தமது உரையில் வலியுறுத்தினார்.















கலை நிகழ்ச்சிகளால் களைகட்டிய கொண்டாட்டம்

குழந்தைகளின் மகிழ்ச்சியை மையமாகக் கொண்டு நடைபெற்ற 'அன்பு ஒளி 2026' நிகழ்வில், விருந்து உபசரிப்புடன் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பாடல்கள், பரதநாட்டியம், நடன நிகழ்ச்சிகள், சிலம்பாட்டம், சிறார்களை மகிழ்விக்கும் மாயாஜால நிகழ்ச்சி ஆகியவை நிகழ்வுக்குக் கூடுதல் உற்சாகத்தை அளித்தன.

நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் பனிக்கூழ் வழங்கப்பட்டது. பிரதான மேடையில் சிறப்பு விருந்தினர்கள், கிளப் மீடியா திசைகள் சார்பில் குழந்தைகளுக்குத் தீபாவளிப் புத்தாடைகள், பள்ளிப் புத்தகப் பைகள் உள்ளிட்ட அன்பளிப்புகளை வழங்கினர். அன்பளிப்புகளைப் பெற்றுக்கொண்ட குழந்தைகளுக்கு, தீபாவளிக் கொண்டாட்டத்தில் தங்களுக்கும் முக்கிய இடமுண்டு என்ற மகிழ்ச்சியை வழங்கும் வகையில் இந்நிகழ்வு அமைந்தது.

நிகழ்வில் கலந்துகொண்ட பெரியவர்களுக்கும் வாசனைத் திரவியங்கள் வழங்கப்பட்டன. குழந்தைகளையும் பெரியவர்களையும் உள்ளடக்கிய இந்த ஏற்பாடுகள், பங்கேற்ற அனைவருடனும் பண்டிகை மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் முயற்சியாக அமைந்தன.



நிகழ்ச்சிக்கு ஆதரவளித்தவர்களுக்கு நன்றி

‘அன்பு ஒளி 2026’ நிகழ்வு சிறப்பாக நடைபெறுவதற்குப் பல்வேறு தரப்பினரும் தங்களது ஆதரவையும் பங்களிப்பையும் வழங்கினர்.

நிகழ்வின் ஏற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஷா ஆலம் நகராண்மைக் கழக உறுப்பினர் யோகேஸ்வரி சாமிநாதனுக்கும், வாசனைத் திரவியங்களை அன்பளிப்பாக வழங்கிய மூடா கட்சியின் உதவித் தலைவர் டாக்டர் சிவப்பிரகாசுக்கும், பெண்களுக்கான புத்தாடைகளை வழங்கிய Dz Plus Size Collection நிறுவனத்தின் தெய்வானை முனியாண்டிக்கும், பலகாரங்களை வழங்கி உபசரித்த சூதைய னுநடபாவள ளுவரனடி நிறுவனத்தின் சூதைய-வுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் பாடல்களை வழங்கிய கூ டுயஒ ஹஎநரேந ஆயடயலளயை நிறுவனத்தைச் சேர்ந்த Thila Laxshman மற்றும் முடிடன சுயத, பரதநாட்டியம் மற்றும் நடன நிகழ்ச்சிகளை வழங்கிய Esha Fine Arts நிறுவனத்தின் ஷாமலா ஜெயபாலன் ஆகியோருக்கும் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டன.

குழந்தைகளுக்கான பள்ளிப் புத்தகப் பைகளை அன்பளிப்பாக வழங்கிய KK Super Mart, சிலம்பாட்டத்தைச் சிறப்பாகக் காட்சிப்படுத்திய Persatuan Kesenian Adithada Silambam Malaysia அமைப்பின் மகாகுரு Damodaran Ramachandran, மாயாஜால நிகழ்ச்சியை வழங்கிய அகிலன் ஆகியோரின் பங்களிப்புகளும் பாராட்டப்பட்டன.

அதேபோல், குழந்தைகளுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்கிய Sinaran Seri Cahaya Enterprise நிறுவனத்தின் சுரேஸ் கிருஷ்ணன், விருந்து உபசரிப்பை வழங்கிய KPR Catering நிறுவனத்தின் கண்ணுசாமி, , Sai Vaanis (M) Sendirian Berhad நிறுவனத்தின் பார்வதி ஆகியோருக்கும் கிளப் மீடியா திசைகள் ஏற்பாட்டுக் குழுவினர் நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

பலரின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் ஒன்றிணைந்ததன் மூலம், குழந்தைகளுக்கான தீபாவளிக் கொண்டாட்டம் மகிழ்ச்சியுடனும் சிறப்புடனும் நடைபெற்றது.

















































அன்பைப் பகிர்ந்தால் பெருகும் தீபாவளி ஒளி

தீபாவளி என்பது புத்தாடைகள் அணிந்து, இனிப்புகளைப் பகிர்ந்து, உறவுகளுடன் மகிழ்ச்சியாகக் கொண்டாடும் பண்டிகை மட்டுமல்ல. மகிழ்ச்சியைப் பிறருடன் பகிர்ந்துகொள்வதும், உதவி தேவைப்படுவோருக்கு ஆதரவாக இருப்பதும் அதன் மனிதநேயச் சிறப்பை வெளிப்படுத்துகின்றன.

அந்த அடிப்படையில், மூன்று கருணை இல்லங்களைச் சேர்ந்த 100 குழந்தைகளுடன் தீபாவளி மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்ட 'அன்பு ஒளி 2026', கிளப் மீடியா திசைகளின் முதலாம் ஆண்டு நிறைவில் இடம்பெற்ற சமூக அக்கறைமிக்க முயற்சியாக அமைந்தது.

குழந்தைகளின் மகிழ்ச்சிக்கும் அவர்களது எதிர்கால முன்னேற்றத்துக்கும் சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் ஒன்றிணைந்து பங்களிக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டிய இந்நிகழ்வு, தீபாவளியின் ஒளி இல்லங்களையும் வீதிகளையும் மட்டுமல்லாமல், மனித உள்ளங்களையும் ஒளிரச் செய்ய வேண்டும் என்ற செய்தியையும் உணர்த்தியது.

தீபாவளி என்றாலே புத்தாடைகள், இனிப்புகள், குடும்பச் சந்திப்புகள் மட்டுமல்ல; தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் பண்டிகைக் கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாகிவிட்டன. அந்த வகையில், இவ்வாண்டு தீபாவளியை முன்னிட்டு ஆஸ்ட்ரோ ஒளிபரப்பும் சிறப்பு நிகழ்ச்சிகள், குடும்ப உறவுகளின் ஆழமான உணர்வுகள் முதல் அதிரடியான விளையாட்டுப் போட்டிகள், மர்மம் நிறைந்த திகில் காட்சிகள் வரை பல்வேறு அனுபவங்களை வழங்கத் தயாராகியுள்ளன.

இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்ற கலைஞர்களுடன் பேசும்போது, திரையில் ரசிகர்கள் காணப் போகும் பொழுதுபோக்குக்குப் பின்னால் இருக்கும் உழைப்பு, சவால்கள், படைப்பாற்றல் ஆகியவை வெளிப்படுகின்றன. வயதான ஒருவரின் மனதில் புதைந்திருக்கும் ஏக்கத்தைப் பேசும் 'அடைக்கலம்', நட்சத்திரங்களைப் பல்வேறு சவால்களுக்கு உட்படுத்தும் 'சவாலே சமாளி', தொழில்நுட்பச் சிறப்புகளுடன் உருவாகியுள்ள 'மாய ஓவியன்' என ஒவ்வொன்றும் தனித்துவமான அனுபவத்தைத் தருகின்றன. இந்தப் படைப்புகளில் தங்களின் பங்களிப்பைப் பற்றி கலைஞர்களே மனம் திறக்கிறார்கள்.



வசதிகளைச் செய்து கொடுத்தாலும் முதியவர்களின்

மன ஏக்கத்தை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறதா?

தீபாவளி விருந்தில் உணர்வுகளும் சவால்களும்;

புதுமை படைக்கும் ஆஸ்ட்ரோ கலைஞர்கள்

லோகன்

ஆஸ்ட்ரோ தீபாவளிச் சிறப்புத் தொலைக்காட்சிப் படம்: ''அடைக்கலம்

எனது பெயர் லோகன். ஆஸ்ட்ரோவின் தீபாவளிச் சிறப்புத் தொலைக்காட்சிப் படைப்பான ''அடைக்கலம்'' படத்தில் முதியவர் அடைக்கலமாக நானே நடித்திருக்கிறேன். தீபாவளிக்கு மறுநாள் நண்பகல் ஒளிபரப்பாகவுள்ள இந்தப் படைப்பு, குடும்ப உறவுகளை மையமாகக் கொண்டது.



நம்மைச் சுற்றி அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எனப் பல முதியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கிறோம். அவர்களை அக்கறையுடன் கவனித்துக் கொள்கிறோம். ஆனால், இவற்றையெல்லாம் செய்துவிட்டால் அவர்களுடைய மனம் நிறைந்துவிடுமா? அவர்களுக்குள் சொல்ல முடியாமல் புதைந்திருக்கும் ஏக்கங்கள் இருக்கலாம். அவற்றை எப்படிச் சொல்வது என்று தெரியாமலும் இருக்கலாம். அந்த ஏக்கம் என்ன, அது ஏன் உருவாகிறது, அதை எப்படிப் புரிந்து கொண்டு சரி செய்வது என்பதைத்தான் இந்தக் கதை பேசுகிறது. ''அடைக்கலம்'' என்ற முதியவரின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களே கதையை நகர்த்துகின்றன. அவருக்கு ஒரு கைப்பேசி கிடைக்கிறது. அதன் வழியாகப் புதிய அறிமுகங்களும் நட்புகளும் உருவாகின்றன. தொழில்நுட்பத்தின் வழியாக உருவாகும் இந்த நட்பு அவருடைய வாழ்க்கையை எப்படியெல்லாம் மாற்றுகிறது என்பதுதான் கதையின் சுவாரசியமான பகுதி. அதேவேளையில், இந்த மாற்றங்கள் குடும்ப உறவுகளில் விரிசல்களையும் ஏற்படுத்துகின்றன. அந்தப் பிரச்சினைகளை அவர்கள் எப்படிக் கையாள்கிறார்கள் என்பதையும் படம் எடுத்துரைக்கிறது.

இந்தக் கதாபாத்திரத்தில் நடிப்பது எனக்குப் பெரிய சவாலாக இருந்தது. அடைக்கலத்தின் மன ஏக்கத்தைப் பார்வையாளர்களால் உணர முடியும் வகையில் வெளிப்படுத்த வேண்டும். அந்த உணர்வு சரியாகச் சென்றடையாவிட்டால், கதையின் நோக்கமும் பார்வையாளர்களைச் சென்றடையாது. எழுத்தாளர் கதையை அழகாக உருவாக்கியிருந்தார். இயக்குநரும் அதைத் திரையில் கொண்டு வரக் கடுமையாக உழைத்தார். அந்த முயற்சிக்கு என்னுடைய நடிப்பும் சரியான பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தேன். இது முழுக்கச் சோகமான கதையல்ல. நவரசங்களும் இடம் பெற்றுள்ளன. குடும்ப உறவுகளில் விரிசல் ஏற்படும்போது இயல்பாகவே சோகம் வரும். ஆனால், தொடர்ந்து சோகத்தையே காட்டினால் பார்வையாளர்களுக்குச் சலிப்பு ஏற்படும். அதனால், கருத்துகளை இயல்பாகக் கதைக்குள் இணைத்திருக்கிறோம். கைப்பேசியைப் பெற்ற பிறகு அடைக்கலத்தின் குணத்தில் ஏற்படும் மாற்றங்கள் சிரிப்பையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும். வயதான ஒருவர் மீண்டும் குழந்தையைப் போல மாறி, தனது விருப்பப்படி நடந்து கொள்ளும்போது உருவாகும் நகைச்சுவையான தருணங்களும் படத்தில் இருக்கின்றன. அதற்குப் பின்னர் எதிர்பாராத திருப்பங்களும் வருகின்றன.

என்னுடன் டர்ஷாமினி கேசவன், கார்த்திக் ஜேய், ஸ்ரீ ஜெகநாத், தியாகு, நவீன் ஹோ, கிரீஸ் உள்ளிட்ட கலைஞர்களும் நடித்துள்ளனர். கதாநாயகக் கதாபாத்திரத்தைச் சுற்றியுள்ள மற்ற பாத்திரங்களும் கதையின் உணர்வுகளையும் நகைச்சுவையையும் வெளிப்படுத்துவதற்கு முக்கியமானவை.

முதியவர்களுக்கு நாம் கொடுக்கும் வசதிகளுக்கு அப்பால், அவர்களின் மனதுக்குள் இருக்கும் ஏக்கத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே இந்தப் படைப்பின் அடிப்படை உணர்வு. பார்வையாளர்கள் கதையை ரசிப்பதுடன், தங்கள் குடும்பத்தில் இருக்கும் முதியவர்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

நட்சத்திரங்களின் அலங்காரத்தைக் கடந்து, அவர்களின் இயல்பான முகத்தைப் பார்க்கலாம்

தீபாவளி என்றாலே பாடல், நடனம், கலை நிகழ்ச்சிகள் என்று வழக்கமான பொழுதுபோக்குகளைப் பார்வையாளர்கள் எதிர்பார்ப்பார்கள். ஆனால், இந்த முறை 'சவாலே சமாளி' நிகழ்ச்சி அவர்களுக்கு வித்தியாசமான அனுபவத்தைத் தரும். அதிக ஆற்றல், பரபரப்பு, எதிர்பாராத சவால்கள் என முழுக்க முழுக்க உற்சாகம் நிறைந்த ஒரு விளையாட்டு நிகழ்ச்சியாக இதை உருவாக்கியிருக்கிறோம்.

ஒரு மணி நேரச் சிறப்பு நிகழ்ச்சியான இதில், ஆஸ்ட்ரோவின் நான்கு தொடர்களிலிருந்து தலா ஓர் ஆண், ஒரு பெண் என மொத்தம் எட்டு கலைஞர்கள்



பங்கேற்கிறார்கள். இதயத்தைத் தொட்ட கதை, காதல் அன்ஃபாலோ, மாறா, மனம் ஆகிய தொடர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்கள், பல்வேறு சவால்களையும் வினாடி



வினாக்களையும் எதிர்கொள்கிறார்கள். வெற்றியாளர்களுக்காகப் பத்தாயிரம் ரிங்கிட் ரொக்கப் பரிசும் காத்திருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் என்னை மிகவும் கவர்ந்த விஷயம், நமது கலைஞர்களை முற்றிலும் வேறொரு கோணத்தில் பார்ப்பதுதான். பொதுவாக அவர்களை அழகான ஆடைகளிலும்

ஒப்பனையிலும் பாடுவது, நடனமாடுவது, நடிப்பது என்று பார்த்திருப்பீர்கள். ஆனால், இங்கே அவர்கள் விழுகிறார்கள், வியர்க்கிறார்கள், அழுக்காகிறார்கள், சவால்களைச் சமாளிக்க முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களின் இயல்பான முகபாவங்களையும் உணர்வுகளையும் பார்க்க முடியும். திரையில் எப்போதும் அழகாகத் தோன்றும் நட்சத்திரங்கள், இந்த நிகழ்ச்சியில் தங்களுடைய உண்மையான இயல்பைக் காட்டுகிறார்கள்.

மலாக்காவில் இரண்டு நாட்கள் படப்பிடிப்பு நடைபெற்றது. வெயிலில் நின்று சவால்களைச் செய்தபோது நாங்களே மிகவும் சோர்வடைந்துவிட்டோம். போட்டியாளர்களுக்கு இது எவ்வளவு கடினமாக இருந்திருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனாலும், அனைவரும் முழு ஈடுபாட்டுடன் பங்கேற்றார்கள். தங்களால் முடிந்ததைவிடவும் அதிகமாக முயற்சி செய்தார்கள். சில சவால்கள் மிகவும் கடினமாக இருந்ததால், படப்பிடிப்பின் பெரும்பகுதியை முதல் நாளிலும், கூடுதல் நேரம் தேவைப்பட்ட சவாலை இரண்டாவது நாளிலும் படமாக்கினோம்.

இந்த நிகழ்ச்சியின் தயாரிப்பும் வழக்கமான ஒன்றல்ல. பல கேமராக்கள், கோப்ரோ, போட்டியாளர்களின் பார்வையில் காட்சிகளைப் பதிவு செய்யும் கேமராக்கள், ட்ரோன் எனப் பல தொழில்நுட்ப வசதிகள் பயன்படுத்தப்பட்டன. பெரிய தயாரிப்புக் குழு இணைந்து பணியாற்றியது. இதன் மூலம் போட்டியாளர்களின் ஒவ்வோர் எதிர்வினையையும் பார்வையாளர்களுக்குக் கொண்டு செல்ல முடிந்தது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு இப்படியொரு நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவது எனக்கும் மகிழ்ச்சியாக இருந்தது. குறிப்பாக, போட்டியாளர்கள் கடினமான சவால்களை எதிர்கொண்டு தவிப்பதைப் பார்ப்பது சுவாரசியமாக இருந்தது. சிலர் அழும் அளவுக்குச் சவால்கள் கடினமாக இருந்தன. அவர்கள் அவ்வளவு தீவிரமாக முயற்சி செய்வதைப் பார்த்து மகிழ்ந்தேன். அதே நேரத்தில், அந்தச் சவால்களை நானே செய்ய வேண்டியதில்லை என்பதில் நிம்மதியும் இருந்தது! என்னுடன் ராகா வானொலியின் உதயா உள்ளிட்ட இணைத் தொகுப்பாளர்களும் பங்கேற்றனர். வானொலி உலகில் புகழ்பெற்ற உதயா மீண்டும் ஒரு விளையாட்டு நிகழ்ச்சியில் இணைந்தது இந்த அனுபவத்தை மேலும் சிறப்பாக்கியது. கலைஞர்களின் போட்டி மனப்பான்மை, நகைச்சுவையான தருணங்கள், எதிர்பாராத திருப்பங்கள் எனப் பார்வையாளர்கள் ரசிப்பதற்கு நிறைய இருக்கிறது.

தீபாவளி மதிய உணவை முடித்துவிட்டு, குடும்பத்துடன் அமர்ந்து ரசிக்க ஏற்ற நிகழ்ச்சியாக இது இருக்கும். கலைஞர்களின் இன்னொரு முகத்தைப் பார்க்க விரும்பும் ரசிகர்கள் தவறவிடக்கூடாத நிகழ்ச்சி இது!

நிகழ்ச்சித் தொகுப்பாளர் Saint T.F.C
ஆஸ்ட்ரோ தீபாவளிச் சிறப்பு விளையாட்டு நிகழ்ச்சி: “சவாலே சமாளி”

சாதாரணத் தொலைக்காட்சிப் படமாக இல்லாமல்,

திரையரங்குப் படத்தின் பிரம்மாண்டத்தைத் தர விரும்பினோம்



’மாய ஓவியன்’ ஆஸ்ட்ரோவுக்காகத் தீபாவளியை முன்னிட்டு பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட திகில் கலந்த மர்மத் திரைப்படம். இதில் நான் ஓர் ஓவியராக நடித்திருக்கிறேன். அந்த ஓவியர் வரையும் ஒவ்வோர் ஓவியமும் அவரது கண் முன்னால் உயிர்பெற்று உருவமாக மாறுகிறது. இந்தக் கற்பனையை மையமாகக் கொண்டு, மர்மம், அமானுஷ்யம், திகில், எதிர்பாராத திருப்பங்கள் எனப் பல அம்சங்களுடன் கதையை உருவாக்கியிருக்கிறோம்.

கதையின் மையத்தில் ஒன்பது வயதுச் சிறுமியான காஜல் ஷிவானி ஏற்றுள்ள மர்மமான பாத்திரம் இருக்கிறது. அவளுக்கும் பிரம்மா என்ற ஓவியருக்கும் என்ன தொடர்பு என்பதே பார்வையாளர்களைத் தொடர்ந்து சிந்திக்க வைக்கும் கேள்வி. இந்தப் படத்தில் கணினி வரைகலை, காட்சித் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல அம்சங்களைப் பயன்படுத்தியிருக்கிறோம்.

தீபாவளிக்காக ஒரு சாதாரணக் குடும்பக் கதையை உருவாக்கிவிட்டுப் போய்விடலாம் என்று நாங்கள் நினைக்கவில்லை. இன்றைய பார்வையாளர்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர், உலகத் தரத்திலான பல்வேறு திரைப்படங்களையும் இணையத் தளங்களில் பார்க்கிறார்கள். குறுகிய காணொளிகளைக்கூடத் தாண்டிச் செல்லும் காலத்தில், அவர்களை ஒரு முழுநீளப் படத்தின் முன் அமர வைப்பதற்கு வித்தியாசமான அனுபவத்தை



வழங்க வேண்டும். அதனால்தான் இந்தப் படத்தின் தொழில்நுட்பத் தரத்திலும் காட்சிகளின் பிரமாண்டத்திலும் அதிக கவனம் செலுத்தினோம். கார் கவிழ்ந்து உருண்டு செல்லும் விபத்துக் காட்சி போன்றவற்றை நம்பகத்தன்மையுடன் உருவாக்குவதற்கு உழைத்தோம். திரையரங்குகளில் வெளியாகும் திரைப்படத்துக்கு இணையான முயற்சியை இந்தத் தொலைக்காட்சிப் படத்திலும் மேற்கொண்டிருக்கிறோம்.

இந்தப் படத்தில் பல உள்ளூர் கலைஞர்கள் நடித்துள்ளனர். நித்யா ஸ்ரீ கதாநாயகியாகவும், காஷ்னா நாயுடு மனநல மருத்துவராகவும் நடித்துள்ளனர். நகைச்சுவைப் பகுதிகளை தெர்போ கானா கவனித்துள்ளார். பாலன் ஹசான், டெனேஸ் குமார், யுவராஜ் கிருஷ்ணசாமி உள்ளிட்ட பலரும் இதில் பங்களித்துள்ளனர். இந்தப் படத்தின் மற்றொரு முக்கிய அம்சம் காஜலின் நடிப்பு. அவர் ஏற்றுள்ள திகில் பாத்திரத்துக்காகப் பல மணி நேரம் ஒப்பனை செய்ய வேண்டியிருந்தது. செயற்கை ஒப்பனையைப் பொருத்துவதற்கே இரண்டு முதல் மூன்று மணி நேரம் தேவைப்படும்; அது சுமார் ஆறு மணி நேரம் மட்டுமே நீடிக்கும். இவ்வளவு சிரமங்களுக்கு மத்தியிலும், பகல் இரவு பாராமல் அவர் தனது பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்திருக்கிறார். கதை தீவிரமான மர்மப் போக்கில் நகர்ந்தாலும், பார்வையாளர்களுக்கு ஓர் இடைவெளியைத் தரும் வகையில் லேசான நகைச்சுவையும் இடம் பெறுகிறது. மர்மம், திகில், தொழில்நுட்பம், நடிப்பு எனப் பல அம்சங்கள் இணைந்திருப்பதால், பார்வையாளர்களுக்கு வித்தியாசமான அனுபவம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

நடிகர்- இயக்குநர்
காஸ் வில்லன்

முதல் நாள் அழுதேன்; பின்னர் அந்தப் பேய் ஒப்பனையுடனேயே நடிக்கப் பழகிவிட்டேன்



வணக்கம்! என் பெயர் காஜல். ஆஸ்ட்ரோவின் தீபாவளிச் சிறப்புத் தொலைக்காட்சிப் படமான ‘‘மாய ஓவியன்’’ படத்தில் நான் நடித்திருக்கிறேன். இதில் தேவியின் கதாபாத்திரத்தில் நடித்துள்ளேன். அவள் ஒரு சிறுமி; பின்னர் பேயாக மாறுகிறாள். படத்தின் பெரும்பாலான காட்சிகளில் நான் பேய் வேடத்தில்தான் வருவேன். இந்தப் படத்தில் நடிப்பது எனக்கு மறக்க முடியாத அனுபவம். மொத்தம் பத்து நாட்கள் படப்பிடிப்பு நடைபெற்றது. அதில் சுமார் ஏழு நாட்கள் பேய் வேடத்திலும, ம்தமுளள மூன்று நாட்கள் சாதாரண ஒப்பனையுடனும் நடித்தேன். பேய் வேடத்துக்கான ஒப்பனை மிகவும் தடிமனாகவும் சிக்கலாகவும் இருக்கும். முகத்திலும் உடலிலும் பல பொருட்களைப் பொருத்துவார்கள். அவற்றையெல்லாம் ஒரே நேரத்தில் அணிந்து கொண்டு நடிப்பது எனக்குக் கொஞ்சம் சிரமமாக இருந்தது. அதுமட்டுமல்ல, என் உடல் முழுவதும் தேன் மற்றும் காபி கலந்த செயற்கை ரத்தத்தையும் பூசுவார்கள். அது மிகவும் ஒட்டிக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட ஒப்பனையுடன் நீண்ட நேரம் இருக்க வேண்டியிருக்கும். ஆரம்பத்தில் எனக்கு மிகவும் வித்தியாசமாக இருந்தது. முதல் நாள் படப்பிடிப்பின்போது எனக்குப் பழக்கமில்லாத அந்த ஒப்பனையையும் உடையையும் பார்த்து அழுதுவிட்டேன். என்ன செய்வது என்று தெரியாமல் கொஞ்சம் பயமாகவும் இருந்தது.

ஆனால், ஒவ்வொரு நாளும் படப்பிடிப்புக்குச் செல்லச் செல்ல எனக்குப் பழகிவிட்டது. ஒப்பனையும் உடையும் அணிந்து கொண்டு நடிப்பதில் கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை வந்தது. ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றிய விஷயங்களைக்கூடப் பின்னர் என்னால் சமாளிக்க முடிந்தது.

ஆஸ்ட்ரோ தீபாவளிச் சிறப்புத் திரைப்படம்: மாய ஓவியன்

காஜல்ஷிவானி
ஆஸ்ட்ரோ தீபாவளிச் சிறப்புத் தொலைக்காட்சிப் படம்: மாய ஓவியன்

Arun®
simply delicious.....

SPICES
SINCE 1983

Wishing you a
Happy Deepavali

இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்



Published by: Eye Mag Publication Sdn Bhd (1397097-V) No 73-2, Jalan Prima SG 3, Prima Sri Gombak, 68100 Batu Caves, Selangor, Tel: 03-61811414
Email: Admin@thisaigalnews.com Printed by Twinstar Synergy Sdn Bhd (987235X) Lot 2A, Jalan 13/2A, 46200 Petaling Jaya, Selangor.